கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்கிற வரிகள் மனதை நெருடியது.

தன்னைச் சுற்றிய ஊர் மக்களின் நலனுக்காய் அயராது பாடுபடும் நீலகண்ட சிவனையும், அதில் சுற்றும் சளைக்காத பொன்னியையும் காணும்போது மனம் பரவசம் கொள்கிறது. ஐந்து வருடங்களாய் கணவன் மனைவி உறவு கொள்ளாமல் ஊருக்கு உழைக்கின்ற விஷயத்தை உங்களால் மட்டுமே உணரவும், உணரச் செய்யவும் முடியும் பாலா. கணவனுக்கு மனைவி, காதலி மட்டுமல்ல நண்பியும் கூடத்தான் என்கிற விஷயத்தை மீண்டும் ஒருமுறை அழுத்தமாய் உணர்த்தியிருக்கிறீர்கள்.

பொறாமை கொண்ட கும்பலையும், அதைச் சமாளிக்க உள்ள சவால்களையும் ஒவ்வொரு மனிதனும் கண்டு எச்சரிக்கை கொள்ள இனிய பட்சிணி உதவி செய்கிறது.

உங்களுடைய நாவல்களைப் படிக்கப் படிக்க அதில் வரும் கதாபாத்திரங்களைப் போல நல்ல பண்புகளோடு நிறைவான வாழ்வை வாழும் ஏக்கம் கூடுகிறது. இயல்பான வாழ்வில் ஏதோ குறைவதாய் மனதில் சலனம் வருகிறது. சீனிவாசனும், அவன் மனைவியும் கூடுகையில் பட்சனும், பட்சிணியும் தங்கள் ஏக்கம் தீர்வதைக் காணும்போது தங்கள் நாவல்களைப் படிக்கப் படிக்க என் ஏக்கத்தில் கொஞ்சம் நிறைவதாய் ஒரு பரவசம். வார்த்தைகளுக்கு வலிமையுண்டென்பது 'உங்களை ஒத்தவர்களுக்கு மட்டுமே பொருந்தும் பாலா. என்னைப் போன்ற சாதாரணமானவர்களுக்கு அல்ல.

உங்களுடைய நாவல்களில் தன் வாழ்வின் பாதைக்கான வெளிச்சத்தைக் காணும் ஆயிரக் கணக்கான இளைஞர்களில் ஒருவன் என்கிற வகையில் நீங்கள் பல்லாண்டு வாழ மனதார இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

க. விஜய்குமார்
6/122, கெம்பநாயக்கன்பாளையம்
கே.ஜீ.பாளையம் (அஞ்சல்)
பொகளூர்
கோவை - 641 697





தூங்கப் போவதற்கு சற்று முன்பு கலைந்து கிடக்கும் சமையலறையை ஒழுங்குபடுத்தி நீர் விட்டு அலம்பி, வாஷ் பேசினை நன்கு துடைத்து தரையை ஈர மாப்பால் சுத்தமாக்கி பளிச்சென்று மறுநாள் காலை நுழையும் போது நேர்த்தியாய் கண்ணில் படும்வரை ஒப்பனை செய்யும் நேரம்தான்.

ஒரு கெட்டிக்காரப் பெண்ணுக்கு சமையலறையை சுத்தமாக வைத்துக் கொள்ள நிச்சயம் தெரிந்திருக்கும். சமையலறையை சுத்தமாக வைத்திருந்தால்தான் மறுநாள் காலை உள்ளே நுழையும்போது வேலை செய்கிற சுறுசுறுப்பு இருக்காது வேலை செய்கிற வேதனை இல்லையெனில் நாம் செய்கிற வேலை நன்கு அமையும். சமைக்கிற பண்டம் சுவையாக இருக்கும். சமைக்கிற பண்டம் சுவையாக இருந்தால்தான் சாப்பிடும் மனிதர்களுக்கு கூட இரண்டு பிடி சாப்பிடத் தூண்டும். கூட ஆசையோடு இரண்டு பிடி சாப்பிடுகிறார்களே அந்த உணவுதான் உண்மையான ஆரோக்கியம். நிஜமான சத்து. அந்த திருப்தியில் சாப்பிட்டவர்கள் சமைத்தவர்களை பாசத்தோடு பார்ப்பார்கள். அன்போடு பேசுவார்கள். மிகப் பிரியமாக நடத்துவார்கள். மிகப் பிரியமாக நடத்துவதால் இன்னும் கவனமாக வேலை செய்யத் தூண்டும். மறுபடியும் கவனமாக வேலை செய்யத் தூண்டுகிறதென்றால் சமையலறை சுத்தம் இன்னும் அதிகமாகும்.

சமையலறையில் வாசனை ஊதுபத்தி கொளுத்தி வைத்து ஒரு நிரந்தர நறுமணம் இருக்கும்.

சமையலறையில் அன்னபூரணி படம் வைத்து, அதற்கு மாலை போட்டு வழிபடத் தோன்றும். சமையலறையில் பாத்திரங்களை வரிசையாய் அடுக்கி, யார் வந்தாலும் அட என்று வியந்து சந்தோஷமாய் பார்க்க வைக்கும். இந்த சூழ்நிலை அமைப்பு கவனமாய் சமைக்கத் தூண்டும். வைத்த இடத்தில் வைத்த பொருள் இருப்பதால் ஒரு நொடி பிசகாது அடுப்பில் ஏற்றுவதும் இறக்குவதும் நடக்கும்.

எனவே, அரை வேக்காடாக எந்த சாமானும் எந்த சமையலும் இருக்காது. காந்தலாக எந்த பதார்த்தமும் போகாது. அப்படி போகாது மிகச் சரியான திட்டத்தில் உணவு இருக்க, சாப்பிடுபவர்கள் கூட இரண்டு பிடி சாப்பிடுவார்கள். அந்த இரண்டு பிடிதான் ஆரோக்கியம். மிகுந்த சத்து. அதுதான் குடும்பத்தின் ஆதாரம். இது ஒரு அழகான அன்பான சுழற்சி.

எனவே ஒரு நாளின் முடிவும் தருவாயில், வேறு எந்த வேலையும் செய்யாமல் தொலைக்காட்சி பெட்டி முன்



உட்கார்ந்து கொண்டு தலையில் அடித்துக் கொண்டு அழாமல், வாயைப் பொத்திக் கொண்டு விம்மாமல் சமையலறையை மிக நேர்த்தியாக வைக்கிறதை முக்கியமான விஷயமாய் நிர்மாணம் செய்து விடுவாள்.

மறுநாள் காலை சமையலறையில் கால் வைக்கும்போது, கால் பிசுபிசுவென்று ஒட்டக்கூடாது. ஒரு புளித்த நாற்றமும் வரக்கூடாது. சமையலறையில் நிச்சயமாய் ஒட்டடைகள் தொங்கக்கூடாது. பாத்திரங்கள் கைமாறி இருக்கக்கூடாது. சுத்தியும், அரிவாள்மனையும், இடுக்கியும் கரண்டிகளும் ஒரு வரிசையில் அடுக்கப்பட்டிருக்க வேண்டும். கண்ணாடி டம்ளர்கள் ஒரு பக்கமாகவும், எவர்சில்வர் டம்ளர்கள் ஒரு பக்கமாகவும், அணிவகுத்து நிற்க வேண்டும். அதே மாதிரி டப்பாக்களில் எல்லா தானியங்களும் வரிசையாக போட்டு வைக்கப்பட்டிருக்க வேண்டும். அரிசி டிரம் நிறைந்திருக்க வேண்டும். வாஷ் பேசினில் வாசனை உருண்டைகள் போடப்பட்டிருக்க வேண்டும்.

சமையல் மேடைக்கு கீழே கேஸ் சிலிண்டர் வைக்கிற இடம் சுத்தமாய் இருக்க வேண்டும். ஏர் பிரஷ்னர் மாட்டப்பட்டிருக்க வேண்டும். வாரத்திற்கு ஒருமுறை அந்த இடத்தையும் குனிந்து ஒட்டடை அடித்து சுத்தம் செய்ய வேண்டும்.

சமையலறையில் பூச்சிகள் வரக்கூடாது. கரப்புகள் நடமாடக்கூடாது. பல்லி இருக்கக்கூடாது. இருந்தால், எப்பாடு பட்டாவது விரட்டி விட வேண்டும். எறும்புகள் வருவதற்கு கூட அனுமதி இல்லை. எல்லாம் இறுக்கமாய் அழுத்தமாய் மூடப்பட்டிருக்க வேண்டும். எதுவும் சிதறி இருக்கக்கூடாது. எதுவும் தேவையற்று இருக்கக்கூடாது. தேவையில்லாத பண்டங்களை உடனுக்குடன் அப்புறப்படுத்தி விட வேண்டும்.

காய்கறியாக இருந்தால் மாட்டுக்குக் கொடுத்துவிட வேண்டும். சாப்பிட வேண்டாமென்று நினைத்த இனிப்புகள் தின்பண்டங்களாக இருந்தால், வேலைக்காரிக்கும் அவள் குழந்தைகளுக்கும் சற்றும் தயங்காமல் வழங்கி விட வேண்டும். கெட்டுப் போகும்வரை காத்திருந்து விட்டு பிறகு மற்றவர்களுக்கு கொடுப்பது மிகப் பெரிய பாவம்.

ஒரு வீட்டில், பத்மவாசன் வரைந்த அன்னபூரணி படம் சமையலறையில் மாட்டியிருப்பதைப் பார்த்து விட்டு, அதைக் கேட்டு வாங்கி ஒரு காப்பி எடுத்து சட்டம் போட்டு தன் வீட்டிலும் மாட்டி வைத்தாள். தினமும் அதற்கு பூ போட்டாள்.

எட்டு மணிக்கு சாப்பிட உட்கார்ந்து எட்டரை மணிக்குள் முடித்து, எட்டே முக்காலுக்குள் சமையலறையை மட மடவென்று சுத்தம் செய்து, ஒன்பது மணிக்கு ஒரு முறை நறுவிசாய் மேற்பார்வை பார்த்து, அன்னபூரணி படத்திற்கு ஊதுபத்தி ஏற்றி வைத்து விட்டு, நாளை சமையல் நன்றாக இருக்க வேண்டுமென்று இன்றே வேண்டிக் கொண்டு சமையலறையை விட்டு வெளியே வந்து ஒரு முறை தொலைவிலிருந்து பார்த்து சந்தோஷப்பட்டு, ஹாலுக்கு வருவது ஒரு சுகமான விஷயம்.

அப்படி சமையலறையில் மேடை பெருக்கிக் கொண்டும், பாத்திரங்களை அடுக்கிக் கொண்டிருக்கும் பொழுதும் மனம் வேறு ஒரு குதூகலத்தில் ஈடுபடும்.

இரவு உடைகளைத் தளர்த்திக் கொண்டு புருஷனுக்கு அருகே உட்கார்ந்து கொண்டிருக்கும் போது, அவன் என்ன பேசுவான், எது பற்றி பேசுவான், எப்படிப் பேசுவான் என்று மனம் கணக்குப் போடும்.

நேத்திக்கே காயப்போட்டோம். இன்னிக்கு சின்னு சொல்லணும். தினம் ஆடினா நல்லாருக்காது. நாலு நாளைக்கு ஒரு தடவைதான் நல்லாருக்கும் என்று நேரடியாகவும் மறைமுகமாகவும் சொல்லி, வேறுவிதமாகப் பேச்சு திசைமாற்றி, மும்முரமாய் முயலும்போது வேணாமே என்று கெஞ்சி அவனை தூங்க வைத்து விடுவாள்.

இரண்டு நாள் அப்படி தூங்கியவன் மூன்றாம்நாள் மிக வேகமாகவே இருப்பான். இன்று நான்கு நாட்கள் ஆகிவிட்டது. பிற்பகலிலேயே முரண்டு பிடிக்க ஆரம்பித்து விட்டான்.

ஏதோ ஒரு விவரம் கேட்டபோது 'எனக்குத் தெரியாது' என்று வேகமாக பதில் சொன்னான்.

'எதுக்கு கோவப்படுறீங்க' என்று கேட்டபோது, ஏதோ வெறுப்பா இருக்கு என்று பதில் சொன்னான்.

அவனுக்கு என்ன வெறுப்பென்று அவளுக்குத் தெரியும். அந்த வெறுப்பை எப்படி நீக்குவதென்றும் அவள் அறிவாள். இந்த இரவில் எப்படியும் அவளை தின்றுவிட வேண்டும் என்பதற்காகவே இந்த பகலிலேயே அவன் சண்டை ஆரம்பிக்கிறான் என்பதை அவள் புரிந்து கொண்டாள். மெல்ல அருகே போய் நின்று "என்ன ரொம்ப ஜாஸ்தி தான் வெறுப்பா" என்று கேட்டாள்.

அவன் தளரத் துவங்கியது அவள் உடம்பிலிருந்து தெரிந்தது. ஆனால் மறுபடியும் சட்டென்று கூர்மையாகி



தன்னை இறுக்கிக் கொண்டான்.

"நிறைய வேலை இருக்கு. தயவு செய்து தொந்தரவு பண்ணாதே. போய்த் தொலை." என்று கத்தினான்.

அந்தக் கோபத்தில் பொய் இருந்தது.

"எனக்கு கூட நிறைய வேலை இருக்குங்க. வேலை செய்யவே முடியலை. உடம்புக்கு வேற கஷ்டமா இருக்கா. அதனால வீட்டுக்கு முன்னாடியே போய் படுத்து தூங்கிறப் போறேன்" என்று சொன்னதும் திடுக்கிட்டான்.

"என்ன உடம்புக்கு."

"ஒண்ணுமில்லே. ஏதோ அலுப்பாயிருக்கு."

"சும்மா இதே தினம் சொல்லின்னு இரு. உனக்கு கொழுப்பாயிடுச்சு நாயே" என்று மறுபடியும் கத்தினான்.

"எனக்கு உடம்புக்கு அலுப்புனா உங்களுக்கு என்ன பண்ணுது. ஒரு மனுஷிக்கி உடம்புக்கு வரக்கூடாதா."

"நீ வேணுன்ட்டாலும் என்னை வஞ்சனை பண்றடி. சும்மா கெஞ்சணும்னு நினைக்கிற. அப்படித்தானே" என்று அடிக்குரலில் உறுமலாய்க் கேட்டான்.

"எதுக்கு சொல்றீங்க. எனக்கு ஒண்ணும் புரியலியே" அவள் அப்பாவியாய்க் கேட்டாள்.

அவன் இப்பொழுது நிஜமாகவே கோபமானான். கடையை விட்டு எழுந்திருந்து வெளியே போனான். வாசலுக்குப் போய் ஒரு சிகரெட் பற்ற வைத்துக் கொண்டான்.

அவள் பிடிவாதம் பிடிக்கும்போது, அவளுக்குப் பிடிக்காத காரியம் செய்வதை அவன் மேற்கொள்வது வழக்கம். அவளுக்கு சிகரெட் பிடிப்பது பிடிக்காது.

'என்னை வெறுப்பேத்துற இல்லே. நான் உன்னை வெறுப்பேத்துறேன்' என்று நீளமான ஃபில்டர் சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டு, நிதானமாய் புகை விட்டான். திரும்பி ஒருமுறை அவளைப் பார்த்தான். வேறு யாரோ வர அவர்களோடு பேசிக் கொண்டே கடை வாசலில் சிகரெட் பிடிக்கத் துவங்கினான்.

"ஏங்க இங்க நின்னு பிடிக்கிறீங்க. உள்ள உட்கார்ந்து ஃபேனுக்கு கீழே ஆனந்தமா பிடிக்க வேண்டியதுதானே."

"இல்லீங்க. கடைக்குள்ள பிடிக்கிறதில்ல. சில கஷ்டமர்ஸுக்கு பிடிக்கும். சில கஸ்டமர்ஸுக்கு பிடிக்காது. கடையில பிடிக்க ஆரம்பிச்சிட்டோம்னாக்கா... அடிக்கடி பிடிக்கத் தோணும். இப்படி வெளியே வந்துதான் பிடிக்கணும்னாக்கா கொஞ்சம் குறையும்."

"ஒரு நாளைக்கு எத்தனை சிகரெட் பிடிப்பீங்க."

"ஜாஸ்தி இல்லீங்க. ரெண்டோ, மூணோ. சிலநா பிடிக்கக்கூட மாட்டேன்" என்று அவன் பதில் சொன்னா

"விட்டுருங்கய்யா. அந்த பழக்கத்தை நிறுத்திரு ரெண்டு மூணு பிடிக்கிறதுன்னா சட்டுனு நிறுத்திரலாம். அ ரெண்டு மூணு சிகரெட் பாதிப்பை எதுக்கு ஏற்படுத்திக்குவானேன்" வந்தவர் ஆறுதலாகச் சொன்னா

"நிறுத்தணும்னா எந்த செகண்டும் நிறுத்திடுவே ஆனா சில சமயம் மனசுக்குள்ள ஒரு குழப்பம், ஒ வேதனை. என்னடா அடுத்தபடி செய்யறதுன்னு ஒரு தவி ஏன் இப்படி எல்லாரும் ஏமாத்துறாங்களேன்னு ஒரு கோப அப்படி வரும்போது.. ஒரு சிகரெட் பத்தவச்சா கொஞ்ச ஆறுதலா இருக்கும்."

"ச்சு..ச்சு. வாஸ்தவம். எனக்கு ரொம்பப் புரியுது நீங்க சொல்றது. அந்த மாதிரி நேரத்துக்கு சிகரெட்டு மாதி சந்தோஷமான விஷயம் வேற எதுவும் கிடையாது" வந்தவ ஆமோதிக்க, அவன் திரும்பி வெற்றிப் புன்னகையோ அவளைப் பார்த்தான்.

வாசலில் சைக்கிள் ரிக்‌ஷா கிரீச்சிட்டது. குழந்தை திவ்யா பள்ளிக்கூட யூனிஃபாமில் துள்ளி குதித்துக் கீழே இறங்கினாள். ஒன்பது வயதிற்கு நல்ல வளர்த்தியாக இருந்தாள். இறங்கி நடந்து வந்து கதிரேசன் வயிற்றில் நச்சென்று முட்டினாள். அவளை இறுக்கிக் கட்டிக் கொண்டான். நகர்ந்து கடைக்குள் வந்தாள். அம்மாவுக்கு எதிரே வந்து பையை முதுகிலிருந்து அவிழ்த்து தரையில் போட்டாள்.

"என்னா இருக்கு தின்றதுக்கு" என்று பரபரத்தாள்.

"உனக்கு என்ன வேணும் சொல்லு. நான் தரேன்" நிர்மலா திவ்யாவைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு கொஞ்சினாள்.

பேச்சுகள் எல்லாம் திவ்யாவை நோக்கி இருந்தாலும், செய்திகள் அவனுக்குப் போய்க் கொண்டிருந்தன.

"உனக்கு சாக்லெட் வேணுமா."

"ஹாய் குடு."

"சாக்லெட் வேணுன்னா வாசல்ல நின்னு சிகரெட் பிடிக்குதே அது. அதுக்கிட்டருந்து அந்த சிகரெட்ட பிடுங்கிரு. நா சாக்லெட் தரேன்."

"அய்யோ... அது கத்தும்" திவ்யா பதிலுக்கு சொன்னாள்.



"போய் சொல்லு. சிகரெட் பிடிச்சா உடம்புக்கு கெடுதல். உடனே நிறுத்தினா சாக்லெட் தாரேன். இல்லே சாக்லெட் கிடையாதுன்னு சொல்லு."

"அதுக்கும் சாக்லெட் வச்சிருக்கியா."

"உனக்கு மட்டும் குடுத்தா போதுமாடி. அது பாவம் இல்லே. அதுக்கும் சாக்லெட் இருக்கு. சாக்லெட் தருவேன்னு சொல்லு" என்று உரத்தக் குரலில் சொல்ல, அவன் திரும்பிப் பார்த்து மறுபடியும் புகைக்கத் துவங்கினான்.

"ஹலோ, குண்டப்பா" திவ்யா ஓடி வந்து அவன் காலைக் கட்டிக் கொண்டாள்.

"நீ சிகரெட் பிடிக்கிறதை நிறுத்தினியானா சாக்லெட் தருவாங்களாம்."

"உங்கம்மா சாக்லெட் யாருக்கு வேணும். எனக்கு சாக்லெட் வாங்க முடியாதா. ஊர்ல எங்க போனாலும் சாக்லெட். உங்கம்மா சாக்லெட்ட... 'உங்கமாக்கிட்டயே வச்சுக்கச் சொல்லு எனக்கு தேவை இல்லைன்னு சொல்லு"

"என்னம்மா குண்டப்பா கத்துது."

திவ்யா பிடித்த பிடியை விடாமல் அம்மாவைப் பார்த்துக் கேட்டாள்.

"அது எங்க போய் சாக்லெட் வாங்கும். சமர்க்கட்டு எமோச்சு மிட்டாயின்னு ஏதாவது வாங்கின்னு வந்து வயித்தால போவும். கழியும். நா வச்சிருக்கிறது ஏ கிளாஸ் இம்போர்ட் சாக்லெட். வேணுமா வேணாமா."

"ஏகிளாஸ் சாக்லெட் வேணுமா வேணாமா." என்று குழந்தை உட்பொருள் தெரியாமல் அவனை உலுக்கிக் கேட்டது.

அவன் கடைசி இழுப்பை முடித்து சிகரெட்டை கீழே போட்டு அணைத்தான்.

"ஹா.. உள்ள வந்துருச்சம்மா. குண்டப்பா வந்துருச்சு" என்று திவ்யா கத்தினாள். "எனக்கு சாக்லெட் குடு" என்று கை நீட்டினாள்.

அவளுக்கு ஒரு பட்டை காட்பரீஸ் சாக்லெட் நிர்மலா கொடுக்க, வாங்கிப் பிரித்து கொண்டு டி.வி.யில் சேனல்கள் நகர்த்தி படம் பார்க்க ஆரம்பித்தாள்.

"உனக்கு சாக்லெட் வேணாமா."

"சரிதான் போடி" கதிரேசன் மறுபடியும் உறுமினான்.

"சரிதான் போடின்னா."

"இன்னிக்கு நாங்க சம்மர்கட் சாப்பிட போறேம்.

சாக்லெட் வேணாம்."

"போயேன்... போயி சாப்பிட்டேன். எங்கயாவது தின்னூட்டு இங்க வராதே."

"இதே வாடையில நானாவது கடையில ஒரு கம்மனாட்டு இருக்கு நாலு மாசமா கூப்பிடுது நான்தான் அய்யய்ய அப்படின்னு சும்மா ஒதுங்கியிருக்கேன். இன்னைக்கு நானா போய் அந்த கம்மனாட்டுகிட்டே பேசப் போறேன்" என்று சவ ஆட்டிச் சொன்னான்.

டெலிபோனை எடுத்தான். ஏதோ எண்களை அழுத்தினான். "ஹலோ நான்தாங்க பேசறேன். என்ன ரொம்ப பிஸியா இருக்கீங்களா" என்று கேட்டான்.

எதிர்முனையில் ஏதோ பதில் சொல்வது கேட்டது.

நிர்மலா சற்று அதிர்ச்சியானாள். என்ன செய்வது என்று [illegible] யோசனை செய்தாள்.

"பிசியா இருந்தீங்களா வந்து பேசலாமேன்னு பார்த்தேன். எனக்கொண்ணும் இங்க வேலை இல்லீங்க. [illegible]. யாரும் இருக்காங்களா.. சரிங்க நான் அப்புறம் வாரேன்" என்று சொல்லி போனை வைத்தான்.

"யாரோ யாரோ சாப்பிட்டுட்டிருக்காங்களாம். அவங்க சாப்பிட்ட பிறகு என்னை வரச் சொல்லுச்சு. நான் போய் சாப்பிட்டு வந்திருறேன். கம்மனாட்டு நல்லாருக்கும். அது ஒரு மந்திரி பேட்டை என்ன செய்யறே."

நிர்மலாவுக்கு முகம் சிவந்தது.

அது மாநகராட்சியால் வரிசையாக கட்டப்பட்ட இரண்டடுக்குக் கடைகள். கதிரேசன் அங்கு ட்ராவல்ஸ் நடத்தி வந்தான். அவனிடம் மூன்று அம்பாஸடர் கார்கள் இருந்தன. ஒரு மாருதி வேன் இருந்தது. அது தவிர வெளி உலகத்தில் அவனுக்கு நல்ல தொடர்பு இருந்தது.

கதிரேசன் பேசுவதற்கு இனிமையானவன். எளிமையானவன். திறமையானவன். மனிதர்களை எடை போடுவதில் வல்லவன். வேகமாய் வாடிக்கையாளர்களை இழுக்கின்ற திறமை உடையவன். வாக்கு தவறாமல் இருப்பதற்கு எல்லா முயற்சிகளையும் உண்மையாக செய்பவன். இதனால் ட்ராவல்ஸ் வியாபாரம் நன்கு செழித்தோங்கி வளர்ந்தது. வீட்டு டெலிபோன் நம்பரும் கொடுத்து இருபத்து நான்கு மணி நேரமும் சேவை செய்யப்படும் என்று அறிவித்திருந்தான். நிர்மலாவுக்கும் பதில் சொல்லக் கற்றுக் கொடுத்திருந்தான். அவன் இல்லாதபோது பதில் சொல்லவும் கணக்கு வழக்குகளை சரி



பார்க்கவும் ஒரு வயதான மேனேஜரை நியமித்திருந்தான். எனவே, கேட்ட கேள்விக்கு பதில் சொல்லக்கூடிய ஒரு ட்ராவல்ஸாக உடனே, உதவிக்கு வரும் ஒரு கம்பெனியாக அது சிறப்புற்றிருந்தது.

இரண்டு மாதம் முன்பு துக்கச் செய்தி வந்து ஒரு வாடிக்கையாளர் அவனை போன் செய்து எழுப்பியபோது, சற்றும் முகம் கோணாமல் வண்டி ஏற்பாடு செய்வதற்கு முயன்றான். அவனுடைய வண்டி இருந்தது. டிரைவர் அப்பொழுதுதான் மது அருந்தி படுத்திருந்தார். மது அருந்தியவரை அவர்களுடன் அனுப்ப அவனுக்கு இஷ்டமில்லை. வெவ்வேறு இடங்களில் போன் செய்து டிரைவர் இருக்கிறாரா என்று கேட்க, அரைமணி நேர விசாரிப்பில் எவரும் தென்படவில்லை.

அவர்களோ பரபரத்தார்கள். அழுது கொண்டிருந்தார்கள்.

ஒரு திடீர் சாவு என்பதாய் அவனுக்கு புரிந்து விட்டது. எனவே, சற்றும் தயங்காது ஒரு மாற்றுடை எடுத்துக் கொண்டு நிர்மலாவிடம் விடைபெற்றுக் கொண்டு, நடுநிசியில் வண்டி எடுத்து, வாடிக்கையாளர்களை ஏற்றிக் கொண்டு ஐந்தரை மணி நேரத்தில் திருச்சிராப்பள்ளியை அடைந்தான்.

மாடியிலிருந்து தவறி விழுந்து இறந்த பெண். தற்கொலை என்று போலீசார் சந்தேகப் பட்டார்கள். ஆஸ்பத்திரியில் பிரச்சினை செய்தார்கள்.

அந்த சாதாரண குடும்பம் அவர்களை சமாளிக்கத் தெரியாமல் அலைமோதியது.

வேட்டியை மடித்துக் கொண்டு கதிரேசன் களத்தில் இறங்கினான்.

சகல விஷயங்களும் திரட்டிக் கொண்டு சம்பந்தப்பட்ட போலீஸ் அதிகாரிகளையும் ஆஸ்பத்திரி அலுவலர்களையும் பார்த்தான். சிறிய தொகையை அன்பளிப்பாகக் கொடுத்தான். ஆறு மணி நேரத்தில் இறந்தவரைக் கொண்டு வந்து வீட்டில் போட்டான். அந்த வீட்டில் அழுகை சத்தம் அதிகமாயிற்று. சமாதானப்படுத்தினான். உடனடியாக தகனத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் அவனே அந்த ஊர் ஆட்களை வைத்துக் கொண்டு செய்தான். மறுநாள் அவர்கள் ஊர் திரும்பும்போது துக்கத்தை முற்றிலும் மறந்து வழி முழுவதும் அவனைப் பாராட்டிக் கொண்டு வந்தார்கள்.

வீட்டு வாசலில் நின்று நிர்மலாவை அழைத்து மகா

உத்தமமான புருஷன். இவன் மிக நன்றாக இருக்க வேண்டும். எங்கள் ஆபத்துக் காலத்தில் வீட்டில் ஒருவனாய் நின்று எங்கள் துக்கச் சுமையை தூக்கினவன். மிகவும் உன்னதமான வாழ்க்கையைப் பெற வேண்டும் என்று வயதானவர்கள் வாழ்த்தினார்கள். இளைஞர்கள் பாராட்டினார்கள். மத்திம வயதுள்ளவர்கள் கை கூப்பி கண்ணில் ஜலம் வழிய நன்றி சொன்னார்கள்.

"தூங்கணும் நிர்மலா. உடம்பு சூடாய் போச்சு. தூக்கம் வருமான்னு தெரியல. கால் குடையுது. கண்ணு எரியுது. இதனாலயே தூக்கம் வராதுன்னு நினைக்கிறேன்."

"அதெப்படி தூக்கம் வராது போயிடும் நீங்க குளிச்சுட்டு சாப்பிட்டு படுங்க."

அவன் குளித்து நல்ல உணவை ரசித்துச் சாப்பிட்டான். படுக்கைக்குப் போனான். நிர்மலாவும் தன்னை வாசனையாக்கிக் கொண்டு வந்தாள்.

அவன் லுங்கியை மேலேற்றி முழங்காலிலிருந்து அழுத்தி அழுத்தி பிடித்து விட்டாள். காலில் சொடக்கு எடுத்து விட்டாள். உள்ளங் கால்களை மசாஜ் செய்தாள். வண்டி ஓட்டிக் கொண்டு வந்ததால் முதுகில் ஏற்பட்ட வலியைப் போக்க முதுகின் மீது ஏறி அமர்ந்து கொண்டு கழுத்து புஜம், தோள்பட்டை, நடு முதுகு எல்லாம் விரல்களால் வழித்து விட்டாள்.

இரண்டு கால்களையும் மண்டி போட்டு முதுகில் உட்கார்ந்திருப்பவளை அவன் புரண்டு வாரி நெஞ்சோடு அணைத்துக் கொண்டான்.

"சந்தோஷமா இருந்துட்டு அமைதியா தூங்குங்க" என்று அவள் அவனை இறுக்கி அணைத்துக் கொள்ள, அவன் தானும் சந்தோஷமாக இருந்து அவளையும் சந்தோஷப்படுத்தி விட்டு அயர்ந்து தூங்கிப் போனான்.

பனிரெண்டு மணி நேரம் அடித்துப் போட்டது போல தூங்கினான்.

நல்ல வாடிக்கையாளர்கள்தான் உயர்தரமான விளம்பரதாரர்கள். அந்த வாடிக்கையாளர் பல பேரிடம் சொல்ல, அவனுக்கு கூடுதலாய் பல வாடிக்கையாளர்கள் கிடைத்தார்கள்.

"பார்த்தீங்களா உங்க சின்ஸியாரிட்டிக்கு கிடைச்ச மதிப்பு இது" என்று நிர்மலா சொல்ல,

"இல்ல நிர்மலா.. இது உன்னால கிடைச்ச பரிசு. நான் நடு ராத்திரில கிளம்பிப் போறபோது என்னத்துக்கு போறீங்க



அப்படின்னு ஒரு வார்த்தை சொல்லியிருந்தா எனக்கு போறது பிடிச்சிருக்காது. போறபோது அவ்வளவு தெளிவாவும் இருந்திருக்காது.

போங்க போங்க அவங்க வீட்ல துக்கம். நாம ஏதாவது உதவி செய்யணும்னு நீ அனுப்பிச்சு வச்சியே. அது ஒரு முக்கியமான காரணம். வந்து உடம்பு பிடிச்சுவிட்டு, சரியா சாப்பாடு போட்டு. சந்தோஷப் படுத்தினியே. நல்லா தூங்க வச்சியே அது ரெண்டாவது காரணம்.

இப்படி மனசறிஞ்சு நடந்துகிட்டா வாழ்க்கையும் நல்லாருக்கும். வியாபாரமும் நல்லாருக்கும். சுற்றுச் சூழலும் நல்லாருக்கும்" என்று நிர்மலாவை அவன் பாராட்டினான்.

நிர்மலா சந்தோஷமாகி மறுபடியும் அவனை சந்தோஷப்படுத்தினாள்.

இன்றைக்கும் சந்தோஷப்படுத்த வேண்டிய நாள் என்பது அவனுக்கு சமையலறையை சுத்தம் செய்யும் போதே தெரிந்து விட்டது. உள்ளே கதிரேசன் குழந்தை திவ்யாவுக்கு நிதானமாய் கதை சொல்லிக் கொண்டிருந்தான்.

குழந்தை டி.வி. பார்க்க ஆரம்பித்தால் இரவு வெகுநேரம் வரை கண் விழித்துக் கொண்டிருப்பாள். அவளை மடக்கி, இதமாய் பேசி உனக்கு கதைகள் சொல்கிறேன் என்று ஆரம்பித்தால் வெகு சீக்கிரம் வந்து கதிரேசனுக்கருகே ஒட்டிக் கொள்வாள்.

டி.வி.யில் எத்தனை கரணம் அடித்து படங்கள் காட்டினாலும் ஒரு தகப்பன் மகளுக்கு கதை சொல்வது போன்ற சுகம் எதிலும் வருவதில்லை. குறிப்பாய் கதிரேசன் மிக அழகாக கதை சொல்லப் பழகியிருந்தான். அக்கறையாக வெளிப்படுத்துவதற்கு இடைவிடாது முயற்சி செய்வான். சமையலறையில் கதிரேசன் குரல் கேட்டது.

"அர்ச்சுனனுக்கு ஹனுமான் யார்னு தெரியல. அவர் ராமருக்கு பாலம் கட்ட உதவினவர். ராமரை தெய்வமா நெனைக்கிறவர். கிருஷ்ணருடைய அவதாரந்தான் ராமருடைய அவதாரம்னு அவருக்குத் தெரியல. ஏன்னா ராமாயண காலம் வேற. மகாபாரத காலம் வேற.

ராமரெல்லாம் மேல போய், அனுமார் மட்டும் லங்கையில ஒரு ஓரமா, இங்க என்ன நடந்துன்னு யோசனை பண்ணிட்டிருந்த போது, அர்ச்சுனன் அவரைப் பார்த்து 'ஏ... வானரமே கையில வில்லு அம்பு கத்தியோட ஒரு போர் வீரன் வர, பயமில்லாமே உட்கார்ந்திருக்கியே. மெரண்டு போய் ஓட வேண்டாம்' அப்படின்னு கேட்டதுக்கு அனுமார்

சொன்னாரு. 'உன்ன பார்த்தா பயமாதான் இருக்கு. ஆனா ஒடமுடியலியேன்னார்.'

'எதுக்கு இங்க உட்காந்திருக்கே அப்படின்னு அர்ச்சுனன் கேட்டான்.'

'இந்த இடத்துலதாம்பா ராமர் பாலம் கட்டினார். ராமர் பாலம் கட்டினதை யோசனை பண்ணி பார்த்திட்டிருக்கேன்.'

'நீ இருக்கும்போது பாலம் கட்டினாரா?'

'ஆமாம்ப்பா. அப்ப நானும் சின்னச சின்னதா பாலம்கட்ட றதுக்கு உதவி பண்ணேம்ப்பா' அப்படின்னார்.

'அப்படியா, பாறை கொண்டு வந்து போட்டியா' அப்படின்னு அர்ச்சுனன் நானா சொன்னான்.

ஆமாம்ப்பா, அந்த மாதிரிதான். 'ஒரு பெரிய பாறை கொண்டாந்து போட்டேன்.' அப்படின்னார்.

"அவர் சொன்ன பாறை வேற, என்ன பாறை அது."

"சஞ்சீவி மலை" குழந்தை குதூகலமாய் கூவியது.

கதைகள் சொல்லிச் சொல்லி, புராணங்கள் சொல்லிச் சொல்லி, திவ்யாவை ஒரு நல்ல நிலைக்கு கதிரேசன் மாற்றியிருந்தான்.

அவர் சொல்றது அர்ச்சுனனுக்கு புரியல.

'அப்படியா. இந்த இடத்துலதான் பாறையை போட்டு பாலம்கட்டினாரா. ஆமா... ராமர் கையில வில்லு வச்சிருந்தாருல்ல.'

'ஆமாம்ப்பா அவரு கோதண்ட பாணி' அப்படீன்னார். கோதண்டம்னா என்னா.

"வில்லு."

திவ்யா அவன் கேள்விக்கு உடனே பதில் சொன்னாள்.

"ஆமாம்ப்பா அவர் கோதண்ட பாணி. அவர் கைல வில்லும் இருக்கும். நிறைய அம்பும் இருக்கும்."

"என்ன வானரமே கைல வில்லும் வச்சுக்கிட்டு, அம்பும் வச்சுக்கிட்டு ராமர்னு பேரும் வச்சுக்கிட்டு தசரத சக்கரவர்த்தி புள்ளைன்னு சொல்லிக்கிட்டு மகத்தான அவதாரம்னு பேசிக்கிட்டு ஒரு காரியம் பண்ணாம விட்டுட்டாரே" அப்படீன்னார் அர்ச்சுனன்.

ஆஞ்சநேயருக்கு வேசா கோபம். ஆனாலும், வெளி காட்டிக்கலே. கோபம் இருந்தா வெளிய காட்டாதவங்கதான் பெரிய மனுஷங்க." இதை உரக்கச் சொன்னாள்.

சமையலறையில் இருந்த அவள் காதில் இந்த



வாக்கியம் விழுந்தது. அவள் வாய்விட்டு சிரித்தாள். அவள் சிரித்தது அவனுக்குக் கேட்டது.

'ஐயா என்ன விட்டுட்டார்னு நினைக்கறீங்க.'

'தேவையில்லாத குரங்குகளை கூட்டிட்டு வந்து. அதுங்க கையில காலை விழுந்து எதுக்காக அதுங்கள வச்சு ஒரு பாலம் கட்டணும். கைல வில்லு வச்சுருக்கறவன் எது வேணா செய்யலாம்.

'அப்படியா நீங்க என்ன சொல்றீங்கன்னு புரியலையே.'

'ராமர் பாறையால வானரங்களை வச்சுத்தானே பாலம் கட்டினார். நான் யார் தெரியுமா. அர்ச்சுனன் தர்மருடைய தம்பி. பஞ்ச பாண்டவர்கள் நடுவில் இருப்பவன். கிருஷ்ணனுக்குத் தோழன். நான் பாலம் கட்டட்டுமா லங்கைக்கு' அப்படின்னு ஒரு அம்பு எடுத்தான் பிரார்த்தனை பண்ணினான். வில்லுல மாட்டினான் இழுத்து கடல்ல விட்டான்.

ஒரு அம்பு. நூறு அம்பாய் நூறு அம்பு ஆயிரம் அம்பாய் 'ஆயிரம் அம்பு லட்சம் அம்பாய். லட்சம் அம்பு கோடி அம்பாய் மாறி சர சர சர சரன்னு ஒண்ணோட ஒண்ணு பின்னிக்கிட்டு. அம்புனால ஒரு பாலம் கட்டினான்.

அப்படியே அனுமார் திகைச்சுப் போயிட்டார். உட்கார்ந்திருந்த அனுமார் எழுந்து நின்னு. அடடா. இவ்ளோ பெரிய வலிமையான்னார்.

அர்ச்சுனன் கர்வத்தோட அவரைப் பார்த்து சிரிச்சான்.

'ராமரால பண்ண முடியாததை இந்த அர்ச்சுனன் பண்ணுவேன்' அப்படின்னார்.

அனுமார் வாயப்பொத்தி சரின்னு தலைய ஆட்டினார். 'ஆனா, ஒரே ஒரு சந்தேகம்' அப்படின்னு அர்ச்சுனனைப் பார்த்து கேட்டார்.

'என்னப்பா.'

'ராமர் பாலம் கட்டினது லங்கைக்கு படைகளோட போறதுக்காக.'

'ஆமா. நானும் அதுக்குத்தான் கட்டியிருக்கேன்.'

'அய்யா. அம்புல கட்டியிருக்கீங்களே... யாரும் ஏறிப்போனா நடுவுல 'பொதக்'குன்னு விழுந்துட்டோம்னாக்கா'. அப்படின்னு அனுமார் கொஞ்சம் கேலியா கேட்டார்.

அர்ச்சுனனுக்கு கோபம் வந்துட்டுது. பல்லக் கடிச்சான்."

"பப்பா பல்லு கடிக்காதப்பா எனக்கு பயமாயிருக்கு" திவ்யா அவனைப் பார்த்து எகிறி கட்டிக் கொண்டாள்.

"இல்லடி கண்ணு, நடிக்கக் காமிச்சேன். அர்ச்சுன பல்லைக் கடிச்சு பேசு. போயி நடந்து பாரு. இந்தப் பாலம் தாங்கும். அப்படின்னார்.

'நான் கொஞ்சம் கனம். நடந்தா தாங்குமான்னு தெரியல' ன்னார்.

'ப்ச் அட நடப்பா' அப்படின்னு வானத்தைப் பார்த்து அனுமாரைப் பார்த்து சத்தம் போட்டான்.

அனுமார், கரையில் ஒரு கால் வச்சகிட்டு இன்னொரு கால் கட்டை விரல் நுனியால அந்தப் பாலத்துல வேகமா வச்சாரு.

பொளக்குனு மொத்தப் பாலமும் கலகலன்னு சீட்டுக் கட்டு மாதிரி கடல்ல மூழ்கிருச்சு. சிரிச்சாரு சிரிச்சாரு அனுமார் அப்படி சிரிச்சாரு.

'ஆயிரம், லட்சம், கோடி குரங்குகள் தாண்டின ஒரு பாலம் இங்க கட்ட விரல் வச்ச உடனே தொங்கி போச்சு பாலமான்னு கேட்டார். நான்தான் ராமரை விட கெட்டிக்காரன்னு வேற சொல்றியே.' அப்படின்னு சொல்லிச் சொல்லி சிரிச்சார்.

ரொம்ப கோபம் வந்துருச்சு அர்ச்சுனனுக்கு.

'இந்த தடவை ஸ்ட்ராங்கா கட்றேன் பார்' அப்படின்னு வில்லெடுத்து அம்பு தொடுத்த போது நாரதர் அங்க வந்தார்.

'என்னப்பா மேலேர்ந்து பார்த்தா ஒரே மின்னலா அடிக்கிறது. என்னன்னு பார்த்தா அர்ச்சுனன்தான் ஏதோ அம்பு போட்டுண்டிருக்கான்னு சொன்னாங்க. அதனாலதான் வந்து பார்த்தேன். என்ன, யாரு மேல் கோபம்.'

'ஒரு கோபமும் இல்ல. இந்த குரங்கு என்னமோ ராமர் பாலம் கட்டினார்னு சொல்லித்து. நான் அந்த மாதிரி பாலம் அம்பாலயே கட்டறேன். எதிப் பாருன்னு சொன்னேன். ஆனா, பாலம் விழுந்துடிச்சுன்னார்.'

'அடடே. தெய்வ சங்கல்பம் இல்லாத எந்தக் காரியமும் சரியா வராதுப்பா. அவங்ககூட பாறைல ராமா ராமான்னுதான் எழுதுனாங்க. நீ அம்பு தொடுக்கையில அம்பு பாலம் பண்றபோது கிருஷ்ணா, கிருஷ்ணான்னு சொல்லி செய்தீன்னாக்கா, அந்த பாலத்தை யார் உடைக்க முடியும்' அப்படின்னார்.

'ஆமா. ஆமா. நான் அதை மறந்துட்டேன்னு'



சொன்னான். கிருஷ்ணரை மனசுல தியானம் பண்ணான். நேரா ஒரு அம்பு விட்டான். ஒவ்வொரு அம்புலயும் கிருஷ்ணருடைய பேர் இருக்கணும்னு நினைச்சான். அப்படியே இருந்தது. எல்லா அம்பும் ஒண்ணோட ஒண்ணு பின்னிப் பின்னி கோடிக் கணக்கா வந்து, அந்த அம்புப் பாலம் தயாராச்சு.

நாரதர் சொன்னார். 'அனுமாரே இப்ப போய் பாருங்க.'

'கட்ட விரல் வச்ச உடனே உடைஞ்சு போயிரும்'ன்னார் அனுமார்.

'ப்ச் இல்லீங்க நீங்க நடந்து பாருங்களேன்.'

போய் கால் வச்சு அழுத்துனாரு அனுமார். உடையல.

'அட நம்ம கனத்தை தாங்குதே' அப்படின்னார். ரெண்டு காலும் வச்சு நின்னார். அப்பவும் உடையல. எகிறி குதிச்சார் உடையல. மொரட்டுத்தனமா ஆடினார் உடையல. குட்டிக்கரணம் அடிச்சுப் பார்த்தார் உடையல. எகிறி எகிறி குதிச்சார் உடையல."

எல்லா விதமான நடிப்புகளோடும் அந்த கதையை கதிரேசன் திவ்யாவிற்குச் சொல்ல, குழந்தை குதூகலித்தாள் வாய் விட்டு சோழிகள் இறைத்தது போல சிரித்தாள்.

கதிரேசனின் கையை தன்னை சுற்றிப் போட்டுக் கொண்டு, மிக வாஞ்சையோடு அவனைப் பார்த்தபடி படுத்துக்கிடந்தாள்.

அப்போ நாரதர் சொன்னார் 'ரொம்ப கஷ்டப்படாதீங்க. எவ்வளோ பலம் காமிக்க முடியுமோ அவ்வளோ பலமும் காமிச்சாச்சுங்க. அந்தப் பாலம் உடையல. ஏன்னா அது வெறும் அம்புப் பாலமில்லே. அது அர்ச்சுனன் பாலம் இல்லே. அது மகாபரமாத்மாவான கடவுளுடைய ரூபமான கிருஷ்ணருடைய பெயரைத் தாங்கியிருக்கிற பாலம். நீங்கள் எப்படி ராமருடைய பெயரை எழுதி, பாறைகளை கடல்ல போட்டு பாலம் கட்டினீங்களோ அதே போல அர்ச்சுனன் ஒவ்வொரு அம்புலயும் கிருஷ்ணன் பெயர் இருக்கணும்னு நினைச்சுண்டு போட்டிருக்கான். ஒவ்வொரு அம்புலயும் கிருஷ்ணனுடைய பெயர் இருக்கு. அதை நீங்க குதிச்சு உடைச்சிட முடியுமா' அப்படின்னார்.

'அப்போ கிருஷ்ணர் ராமரை விட உசத்தியா' அப்படின்னு அனுமார் கேட்டார்.

'அய்யா, எல்லாம் தெரிஞ்ச நீங்களே இப்படி மதி மயக்கமா கேக்கறீங்களே. அதோ பாருங்க' அப்படின்னார்.

அங்கே கிருஷ்ணர் வந்தார். அர்ச்சுனன் ஓடிப் போய்,

கிருஷ்ணன்னார்.

அங்கே கிருஷ்ணர் ராமரா மாறினார். ஆஞ்சநேய ஓடிப் போய், ராமான்னார்.

ரெண்டும் சேர்ந்து மகா விஷ்ணுவாக மாறிற்று. ராமரு அவரே. கிருஷ்ணரும் அவரே. கதை முடிந்தது கத்தரிக்கா காய்த்தது."

குழந்தை அவனைக் கட்டிக் கொண்டு முத்தமழை பொழிந்தாள்.

சட்டென்று குழந்தையின் வாஞ்சையை தொலைவிலிருந்து பார்த்த நிர்மலாவிற்கு கண்ணில் ஜலு தளும்பியது.

நீ தூங்கவே என்று சொல்ல, தூங்கப் போறேம்மா என்று தன் படுக்கைக்குத் தாவி படுத்துக் கொண்டது. அவ போர்வையைப் போர்த்தி, குழந்தையின் கன்னங்களி முத்தம் கொடுத்து, கண்ணை வருடி, நெற்றியையும் தலை மயிரையும் லேசாக தடவிக் கொடுத்தான்.

குழந்தை உறக்கத்தில் ஆழ ஆரம்பித்தாள். திரும்பினான். அருகே நின்று கொண்டிருக்கிற நிர்மலாவை ஆவலோடு பார்த்தான்.

நிர்மலா அவனைப் பார்த்து புன்னகை செய்தாள்.

"வேலை முடியலையா..." அவளைப் பார்த்து கேட்டான்.

"முடிஞ்சுடுச்சு. ஊதுவத்தி கொளுத்திட்டு வந்துடறேன்."

அவள் ஊதுவத்தி கொளுத்தினாள். அன்னபூரணிக்கு காட்டினாள். எதிரே உள்ள ஊதுபத்தி ஸ்டாண்டில் சொருகினாள். சுற்றும் முற்றும் பார்த்து சமையலறை சுத்தமாக இருப்பதை உறுதி செய்து கொண்டு, பாத்ரூமுக்குள் நுழைந்தாள். சோப்புக் கட்டி எடுத்து முகம் கழுவிக் கொண்டாள். ஈரத் துணியில் உடம்பெல்லாம் துடைத்துக் கொண்டாள். நைட்டிக்கு மாறினாள். பவுடர் போட்டுக் கொண்டாள். பாடி ஸ்பிரே தெளித்துக் கொண்டாள். தலைப் பின்னலைப் பிரித்து நுனியில் சிறிய முடிச்சாய் போட்டுக் கொண்டாள். திரும்பி அவனைப் பார்த்து சிரித்தாள். அந்த சிரிப்பில் ஒரு வரவேற்பு இருந்தது.

பெண்களின் குதூகலமான நேரம், ஆண்களுக்காக தயாராகும் நேரம்தான். தூண்டிய இளமைக்காக, தன் கட்டுக்காக, தன்னை அனுபவிப்பதற்காக ஆவலோடு ஒரு ஆண் காத்துக்கிடக்கிறான் என்கிற பெருமை பெண்ணை



பூரிப்படையச் செய்கிறது.

இந்த பூரிப்பு அவனுக்குள் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அந்த நம்பிக்கை அவனுக்குள் இருக்கும் காதலை கிளறுகிறது. ஆணை முழுவதும் நேசிக்கின்ற ஒரு நல்ல நிலைமைக்கு அந்தப் பெண் விரைவில் போகிறாள்.

"என்னா. இன்னிக்கு என்ன பண்றதா உத்தேசம்" அவள் அவனுக்கு நெருங்கி உட்கார்ந்து கொண்டு, முகத்தை அவன் முகத்துக்கு நேரே வைத்து, கேட்டாள்.

மல்லாந்து படுத்துக் கொண்டிருக்கிறவன் வலக்கை நீட்டி அவளைத் தொட்டான். வருடினான்.

"நான் ஒண்ணும் பண்றாப்பல இல்ல. நீ எதுனா பண்ணு" என்று இரண்டு கைகளையும் தலைக்கு மேல் போட்டுக் கொண்டான்.

"ஏன் நீங்க வந்தா என்ன கௌரவக் கொறைச்சலா."

"இல்ல... சும்மா கை கால் அசைக்காத அப்படியே கிடக்கணும் போல இருக்கு. என்னை யாராவது தூக்கி எடுத்து கொஞ்சினா, தாலாட்டினா நல்லாருக்கும் போல இருக்கு."

"உடம்புக்கு ஏதாவது அலுப்பா."

"உடம்புல ஒரு அலுப்புமில்ல. மனசுல கொஞ்சம் தளர்ச்சி."

"ஏன்." அவள் ஆவலோடு கேட்டாள்.

"சும்மா சும்மா இதானே பண்ணிட்டிருக்கோம். இதுக்கு மேல ஒண்ணுமில்லியே. இது வேணாம்னாலும் மனசு கேக்க மாட்டேங்குது. அதே நேரம் செய்யறதுக்கும் இஷ்டமில்ல. ஒரு இரண்டுங்கெட்டான் நிலைமையில நான் இருக்கேன். புதுசா ஏதாவது அட்டாடின்னு ஆரம்பிச்சோம்னா கொஞ்சம் மிருகத்தனமா அநாகரிகமா இருக்கு. பிரியமா பண்றதுக்கு இதுல ஒண்ணுமில்லேன்னு தோணுது."

"அடேங்கப்பா. இவ்வளோ சீக்கிரம் அலுத்திருச்சா."

"இல்லே. அலுத்ததா சொன்னா பொய். ஒரு சின்ன தளர்ச்சி இருக்கு. உடம்புல இல்ல. நினைப்புல இருக்கு."

"என்மேல பிரியம் குறைஞ்சு போச்சா..."

"அது எப்படி குறையும். உம் மேல பிரியம் குறையறா மாதிரியா நீ வச்சிருக்கே. அப்படி இல்ல நிர்மலா. என் மனசு இதுல திரும்பத் திரும்ப ஈடுபடுது. ஒரு சின்ன விஷயம் கண்டு பிடிச்சிருக்கேன்."

"என்ன அது."

"நீ இல்லாத போது ஒன்ன இழுத்து தொந்தரவு

பண்ணி, ஹிம்சை பண்ணி, சண்டை போட்டு, வேசா வலி... பண்ணி, கூடணும்னு ஆசையிருக்கு. உன்னை பார்த்த பி... எதுக்கு வெறுமனே பக்கத்துல படுக்க வச்சு தலை... தடவிட்டு தூங்கிடலாம்னு தோணுது. அப்ப ஏன் அந்த ம... யோசனை பண்றேன். இப்ப ஏன் சைலண்டாகறே... எனக்குப் புரியல. உன்னைப் பார்த்தா வேகம் கம்மியாகு... உன்னைப் பார்க்காத போது திமிரும், ஆத்திரம், வெறி... அதிகமாகுது."

"ஒருவேளை நான் நேரா பார்க்க நல்லா இல்லியோ என்னமோ."

"சும்மா எதாவது உளராதே. நான் எவ்வள... முக்கியமான ஒரு விஷயம் பேசிக்கிட்டிருக்கேன். அ... என்னான்னு யோசனை பண்ணாத, வாய்க்கு வந்தத பேச... என்ன அர்த்தம்."

"என்ன தெரியுமா காரணம்."

"சொல்லு" அவன் சற்று நிமிர்ந்து தலையை படுக்கையின் மீது உயரமாக்கிக் கொண்டான்.

"நீங்க நல்லவங்களாயிட்டு வாறீங்கன்னு அர்த்தம்."

"என்ன திடீர்னு ஐஸ் வைக்கறே."

"ஆங், நான் உண்மை சொன்னா அதை நம்புற... கிடையாது. அப்புறம் சொல்லலியே சொல்லலியேன்னு கத்தறது."

"சரி சொல்லு கேட்கறேன்."

"நீங்க ரொம்ப சீக்கரமா மாறிக்கிட்டு வர்றீங்கன்னு அர்த்தம். உங்களால பொய்யா இருக்க முடியலன்னு அர்த்தம். ஆளில்லாதபோது ஏற்படற வெறி, ஏன் நேரா வரல... அப்படின்னா, நேராப் பார்க்கிறபோது என்னைப் பத்தி சகலமும் நிறைய தோணுது.

ஆளில்லாத போது உடம்பு மட்டும்தான் வருது. உடம்பு மட்டும் கண்ணுக்கு தெரியறபோது மனசுக்குள்ள கூத்தாட்டம் ஜாஸ்தி ஆகுது. ஆள் எதிர பார்த்தவுடனே நான் நின்னது, போனது, அழுதது, சிரிச்சது எல்லாம் ஞாபகம் வருது. பழைய கதை மொத்தமும் உள்ளுக்குள்ள வருது. என்னுடைய பழைய கதை உங்க மனசுல தோணிடுச்சுன்னா ஆத்திரம் வருமா வேகம் வருமா, வராதில்லே. அதனாலதான் என்னைப் பார்த்த உடனே சைலண்டாயிடறீங்க. ஆனா, நீங்க நினைக்கிறதுக்கு நேர் மாறா நான் நினைக்கிறேன்."

"என்ன, எப்படி."

"நீங்க இல்லாத போதும் உங்களைப் பத்தி எந்த



நினைப்புமே எனக்கு வாறதில்லே. நீங்க வீட்டுக்குள்ள இருக்கீங்கன்னா உடனே இன்னைக்கு ராத்திரி இவன் என்னா பண்ணப் போறான், எது பண்ணப் போறான் அப்படின்னு ஒரு அலையல் ஆரம்பிக்கும். அதுவும் ராத்திரி எட்டு மணி ஆனதுன்னா போதும். அடடா இவன் ஏதாவது பண்ணுவானே புதுசு புதுசா அப்படின்னு ஒரு திமிர் எழுந்திரும்.

நீங்க வரல இல்ல. போய்ட்டீங்கன்னு வச்சுக்குங்க. இதே எட்டு மணிய கடகட கடன்னு முடிச்சுட்டு படுக்கைல விழுந்து. கொஞ்ச நேரம் தூங்குற வரைக்கும் டி.வி. பார்த்துட்டு. டி.வி. அணைச்ச கையோட கண்ணு சொருகி விழுந்துடும் தூங்கிருவேன்.

செல் முனை அளவு கூட ஆம்பளை வேணும்னோ, இருந்தா நல்லாருக்கும்னோ. நேத்து என்ன பண்ணே. முந்தா நேத்து என்ன பண்ணேன்னோ நான் யோசிக்கலே மாட்டேன். சுத்தமா கொஞ்சங்கூட ஒரு புள்ளி கூட காம விகாரமே வராது. நல்லா தூங்கிருவேன். இது எனக்கு ஆச்சரியமா இருக்கு. இது என்" அவள் அவனைக் கேட்டாள்.

"இது ஒரு மாதிரி கடமை உணர்வு. புருஷன் இருக்கான். புருஷன் இருக்கான்னு தெரிஞ்சதும் அவனுக்கு சோறு பொங்கிப் போடற மாதிரி, துணி துவைச்சுப் போடற மாதிரி இதையும் பண்ணியாகணும்கிற ஒரு கடமை உணர்வு. நான் இல்லேன்றபோது எனக்கு எதுக்கு சோறு போடணும். நான் இல்லேன்றபோது என்னுடைய துணிய எதுக்கு துவைக்கணும்."

கதிரேசன் நிர்மலாவினுடைய அன்மை தாங்காமல் உடம்பு முறுக்கி சோம்பலை வெளியேற்றினான். நாடி நரம்புகளை சுறுசுறுப்பாக்க கை கால்களை இறுக வைத்து மறுபடியும் தளர விட்டான். அவளையே ஆவல் பொங்கவும் பார்த்தான். தோள் மீது கை வைத்தான். அவள் முகத்தை வருடினான். உடலைத் தழுவினான். கால்களை வருடிக் கொடுத்தான். கழுத்தின் பின்புறம் மெல்ல அழுந்தப் பற்றி தளர விட்டான். எழுந்து நின்று அவளுக்கு அருகே மூச்சு முட்டுகிற தூரத்தில் உட்கார்ந்து கொண்டான்.

நிர்மலாவுக்கும் அந்த அன்மையால் மனம் கிளர்ந்தது. அவன் தலையைக் கோதி விட்டாள். கன்னங்களில் முத்தமிட்டாள். மூக்கை மெல்ல கடித்தாள். அவன் நெஞ்சு ரோமத்தை வருடத் துவங்கினாள். சட்டென்று நிர்மலாவுக்குள் ஒரு விளையாட்டு தோன்றியது. ஒரு சோதனை செய்து பார்த்தால் என்ன என்ற எண்ணம் வந்தது. இவன் எப்படி

நடந்து கொள்வான் என்று பரிட்சித்து பார்க்கும் ஒரு பு
ஏற்பட்டது.

இப்போது இந்த நிலையில் என்னால் முடியா
முடியவில்லை என்று சொல்லி விட்டால் இவன் என்
செய்வான். எவ்வளவு கோபப்படுவான். அல்லது கோப
ப்படமாட்டானா. ஒருமுறை இவனுடைய புத்தியின் நீ
அகலத்தை மறுபரிசீலனை செய்தால் என்ன என்
யோசித்தாள்.

சட்டென்று சோதனை செய்யலாமா என்று கணக்கு
போட்டாள். ஒரு வேளை காமம் தாங்காமல் வேகமாய் கடித்
கொண்டால் கூச்சலிட்டால். முகம் தூக்கி வைத்து
கொண்டால். ஒரு வார சண்டையாக மாறி விட்டால் என்ன
செய்வது என்று லேசான பயம் இருந்தது. மறுபடி
எப்படியாவது சமாதானம் செய்து கொள்ளலாம். மேலே
விழுந்து, புரண்டு கெஞ்சி, கூத்தாடி மறுபடியும் அனைத்
கசப்படுத்தி இவனை சரி செய்து விடலாம். எனவே, இந்த
சோதனையை ஒருமுறை செய்து பார்ப்போம் என்று
தோன்றியது.

"ரொம்ப ஆசையா இருக்கா" அடிக் குரலில்
கேட்டாள்.

"என்ன கேள்வி இது. வந்து பக்கத்துல உட்கார்ந்து
உரசிட்டு ஆசையா இருக்கான்னா எதுக்கு உரசறே."

"இல்ல கண்ணு. உன்னைப் பார்த்தா பாவமா யிருக்கு.
அதனாலதான்."

"என்ன திடீர்னு" அவன் பதிலுக்குக் கேட்டான்.

"இன்னிக்கு வேணாம்னு தோணுது."

"ஏன்."

"எனக்கு முடியல."

"எதனால."

"என்னமோ கை கால்லாம் ஒரு உளச்சலா இருக்கு.
கொஞ்சம் வயிறு சங்கடப்படுத்துது. முழங்கால் முட்டியில
ஒரு வலி இருக்கு. வாயுக் கோளாறுன்னு நினைக்கறேன்.
முழங்கால் மடிக்கவோ நீட்டவோ முடியல. மடிக்கிற போது
ஒரு வலி நீட்டறபோது ஒரு வலி. அது தவிர வயித்துல ஒரு
சங்கடம். வெறுமனே பக்கத்துல உட்கார்ந்து பேசிட்டு
தூங்கலாமா."

இருந்த சந்தோஷமும், ஆர்வமும் சரசரவென்று
வடிந்தன. அவன் அவளையே பார்த்தான். சிறிது நேரம்
கண்களை மூடிக் கொண்டான்.



"சரி. உடம்பு சரியில்லைனா என்னா பண்றது. படுத்து
தூங்கு."

"கொஞ்ச நேரம் பேசிட்டு தூங்கலாம்."

"வேணாம். பேசினா ஆசை ஜாஸ்தியாகும். உனக்கு
வலியிருந்தா என்ன. அப்படின்னு ஒரு திமிரா நடக்கத்
தோணும்."

"உங்க கூட கொஞ்ச நேரம் கண்ண மூடி படுத்திருந்தா
தூக்கம் தானா வந்துரும். இப்போது எனக்கு தூக்கம்
வரலையே. கொஞ்ச நேரம் எதுனா பேசுங்களேன்."

"எனக்கு தூக்கம் வருது."

"அப்படியா இல்லனோ ஆசையா இருந்துட்டு டக்குனு
தூக்கம் வருதுங்கறீங்க."

"நீதான் முடியாதுன்னறயே. அப்புறம் ஆசையை.
வளர்த்துக்கிட்டு என்ன பண்றது. நான் தூங்குறேன். அந்த
வேலையாவது ஒழுங்கா செய்வோம்." அவன் ஒருக்களித்துப்
படுத்துக் கொண்டான்.

"கோபமாப்பா" அவள் அவனை தழுவிக் கொண்டு
கேட்டாள்.

தன்னுடைய மார்பை அவன் புஜத்தில் பதிய வைத்து.
அவன் முகத்தை வருடிக் கொடுத்தாள்.

"இல்லையே... தூங்கு காலையாவது உடம்பு
சரியாகட்டும். நாளைக்காவது நடத்திக்குவோம்."

அவன் இந்த நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டதாய்
நினைத்துக் கொண்டு பேசினான்.

"இல்லே. உங்களப் பார்த்தா பாவமா இருக்கு
அதனாலதான் கொஞ்ச நேரமாவது கொஞ்சிட்டு வரேன்."

"நீ ரெண்டுங் கெட்டானா பண்றே. கொஞ்ச நேரம்
கொஞ்சிட்டின்னா. அப்புறம் நான் மிச்ச நேரம் சாவேனில்ல.
அதனால சொல்றேன். பேசாத படுத்துத் தூங்கு."

"இப்படி... கட்டிட்டு தூங்கட்டுமா."

"வேணா. அதுகூட எனக்கு கஷ்டமாக இருக்கும்."

"எனக்கு வேணும்போல் தோணுதே."

"என்ன சொல்றே."

"உடம்பு சரியில்லையா. யாராவது கட்டிக்கிட்டா
நல்லாருக்கும்னு தோணுது. நான் யாரையாவது கட்டிண்டு
படுத்திருந்தா நல்லாயிருக்கும்னு தோணுது. அதனாலதான்.
இது தப்பா" என்று கொஞ்சினாள்.

அவன் திரும்பி அவளைப் பார்த்தான்.

"சரிபடுத்துக்க நான் உன்னை கட்டிக்கிறேன்."

படுப்பதற்காக காத்திருந்தாள். அவன் மெல்ல படுக்கையில் சரிந்தான். அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள். கன்னங்களில் முத்தமிட்டாள். மெலியதாய் உதடு கவ்வினாள்.

"போதும்னு சொல்லிட்டு வேற என்னவோ எல்லாம் பண்றே."

"ஏன் இந்த மாதிரி மெல்லிசா விளையாடினா தப்பா."

"ஏய். ஆளை உசுப்பேத்தி விட்டுட்டு. அப்புறம் தூங்கு தூங்குன்னா எப்படி தூங்கறது."

"எல்லாந்தான் செய்யணும். எனக்கு பிரியமா நடந்துட்டு தூங்கறது உங்களால முடியாதா. செய்தா என்ன நான் தூங்குற வரைக்கும் கொஞ்ச நேரம் கொஞ்சிட்டு இருக்கறது. அப்புறம் தூங்கறது. பெரிய கம்ப சூத்ரமா இது கொஞ்சம் மனசு அடக்கமிருந்தா செய்யலாமில்ல." அவள் ஒரு வழி சொல்லிக் கொடுத்தாள்.

அவன் மறுபடியும் அவளையே உற்றுப் பார்த்தான். 'என்னமோ விளையாடறே நீ' என்பது போல் அந்தப் பார்வை இருந்தது.

அவன் அவள் விருப்பப்படியே அவளைக் கொஞ்சினான். காது மடல்களைக் கடித்தான். புஜங்களில் முகம் பதிய வைத்து இழைந்தான். உடம்பு முழுவதும் கைகள் படரவிட்டு, அவளை வருடிக் கொடுத்தான்.

அவள் அந்த சுகம் தாங்காமல் முனகினாள். உடம்பை முறுக்கி தளர்த்தினாள். "வா. வந்துரு" என்று அழைத்தாள்.

"வேணான்னு சொன்ன."

"இல்ல. பாவம் நீ. வந்துரு" என்று சொன்னாள்.

"ஏய் நீ பொய்தானே சொல்றே" அவனுக்கு வேகமாய் கோபம் வந்தது.

"இல்லப்பா உடம்புக்கு முடியல அதனால சொல்றேன்."

"ஏய். உடம்புக்கு முடியலேன்றது நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுமா. போன நிமிஷம் வயிறு வலிக்குது. கால் மடக்க முடியல. நீட்ட முடியலன்னே. இப்ப கால மடக்கி, நீட்டியிருக்கே. என்ன விளையாட்டு இது. என்னை வெறுப்பேத்தறியா நீ. என்ன சொல்றான் பார்க்கலான்னு ட்ரை பண்றியா." அவன் அவளுடைய புத்தியின் கோணலை



தெரிந்து கொண்டு கூச்சலிட்டான்.

ஆமாம் என்று ஒத்துக் கொண்டால். ஒருவேளை அவன் விலகியும் போகக் கூடும். இந்த மாதிரி தந்திரமா யிருக்கிற நாயோட என்னால படுக்க முடியாது என்று உதறிவிடக் கூடும். எங்கிட்டேயே இப்படியெல்லாம் நடந்துக்கிறியே என்று கோபமடையக் கூடும் என்பதால் "இல்லப்பா நெஜமாவே உடம்பு சரியில்ல. ஆனா நீ தொட்ட உடனே. ஒரு மாதிரி எனக்கும் வேணும்னு தோணுது. நீ தொடுற ஆசையப் பார்த்தா உனக்கு கொடுத்துட்டுதான் தூங்கணும்னு தோணுது. வலிச்சா பரவாயில்ல. எல்லாம் மறந்து போயிடும் வா" அவள் பொய்யை விடாது மெய்யாக்கினாள்.

முழு வேகத்தில் இயங்க வேண்டும். முரட்டுத் தனமாக நடந்து கொள்ள வேண்டும் என்று மனசுக்குள் திட்டமிட்டுக் கொண்டிருந்தவனுக்கு அவளுடைய எச்சரிக்கை காரணமாக ஒரு நிதானம் வந்தது.

அந்த நிதானத்தின் விளைவாய் அவளுக்கு ஏற்ற வண்ணம் அவளுக்கு பிடித்த வண்ணம் அவள் தாங்கும் வண்ணம் விரும்பும் வண்ணம் நடந்து கொள்ளத் தோன்றியது.

அவள் முகத்தைப் பார்த்து அதற்கேற்றபடி தன்னுடைய நடவடிக்கைகளை அவன் மாற்றிக் கொண்டான். அவள் கண்மூடி அதை ரசித்துக் கொண்டிருந்தாள்.

ஒரு பொய் சொன்னதால் உண்டான லாபத்தை அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

இப்பொழுதேனும் சொல்லிவிடலாமா. எனக்கு உடம்புக்கு ஒண்ணுமில்லை. நான் சும்மா விளையாட்டுக்காகச் சொன்னேன் என்று அவனிடம் தெரிவிக்கலாமா.

அவன் கோபித்துக் கொள்வான். சட்டென்று எல்லாவற்றையும் உதறி விட்டு, போனாலும் போய் விடுவான்.

உன்ன மாதிரி ஒரு கேவலமான ஜென்மத்தை நான் பார்த்ததில்லடி என்று ஆரம்பித்து அவனோடு நாலைந்து நாட்கள் பேசாது போனாலும் போய்விடுவான். இனிமேல் இந்த உண்மையைச் சொல்வதில் லாபமே இல்லை.

வலிய வலி இருப்பது போல, அவனுக்காக அதை பொறுத்துக் கொள்வது போல. முடியாது போயினும் அவனுக்காக ஒத்துழைப்பது போல. பேசின பொய்யை தொடர்ந்து நடத்தத்தான் வேண்டும். அது இரட்டிப்பு லாபத்தைத் தரும்.

இப்படி நிதானமாய் தனக்காக தன்னைப் பார்த்து அவன் நெருங்குவதும் பரமசுகமாய் இருக்கிறது. இல்லையெனில் அவனுடைய விருப்பத்துக்கு ஈடு கொடுத்து வெறுமே சில முரட்டுத்தனங்களை எதிர் கொள்ள வேண்டியிருக்கும். இது அற்புதமாக இருக்கிறது. இது பொய்யற்று இல்லாமல் உண்மையாகவே இருந்திருந்தால் இன்னும் சுகமாக அனுபவித்திருக்க முடியும். அதனாலென்ன ஒரு பொய் நல்ல சுகத்தை தருகிறதென்றால் தொடர்ந்து பொய் சொல்லலாமே என்று தீர்மானித்தாள். நடு நடுவே வலிப்பது போல் நடித்தாள். முழங்கால்களைத் தடவிக் கொண்டாள்.

"போதும் நான் நகர்ந்துக்கறேன்" என்று சொல்ல;

"வேண்டாம். உன்ன பட்டினி போட்றதுக்கு எனக்கு இஷ்டமே இல்ல. அப்புறம் எனக்கு தூக்கமே வராது. அப்புறம் நீ சாப்பாடு இல்லாது தூங்கறியேன்னு மனசு அலைக்கழிய ஆரம்பிக்கும். அதனால உன்பாட்டுக்கு உன்னுடைய வேலையை நீ தொடர்ந்து செய்" என்று அன்புக் கட்டளையிட்டாள். அவனை செய்வதற்குத் தூண்டினாள். ஆவேசப் படுத்தினாள். அவன் சந்தேகத்தில் தவித்தான்.

கால் வலின்னு ஒரு க்ஷணம் நடிக்கிறது. ஆனால் ஒத்துழைப்பதைப் பார்த்தால் உடம்பின் ஒரு பகுதியிலும் வலியில்லை என்பது போலதான் தெரிகிறது. இவள் பொய் சொல்கிறாளோ. தன்னை எடை போட்டுப் பார்ப்பதற்காக நாடகமாடுகிறாளோ என்று யோசித்தான்.

இவள் செய்தாலும் செய்வாள். இவளுக்கு தன்னை கொஞ்சணும்னு ஆசை வந்துருச்சன்னா, உடம்புக்கு முடியாதவ மாதிரி நடிக்கிறவள்தான். இது ஒண்ணும் புதுசில்ல. இப்போ நடிப்பு ஜாஸ்தியா இருக்கு. ஆனால் தொடர்ச்சியா இல்லை. திடீர் திடீர்னு நடக்கிறது மறந்து போகுது. உடம்புல வலியிருந்தா இப்படி இணையா ஆட்டம் போட முடியுமா.

நாம சந்தேகப்படும்போது ஆஹா. வலிக் குதுன்னு பொய் சொல்றாளே தவிர உண்மையில் இவளுக்கு வலி இல்லன்னுதான் தோணுது. இருந்துட்டு போகட்டும் எதுக்கு பொய்சொல்றா. தனக்கு இதமா புருஷன் நடக்கணும்னுதானே. செய்திரலாம். அது ஒண்ணும் பெரிய கஷ்டமில்லே. உனக்கு இதமா நடக்கணும்கிறதுதான் என்னுடைய லட்சியமும்கூட.

உனக்கு இதமா நான் நடக்கறாப் போல, எனக்கு இதமா நீ நடக்க கத்துக்கோ. அந்த புத்தி உனக்கு வந்திருச்சன்னா



நல்லாருக்கும் என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டு, மேலும் அவளை சந்தோஷப்படுத்துகிற விதமாய், அவளுக்கு தீனி போடுகிற விதமாய், அவன் நடந்து கொள்ள, அவள் பரவசத்தில் கிறங்கினாள். வாய்விட்டு அரற்றத் துவங்கினாள். சந்தோஷத்தின் உச்சியில் நெகிழ்ந்து நெகிழ்ந்து அவனை இறுக்கிக் கொண்டாள். ரொம்ப தேங்ஸ்டா. ரொம்பத் தேங்ஸ்டா என்று உளறிக் கொட்டினாள்.

அவன் அவளையும் அமைதிப்படுத்தி, தன்னையும் அமைதிப்படுத்திக் கொண்டான்.

அயர்ந்து, நகர்ந்து அவளுக்கு அருகே வெறுமே தழுவியபடி படுத்துக் கொண்டான். அவளுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. அவனை இறுக்கிக் கொண்டு முத்தமழை பெய்தாள். இப்போதாவது சொல்லிவிடலாமா என்று நினைத்தாள்.

வேண்டாம். எல்லாம் கெட்டுப் போய்விடும். சகலமும் சண்டையாகிவிடும். இத்தனை சந்தோஷமும் கசப்பில் போய் முடிந்துவிடும். எனவே, முழங்கால் வலி, வயிறு கலங்குவது என்பதை இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்காவது பேசி, நடத்திக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைத்தாள். அதற்கு ஞாபகப்படுத்திக் கொள்ளும் விதமாய் அந்த விஷயத்தை உரு போட்டுக் கொண்டாள்.

இது அப்பப்போ எடுத்துவிட வேண்டிய பொய் என்று நினைவுபடுத்திக் கொண்டாள். அவள் தந்திரம் அவளுக்கே வேதனையாக இருந்தது. இவ்வளவு நல்லவரா ஒரு புருஷன் இருக்கான். இத்தனை உண்மையா ஒரு புருஷன் இருக்கான். ஆனா அவன்கிட்ட பொய் சொல்ல வேண்டியிருக்கு. அவன்கிட்ட உண்மையாக இல்லாமல், ஏதோ நாடகமாட வேண்டியிருக்கு. இது தேவைதானா என்று கேட்டுக் கொண்டபோது, சும்மாரு உண்மையைச் சொல்றேன்னு ஆரம்பிச்சு செருப்படி வாங்காதே. இதான் நல்லது. ஒரு பொய்னால உலகம் ஒண்ணும் கெட்டுப் போயிடாது வேணா ரெண்டு மூணு நாள் கழிச்சு வேட்டையாடிக்கோ அப்படின்னு அவனுக்கு வரம் கொடுத்துரு. அவன் பின்னால் கணக்கு தீர்த்துக்கட்டும் என்று தீர்மானித்தாள்.

ஆனால், மனசின் ஒரு ஓரம் உண்மை உறுத்தி, எகிறி எகிறி அவளை தொந்தரவு செய்து கொண்டிருந்தது. கூடலில் மட்டுமல்ல, இன்னும் பல்வேறு விஷயங்களில் இவனோடு பொய்க் குடித்தனம்தான் நடத்திக் கொண்டிருக்கிறாய். மிக உண்மையாக இருக்கிற ஒரு புருஷனிடம் மிக பொய்யாக நடந்து கொண்டிருக்கிறாய். உன்னுடைய அல்பத்தனத்தை

அவ்வப்போது காட்டிக் கொண்டிருக்கிறாய். உன்னால் நூறு சதவீதம் உண்மையாய், நேர்மையாய் புருஷனிடம் நடக்க முடியவில்லை. புருஷனிடமே நேர்மையாய் நடக்க முடியாத உன்னால் வேறு யாரிடம் நேர்மையாக நடக்க முடியும்.

பொய் சொல்வதே, எல்லோரிடமும் பொய்யாய் இருப்பதே உன்னுடைய வாழ்க்கையாகப் போய்விட்டது. அந்தப் பொய்யை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய தந்திரம் வேறு வந்துவிட்டது. எல்லாவற்றையும் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

நூறு சதவீதம் உண்மையாய் யாரிடமும் நடந்து கொள்ள முடியவில்லை என்பது ஒரு வேதனைதான். முப்பது வயதில் வாழ்க்கை பற்றி தெளிவாக ஒரு அபிப்ராயம் வந்த பிறகும், சத்தியமாக இருக்க முடியவில்லை என்பது வருத்தமான விஷயம்தான்.

தான் இந்தப் பொய்யைச் சொல்லாமல் சாதாரணமாகவே இருந்திருக்கலாம். ஆனால், புத்தி அடிக்கடி பொய்க்குத் தாவுகிறது. பொய் சொல்வதில் ஒரு சந்தோஷம் இருக்கிறது. ஏமாற்றுவதில் ஒரு ஆனந்தம் இருக்கிறது. இது சின்ன வயதுப் பழக்கம். இதிலிருந்து விடுபடவே முடியவில்லை.

வாழ்க்கை பலமுறை தண்டித்தும், தள்ளி மிதித்தும் இந்தப் பழக்கம் போகவில்லை. ஆனால், கதிரேசன் வேறு யாரிடம் உண்மையாக இருக்கிறானோ இல்லையோ தன்னிடம் மிக மிக உண்மையாக இருக்கிறான் என்பது தெளிவாகத் தெரிகிறது. தன்னிடம் எது குறித்தும் அவன் பொய் சொன்னதாக அவளுக்கு ஞாபகம் இல்லை. அவன் பொய் சொல்ல விருப்பம் இல்லாதவனாகவே இருந்திருக்கிறான்.

பல நேரங்களில் அவளை அனுபவிக்க ஆசைப்படுகிறபோது கூட, பொய் சொல்லாமல், நாடகம் ஆடாமல் நேரடியாய் அவளிடம் கேட்டிருக்கிறான். மறுத்த போதும், மறுக்காத போதும் ஒரே விதமாக இருந்திருக்கிறான். அந்த புத்தி தனக்கு வரவே இல்லை. ஏன் என்று யோசித்தால் புரிபடவில்லை.

இப்படி எல்லா நேரமும் தன்னிடம் உண்மையாக இருப்பதற்கு இவனுடைய அடிப்படையான எந்த விஷயம் காரணம் என்று படுத்தபடியே யோசித்தாள்.

அவனுக்கு தன்னை சோதித்துப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படவே இல்லை. ஏன் அப்படி



அவள் எப்படி இருந்தாலும் அதை ஏற்றுக் கொள்ளுகின்ற பக்குவம் அவனிடம் வந்துவிட்டது.

தனக்கு சந்தேகமிருப்பது மட்டுமில்லாமல் அந்த சந்தேகத்தின்பால் ஏற்பட்ட பயத்தின் காரணமாய் தொடர்ந்து புருஷனை சோதித்துக் கொண்டே இருக்க வேண்டி இருக்கிறது.

இந்த பயத்துக்கு என்ன காரணம். அவள் யோசித்தாள். மனம் அமைதியாய் அவனையே பார்த்துக் கொண்டிருந்தது.

சொல்லு எதுக்கு பயம். எதுக்கு இவனைப் பார்த்து பயம் என்று யோசிக்க அவளுக்கு சட்டென்று ஒரு துக்கம் பரவியது.

முந்தைய அனுபவம் காரணம். முதல் புருஷன் காரணம். அவன் கொடுத்த கொலை நடுக்கம் காரணம். அந்த மோசமான அனுபவத்தால், மனம் பாழ்பட்டு நோயுள்ளதாகி அடிக்கடி இப்படியொரு சோதனை புத்தியை வைக்கக் கொள்ள ஆரம்பித்து விட்டது.

அவளும் இருபத்தோரு வயதில் அல்லது இருபத்து மூன்று வயதில் ஒரு அருமையான புருஷனோடு வாழ்ந்திருந்தால், அவளுக்கு இனிமையான ஒரு கணவன் வாய்த்திருந்தால், இந்த திருட்டு எண்ணங்கள் வந்திருக்காது.

மிகவும் உண்மையாய் நூறு சதவீதம் நேர்மையாய் அவளும் இருக்க முயற்சித்திருப்பாள். வெற்றி பெற்றிருப்பாள்.

பொய் சொல்லி, பொய் சொல்லி, பயந்து பயந்து, ஏமாந்து, ஏமாற்றி வாழ்க்கையில் தொடர்ந்து பொய்யே வருகிறது. மாற முடியவில்லை.

அவள் துக்கம் அதிகமாகியது. கண்களிலிருந்து நீர் வழிந்தது. திரும்பி அவனைப் பார்த்தாள். அவன் பொய்யை ஒப்புக்கொண்டு நம்பியவன் அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தான்.

அவளுக்கு உறக்கம் அறவே போயிற்று. மேலே படர்ந்திருந்த அவன் கையை எடுத்து நகர்த்திவிட்டு அவள் கீழிறங்கினாள். பொய் முகம் துடைத்துக் கொண்டாள். தலையை வாரிக் கொண்டாள். மறுபடியும் லேசாய் பவுடர் போட்டுக் கொண்டாள். நகர்ந்து கதவு திறந்து பால்கனிக்குப் போனாள்.

தெரு உறங்கிக் கொண்டிருந்தது. அவள் உறங்கிக் கொண்டிருந்த தெருவை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். தெருவில் கூட கனகசபாபதி பளிரென்று

ஒரு முறை அறைந்திருக்கிறான். காய்கறிக்காரன் பயந்து போய் திகைத்து நின்றிருக்கிறான். காய்கறியை அதே தெருவில் விற்காமல் வண்டியை தள்ளிக் கொண்டு போய் தெருமுனையில் நின்று கூவியிருக்கிறான்.

கனகசபாபதி அவளை அடித்ததற்கு எந்தக் காரணமும் இல்லை. ஆனால் அவன் சொன்ன காரணம்தான் அந்த தெரு முழுவதையும் வியக்க வைத்தது. முட்டாள் என்று அவனை யோசிக்க வைத்தது. ஆனால், கனகசபாபதி மற்றவர் சொல்வதைப் பற்றி சிறிதளவும் அக்கறைப்படவில்லை.

"என்னடி... காய்கறிக் கடைக்காரன்கிட்ட கால் மணி நேரமா பேசிட்டிருக்கே. என்ன நான் ஒருத்தன் போறலையா உனக்கு" அவள் திகைத்து நிற்கும் போதே ஒரு அறை வாங்கினாள்.

மறுபடியும் அந்தக் காட்சி நிர்மலாவின் மனதில் திரைப்படமாய் ஓடியது.

## 2

பி.எஸ்-சி முடித்தவுடனேயே அவனுக்கு திருமணம் பேசத் துவங்கி விட்டார்கள். நாலைந்து பேர் பெண் பார்த்து விட்டுப் போனார்கள். வந்த நாலைந்து பேரையும் அவன் வீடுதான் வேண்டாம் என்று ஒதுக்கியது.

வந்தவர்கள் விருப்பத்தோடு திருமணம் செய்து கொள்ள முன் வந்தார்கள்.

இந்தப் பையன் கருப்பு. அந்தப் பையன் ரொம்ப நெட்டை. இவனுக்கு சம்பளம் போறல. இவன் மூஞ்சியைப் பார்த்தாலே நல்லா இல்லே. எங்கதான் கூப்பிட்டோமோ என்றெல்லாம் விமர்சனம் செய்தார்கள். அவனும் அந்த விமர்சனங்களில் கலந்து கொண்டான். அவனும் தனக்குப் பிடித்தது, பிடிக்கவில்லை என்பதை வேகமாக சொன்னான்.

அக்கம் பக்கத்தில் இதுபற்றி கேட்டபோது, "நல்ல இடத்துல பொண்ணைக் கொடுக்கணுங்க. காசு முன்னப் பின்ன ஆனாலும் பரவாயில்லே. காசு பத்தின கவலை எனக்கு இல்லை," என்று அவன் அப்பா, ஏகதாளமாகப் பேச, அப்பாவைவிட அதிகமான ஏகதாளத்துடன் அம்மா பேசினாள். "முத்தம்பது சவரன் நகை போட்டு கல்யாணம் பண்ணிக் கொடுக்கறதுக்கு தயாரா இருக்கோம். பையன் இருந்தா சொல்லுங்கோ. ஆனா, நல்ல பையனா இருக்கணும். எழுந்திருன்னா எழுந்திருக்கணும். உட்காருன்னா உட்காரணும். எங்க வீட்டுக் குழந்தையை உள்ளங்கையில்



வச்சுத் தாங்கணும்" என்று அதிரடியாய் பேசினாள்.

இப்படி யாரேனும் கட்டளை போடுவார்களா. இப்படி யாரேனும் விதிகள் சொல்வார்களா. ஆனால் அவன் வீடு கொஞ்சமும் கூச்சமில்லாமல் பெண்ணைத் தாங்குகின்ற பையன் வேண்டு மென்று எல்லோரிடமும் பேசியது.

அப்படிப்பட்ட பையன் இருந்தாலும், தான் அப்படிப்பட்ட பையன் என்று ஒத்துக் கொள்வானா என்பது பற்றி யோசிக்காமல் இருந்தது.

"இதற்கு காரணம் கொழுப்பு. காசுக் கொழுப்பு. கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் கொழுப்பாக மாறாது. கஷ்டப்படாமல் வந்த பணம்தான் கொழுப்பாக மாறும்."

அரசாங்க உத்தியோகத்தில் வருவாய் வாங்குகின்ற ஒரு பிரமாதமான இடத்தில் தகப்பனார் வேலை செய்து வந்ததால், அந்த வீட்டில் காசு தாராளமாய் புழங்கியது. எந்த வீட்டிலும் இல்லாத அளவுக்கு அந்த வீட்டில் திமிரான பேச்சுக்களும், செய்கைகளும் நடந்தன.

"உங்க வீட்டுக்காரரை யாரோ ஒரு பெண்ணோட பார்த்தேன்."

"அப்படியா. சரி" அம்மா சாதாரணமாகச் சொல்வாள்.

"அவர் கூட வேலை செய்றவளா இருக்கும். கொஞ்சம் செகப்பா குள்ளமா இருப்பாளே, அந்தப் பொண்ணுதானே" என்று அம்மா கேட்டாள்.

"அப்படித்தான் இருந்திச்சு. ஆனா, கூட வேலை செய்யறவங்களா இல்லை. ஆம்படியான் பொண்டாட்டி மாதிரி நடந்துகிட்டாங்க."

"இருந்துட்டுப் போகட்டுமே. நமக்கென்ன. நம்மள வந்து பிடுங்காத இருந்தா சரி" என்று அம்மா அறுத்துக் கொண்டாள்.

புகார் சொன்னவர் முகம் வெளிறி திரும்பிப் போனார்.

எவன் எவன்கூட சுத்துறாங்கன்னே அலையறானுங்க. இவனுக்கு சுத்தவும் முடியல. சுத்துறத பார்க்காத இருக்கவும் முடியல. உள்ளுக்குள்ள பொறாமை. எல்லாரையும் அடிச்சுப் போட்டு பார்க்கணும்னு. ஆனா இவன் பேச்சை சொந்த பொண்டாட்டியே கேட்கமாட்டாள். என்ன பண்றது. அவன் காது படவே அம்மா உள்ளுக்குள் வந்து பேசுவாள்.

லஞ்சமாக அறுபதாயிரம் வந்தால், அந்த வீட்டின் நடவடிக்கைகள் முன் பின்னாகத்தான் இருக்கும்.

அப்பா லஞ்சம் வாங்க ஆரம்பித்த முதல் நாள்

இன்னும் தெளிவாக ஞாபகம் இருக்கிறது. ராமநாதபுரத்திலிருந்து மாற்றி சென்னைக்கு வந்த போது எப்படி இந்த பதவி மாற்றம் கிடைத்தது என்று பலரும் வியந்தார்கள். சென்னைக்குப் போய் இறங்கியதும் ரயில்வே ஸ்டேஷனில் ஆறு ஏழு பேர் காத்துக் கிடந்தார்கள். கைப் பெட்டியை வாங்கிக் கொண்டார்கள். வாப்பா என்று கொஞ்சினார்கள். வாங்கம்மா என்று அம்மாவை மரியாதையாக கைகூப்பி வரவேற்றார்கள்.

ஒரு மந்திரியைப் போல, பெரிய கட்சியின் தலைவரைப் போல மாலையிட்டு வரவேற்றார்கள். கையில் எலுமிச்சம் பழம் கொடுத்தார்கள். நிர்மலாவிற்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. வீட்டுக்குப் போனதும் அம்மாவின் காதில் கிசுகிசுத்தாள்.

"என்ன, எதுக்காக இப்படிப் பண்றாங்க."

"இந்த ரொம்ப செல்வாக்கான இடண்டி. அப்பா அப்பவே சொன்னாரு. மெட்ராசுக்குப் போனா உன் நிலைமையே மாறிப் போயிடும்னு. சரி என்னா இப்போ, அப்படின்னு நெனைச்சேன். இவ்வளோ மாறும்னு தோணல. அப்பாவுக்குக் கூட இது அதிசயமாகத்தான் இருக்கும்னு நெனைக்கறேன். இதுவரைக்கும் ஒன்னும் பேசல" என்று சொன்னாள்.

நந்தனத்துக்கு அருகே, தனித்தனி அரசாங்க பங்களாக்கள் இருக்கும் தோட்டத்தில் ஒரு பங்களாவில் தங்க வைக்கப்பட்டார். வரவேற்பறை, பெரிய ஹால், இரண்டு படுக்கை அறைகள், ஒரு படிப்பு அறை, ஒரு சமையல் அறை, பெரிய வராண்டா, துணி உலர்த்திக் கொள்ள தனி இடம் என்றெல்லாம் இருந்தது.

சோபாக்களும், மேசைகளும், கட்டில்களும் அலமாரிகளும், டீபாய்களும், நல்ல தேக்கு மரத்தில் செய்யப்பட்டவைகளாக வீடு முழுவதும் நிரம்பிக் கிடந்தன. அம்மாவும் பொண்ணும் பொங்கிவரும் ஆனந்தத்தை கட்டுப்படுத்திக் கொள்ள முடியாமல் துள்ளிக் குதித்தார்கள்.

அம்மாவைக் காண்பதற்கு அதிகாரிகள் மனைவிகளோடு வந்தார்கள். அந்த மனைவிகள் வெறும் கையோடு வராமல், இனிப்புகளும், சிறிய பரிசுகளும் கொண்டு வந்தார்கள். ஒரு அம்மாள் முழங்கை உயர குத்துவிளக்கு கொண்டு வந்திருந்தாள். அதை வாங்கிக் கொள்ளும்படி சொன்னாள். அந்த அம்மாவுக்கு வயது முப்பத்தைந்துதான் இருக்கும். ஆனால், களையாக இருந்தாள். அப்பா அந்த குத்துவிளக்கை வாங்க



மறுத்துவிட்டார் திருப்பிக் கொடுத்துவிட்டார்.

"நான் ஒரு அரசாங்க அதிகாரி. இப்படியெல்லாம் கை நீட்டி சக அதிகாரிகளிடம் வாங்கினால் அது நன்றாக இருக்காது. இப்படி செய்வது எனக்குப் பிடிக்கவில்லை என்று உங்கள் கணவரிடம் சொல்லுங்கள்" என்று மிக இதமாக சொல்லி திருப்பி அனுப்பிவிட்டார்.

அந்த அம்மாள் வராண்டாவில் நின்று சிறிது நேரம் அழுதுவிட்டுப் போக, அப்பா திரும்பவே இல்லை. அம்மாவுக்கும் நிர்மலாவுக்கும் இது புரியவே இல்லை.

என்ன விஷயம் என்று அம்மா கேட்க, "லஞ்ச வழக்கில் அவள் புருஷன் மாட்டிக் கொண்டு தவிக்கிறான் என்றும், அதை ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டியது தன் கையில் இருக்கிறதென்றும், அதற்காக தன்னை குளிர்விக்கும் முகமாய் இப்படி செய்கிறார்கள்" என்றும் அப்பா சொன்னார். தான் மிகவும் கடுமையாகவும், நேர்மையாகவும் இருக்கப் போவதாக அறிவித்தார். ஆனால் அம்மாவுக்கும் நிர்மலாவுக்கும் அந்த பெண்மணியைப் பார்த்தால் பாவமாக இருந்தது. அம்மா மெல்ல தன் கருத்தை வெளியிட, "இவள் அவனுடைய மனைவியா என்பதே எனக்கு சந்தேகமாக இருக்கிறது. அவன் மனைவியைப் பற்றி வேறு விதமாகச் சொன்னார்கள். இவள் என்னடா என்றால் மிரட்டிக் கொண்டு வருகிறாளே" என்று அப்பா சொன்னார்.

மறுபடியும் அம்மாவும் நிர்மலாவும் திகைத்தார்கள்.

மனைவி என்றுதானே வந்தாள். மனைவி என்றால் உண்மையான மனைவி அல்ல. சும்மா வைத்துக் கொண்டிருக்கிறான். இவளோடு தொடர்பு ஏற்பட்ட பிறகுதான் நிறைய தவறுகள் செய்ய ஆரம்பித்துவிட்டான். அவன் மனைவியை புறக் கணித்து விட்டான். அவன் மனைவி இவனுடைய அட்டகாசம் தாங்காமல், அவனிடமிருந்து பிரிந்து தனியே தன் குழந்தைகளோடு தகப்பனார் வீட்டுக்குப் போய்விட்டாள் என்று சொல்ல, அம்மாவுக்கும், நிர்மலாவுக்கும் அந்த பெண்மணியின் மீது கோபம் வந்தது.

மறுநாள் அப்பா இல்லாத நேரத்தில் அந்தப் பெண்மணி வந்து, வாசல் கதவில் நின்று அழுதபோது அம்மாவுக்கு கோபம் வந்துவிட்டது.

"இந்தா, நீ வேற எங்கயாவது போய் அழு. இங்கெல்லாம் வராதே. ஒரு நல்ல குடும்பத்தை குலைச்சிட்டு எப்படி நல்லாருக்க முடியும்" என்று கோபமாகக் கத்த, அவள் பணிவோடு தன்னுடைய கதையைக் கேட்குமாறு வேண்டினாள். உள்ளே வந்து உட்கார அனுமதி கேட்டாள்.

அம்மா இரக்கப்பட்டு உள்ளே உட்கார அனுமதி கொடுத்து காபியும் கொடுத்தாள்.

அவள்தான் முதல் மனைவி என்றும், வெளியே தெரியாமல் ரகசியமாய் காதலித்தார்கள் என்றும், வேறு வேறு ஜாதிகள் என்றும், ரகசியமாய் ரிஜிஸ்டர் கல்யாணம் செய்து கொண்டார்கள் என்றும், அதை வெளியே சொல்லாமல் மறைத்து வைத்திருந்தார்கள் என்றும், வெளியே தெரிந்தபோது அந்தக் கணவனை அடித்து இழுத்துக் கொண்டு போய் சொந்தத்தில் கல்யாணம் செய்துவிட்டார்கள் என்றும், எனவே தன்னுடைய கல்யாணம் முதல் கல்யாணமாக இல்லாமல் அந்தக் கல்யாணமே முதல் கல்யாணமாக இருக்கிறது என்றும், தான் சட்டப்படி நடவடிக்கை எடுத்தால் அந்தப் பெண்ணுக்கு நிம்மதி போய்விடும் என்பதால், நிராதரவாய் அவள் போய்விடுவாள் என்பதால், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதாகவும் சொன்னாள்.

தான் கையோடு கொண்டு வந்திருந்த திருமணப் பத்திரங்களைக் காட்டினாள். அவளுக்கு ஒரு பையனும் பெண் குழந்தையும் இருப்பதாகச் சொன்னாள். அவர்களுடைய படமும் காட்டினாள். குழந்தைகள் மிக அழகாக இருந்தார்கள். அவள் மேல் மறுபடியும் பரிதாபம் பற்றிக் கொண்டது.

"சரி, என்ன தப்பு பண்ணாங்க, என்ன செய்யணும்னு நினைக்கறே" என்று ஒரு அதிகாரியைப் போல அம்மா விசாரிக்க ஆரம்பித்தாள்.

அங்குதான் தீவினை பிடிக்க ஆரம்பித்தது. பெரிய தொகை லஞ்சம் வாங்கியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு, அதற்கான சாட்சிகளும் தயார் செய்யப்பட்டு, ஒருமுறை விசாரிக்கப்பட்டு, விசாரிக்கப்பட்டது ஏற்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் முறை விசாரிக்கப்பட்டு தீர்ப்பு சொல்லப்பட வேண்டும்.

இப்பொழுது விசாரித்தால் முன்பு சாட்சி சொன்னவர்கள் எல்லோருமே பல்டி அடிக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, முதல்முறை சரியாக விசாரிக்கவில்லை என்கிற தன் கணவருடைய புகாரை ஏற்றுக் கொண்டு இரண்டாம் முறை இந்த சாட்சிகள் அனைவரையும் விசாரித்து அவர்கள் நேர்மையாய் சாட்சி சொல்ல இந்த வழக்கை தள்ளுபடி செய்துவிட வேண்டும் என்பது அவளுடைய விருப்பம்.

"இது எங்க வீட்டுக்காரரால முடியுமான்னு தெரியலையே."



"நிச்சயம் முடியும். அவர் ஒருத்தராலதான் முடியும். வேற யாராலயும் முடியாது. அவருக்கு அந்த அதிகாரம் இருக்கு. அவர் செய்தா நாங்க உயிரோட இருப்போம். இல்ல, தீர்ப்பு எங்களுக்கு பாதகமாக இருந்தா, குடும்பத்தோட தற்கொலை பண்ணிக்குவோம்" என்று சொல்லி விசும்பிட்டு அழ, அம்மா அவளை சமாதானப்படுத்தினாள். இன்னொரு காபி போட்டுக் கொடுத்தாள்.

பதினோராம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த நிர்மலாவுக்கு இந்த காட்சிகளெல்லாம் விநோதமாக இருந்தன. பேச்சுக்களெல்லாம் புதிதாக இருந்தன.

"சரி, என் கதை கிடக்கட்டும். மெட்ராசுக்கு வந்து எதுனா கதி பார்த்தீங்களா எங்கையாவது போனீங்களா" என்று கேட்டாள்.

"எங்க. வந்த உடனேயே அவருக்கு வேலை தொடர்ந்தாப்ல ஜாஸ்தியா போயிடுச்சு."

"நீங்க அவரையெல்லாம் நம்பிட்டிருந்தீங்கன்னா நல்லாருக்காது. நான் கூட்டிட்டு போறேன். அவர்கிட்ட ஒரு பர்மிஷன் மட்டும் வாங்கித் தாங்க" என்று சொல்ல, அப்பா சிரித்தபடி அனுமதி கொடுக்க, அவள் தன் குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு வந்து, அம்மாவையும் நிர்மலாவையும் வாடகைக் காரில் ஏற்றி, சென்னையின் பல இடங்களுக்கு அழைத்துப் போனாள்.

அவள் உடுத்துவதும், நிற்பதும், திரும்புவதும், சிரிப்பதும் அம்மாவுக்கும், நிர்மலாவுக்கும் ஆச்சரியமாக இருந்தன.

முகத்திற்கு என்ன தடவிக் கொள்ள வேண்டும். எப்படி புருவம் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். எப்படி உதட்டுக்கு சாயம் எழுத வேண்டும். எப்படி கண்களுக்கு மை தீட்ட வேண்டும். எந்த க்யூடெக்ஸ் நன்றாக இருக்கும். இரவு படுத்துக் கொள்ளும்போது தடவிக் கொள்ளுகின்ற க்ரீம் எத்தனை எத்தனை. பகலில் விடிந்த பிறகு முகம் கழுவிய பிறகு பூசிக் கொள்ள வேண்டிய க்ரீம் எவ்விதம் என்பதெல்லாம் சொல்லிக் கொடுத்தாள்.

"தப்பான சைஸ் ப்ரா போட்டிட்டிருக்கியே. உத்துப் பார்த்தா எடா கூடமா இருக்கறது தெரியுது. வா. உனக்கு சரியான சைஸ் வாங்கித் தரேன்" அவள் ஒரு கடைக்கு கூட்டிக் கொண்டு போய், சிறிய கண்ணாடி அறையில் நிர்மலாவை உட்கார வைத்து, முற்றிலும் உடைகளை களைந்து, பல்வேறு விதமான ப்ராக்களை மாட்டி அழகு பார்த்து, சரியான ஒன்றை தேர்ந்தெடுத்து, அளவை குறித்துக்

கொள்ளச் சொன்னாள்.

"இதுதான் மகள். அப்பப்ப பார்த்துக்கிட்டே இருக்கணும்" என்றெல்லாம் சொல்லிக் கொடுக்க, அவனுக்கு அந்த உதவி மிகப் பெரியதாக தோன்றியது.

"ஆன்ட்டி, ஆன்ட்டி" என்று அந்தப் பெண்மணியை நிர்மலா சுற்றிச் சுற்றி வந்தாள்.

"அடுத்த வாரம் கேஸ் வரப்போவுதுங்க. உங்கள் வீட்டுக்காரர்கிட்ட தயவு செய்து ஒரு வார்த்தை சொல்லுங்க" என்று அவன் தாழ்மையோடு கேட்டுக் கொள்ள, அம்மாவும் மகளும் அப்பாவிடம் உரு ஏற்றினார்கள்.

"யார் வாங்கலை. இவர் ஒருத்தர் மாட்டிக்கிட்டார். அதனால தெரியுது" என்று சொல்ல, "சரி, அவனை வந்து பேசச் சொல்லு. சும்மா பொம்பளையை அனுப்பிச்சு என்ன விளையாட்டு" என்று அப்பா சீறலாய் சொல்ல, அவர்கள் உடனே போன் செய்து இந்த தகவலை தெரிவித்தார்கள்.

அந்த மனிதன் வந்து அப்பாவின் காலில் விழுந்து, கால்களை கெட்டியாகப் பற்றிக் கொண்டு ஓவென்று அழுதான்.

அப்பா மௌனமாக இருந்தார்.

எழுந்து உட்கார்ந்து குசுகுசுவென்று பேசினார்.

"இங்க நான் வர்றதும், பேசறதும் நல்லாயிருக்காது அப்பா. இந்த இடத்துக்கு நான் வந்தா அக்கம் பக்கத்துல இருக்கறவங்க பார்த்துட்டு, நம்ம அலுவலகத்துக்கு சொல்லிடுவாங்க. நான் உடனே போயிடறதுதான் நல்லது. இன்னும் நீங்க தெளிவா எங்கிட்டேயிருந்து கேக்கணும்னா, கொஞ்சம் என் இடத்துக்கு வந்துருங்க" என்று கேட்க, அப்பா சரியென்று உறுத்திக் கொண்டு கிளம்பினார்.

அவன் முன்னே ஆட்டோவில் போய்விட, அப்பா காரில் ஏறி அவர்கள் வீட்டுக்குப் போய் வருவதாக சொன்னார்.

"அவனை மறு விசாரணைக்கு உத்தரவு போட்டிருக்கேன். சாட்சிகளை விலைக்கு வாங்கி, அவன் லஞ்சம் வாங்கலைங்கறதை சொல்லிட்டாங்கன்னா, எனக்கு தீர்ப்பு சொல்றது எளிதாயிடும். சாட்சி முதல்ல அப்படி சொன்னவங்க இப்ப ஏன் இப்படி சொல்றாங்கன்னு ஒரு கேள்வி வரும். அந்தக் கேள்வியும் கேட்பேன். அதுக்கும் அவங்க சரியான பதில் வச்சிருந்தாங்கன்னா, எல்லாம் சரியா முடிஞ்சுடும். என்னைத் தவிர இன்னொரு அதிகாரியும் இருக்கார். அவரையும் சரிகட்டணும். 'என்ன பண்ணப்



போறான்னு தெரியலை" என்று கவலையோடு சொல்ல, நிர்மலாவும் அம்மாவும் கவலைப்பட்டார்கள்.

அந்தப் பெண்மணி வந்து நாளை மறுநாள் விசாரணை இருக்கிறது என்று சொல்லிவிட்டு, அம்மாவை நமஸ்கரித்துவிட்டு, அப்பாவையும் நமஸ்கரித்துவிட்டுப் போனாள்.

"நான் பார்த்துக்கறேன் போங்க. கவலைப்படாதீங்க. மறுபடியும் இந்த தப்பு செய்யாதிருந்தா நல்லாயிருக்கும்" என்று கம்பீரமாகச் சொல்ல, "இனி வாழ்நாளில ஒருத்தர் கிட்டேயும் கை நீட்ட மாட்டாருங்க" என்று அவள் சத்தியம் செய்தாள்.

"பாப்பாவுக்கு ஒன்னும் நீங்க நல்ல நகையே செய்யலையே. ஒரு தடவை நான் தங்க மாளிகை கூட்டிட்டு போகட்டுமா. அங்க எனக்கு தெரிஞ்சவங்க இருக்காங்க. நல்ல நகைகள் நியாயமான விலையில நல்ல வேலைப்பாட்டோட கிடைக்கும்" என்று சொன்னாள்.

அப்பாவும் சரி என்று தலையசைத்தார்.

"எத்தினி பவுன் நகை வச்சிருக்கீங்கம்மா" என்று அம்மாவை கேட்க, "பதினாறு பதினேழு இருக்கும்னு நெனைக்கிறேன்."

"என்ன நெனைக்கிறீங்க. ஒரு பொண்ணு, கல்யாண வயசிருக்கு. பதினாறு பதினேழு பவுன் எப்படி போதும். குறைஞ்ச பட்சம் முப்பது பவுனாவது வெச்சிருக்க வேணாமா. உங்ககிட்ட நூறு பவுன் இருக்கும்னு நெனைச்சேன்."

"நூறா. எங்கிட்டயா. அவ்வளவு ஏது வருமானம்" என்று அம்மா வாய் பிளக்க, "உங்க அப்பா நினைச்சா ஆயிரம் பவுன் வாங்கலாம்" என்று அவள் சொல்லி கண் சிமிட்டினாள்.

அம்மாவுக்குப் பிடிக்கவில்லை. ஆனால் நூறு பவுனாவது வேண்டுமென்ற ஆசை அம்மாவைப் பற்றிக் கொண்டது.

"அப்பா. உங்ககிட்ட தனியா நாலஞ்சு வார்த்தைகள் பேசணும்பா" என்று சொல்ல, அவளும் அப்பாவும் படுக்கை அறைக்குப் போய் கதவு திறந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

நிர்மலா பார்த்துக் கொண்டிருக்கும்போது, எதிரும் புதிருமாய் உட்கார்ந்து கொண்டு ரகசியமாய் அவள் ஏதோ சொல்ல, அப்பா சரி, சரி என்று கேட்டுக் கொண்டார். நடுவே பின்பக்கம் போவதற்காக வந்தார்.

"என்னங்க பேசுனீங்க ரெண்டு பேரும்" என்று அம்மா

கல்லைப்போடி கேட்க சாட்சியங்களை எப்படி கலைக்கணும் பண்ணியிருக்கு எப்படி சொல்லணும் அப்படின்னு விலாவாரியா எழுதிட்ட சொல்றாங்க. யார் யார் என்ன சொல்லணுங்கன்னு ஒரு விவரம் சொல்றாங்க. அதை நான் முன் கூட்டியே தெரிஞ்சுகிட்டாத்தான் அவங்களை விசாரிக்கறது சௌகரியமா இருக்கும் சிறுவாலே இங்க வந்திருக்காங்க" என்று சொன்னார்.

"இதை அந்த அய்யா வந்து சொல்லக் கூடாதா?"

"அந்த அய்யா இங்க அடிக்கடி வரக்கூடாதுங்க. அதனாலதான் இவளை அனுப்பறாங்க."

"இவ மகா சாமார்த்தியமா இருக்கா."

"அந்த ஆளுக்கு ஒண்ணும் தெரியலை. இவதான். இவ கெட்டிக்காரத்தனத்துனாலதான் அந்த குடித்தனமே ஓடுது" என்று அப்பா புகழ்ந்தார்.

"நான் சாயந்தரமா வரச் சொல்லியிருக்கேன். நீயும் உம் பொண்ணும் அவங்களோட காரில தங்கமாளிகைக்கு போய் இறங்கிக்குங்க. அவங்க நல்ல நகைகள் வாங்கித் தருவாங்க. குழந்தைக்கு போட்டுப் பார்த்து எடுத்துட்டு வா."

"காசு."

"தங்க மாளிகைல எம் பேர் சொன்னா கொடுத்துருவாங்க. அதுவும் இவங்க போறதுனால நாம மறுநாள் காசு கொடுக்கலாம். ஒண்ணும் கவலை இல்லை" என்று அப்பா சொன்னார்.

அன்று மாலை பதினொன்னரை பவுன் நகைகள் வாங்கினார்கள். குறிப்பாய் ஒரு ஆறு சவரனுக்கு ஆரம் வாங்கி அவள் கொடுக்க கழுத்துக்கு மிக நிறைவாக அந்த நகை இருந்தது.

நிர்மலா தேவதை மாதிரி அந்த நகையில் இருந்தாள்.

அந்தப் பெண்மணி அப்பாவிடம் காசு கொடுத்திருக்க வேண்டும். அந்தப் பெண்மணியின் புருஷன் எப்படி பெல்லாம் லஞ்சம் வாங்கினேன் என்று அப்பாவிடம் ஒப்புதல் வாக்கு மூலம் தந்திருக்க வேண்டும். லஞ்சம் வாங்கியதைப் பற்றி கூடுதலாகவும் சொல்லியிருக்கக் கூடும்.

அவர்கள் மிகமிக தந்திரசாலிகள். லஞ்சம் வாங்கியதைப் பற்றி சொல்லச் சொல்ல, இப்போது அந்த இடத்தில் இருக்கின்ற அந்த அதிகாரிக்கு லஞ்சம் எப்படி வாங்குவது என்று தெரிந்து விடும். அப்படித் தெரிந்து விட்டால் வாங்குவதற்குண்டான மிகப் பெரிய பேராசை ஒன்று மனதில் கிளரும். நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம்



வாங்கவும் கூடும்.

மிக கெட்டிக்காரராக இருந்தால் மிக சத்திய சீலராக இருந்தால்தான் அந்த பத்து சதவீதம் யோசித்து வேண்டாம் என்று புறம் தள்ளியிருக்க முடியும். ஆனால் அப்பா எளிதில் மாட்டிக் கொண்டார்.

லஞ்சம் வாங்குவதில் மட்டும் அல்ல அந்தப் பெண்மணியின் தொடர்பில், இளமையில், சிரிப்பில், பேச்சில், புகழ்ச்சியில் மயங்கி லஞ்ச விசாரணை என்கிற பெயரில் அவர்கள் வீட்டிற்குப் போய் உட்கார்ந்து அவர்களோடு பேச ஆரம்பித்தார்.

அவர் வந்து சிறிது நேரம் பேசியதும், சிற்றுண்டி எடுத்துக் கொண்டதும் புருஷன் சரி, வெற்றிலை பாக்கு வாங்கி வருகிறேன் என்று வெளியே போய்விடுவாராம். வெளியே போன பிறகு கதவை மனைவி தாழிட்டு விடுவாளாம். உள்ளுக்குள்ளே முழுச் சாப்பாடே நடக்குமாம்.

அந்த வீட்டு வேலைக்காரி கிளம்பி இந்த வீட்டிற்கு வந்து அம்மாவிடம் ஆறு மாதம் பொறுத்துப் பேசினாள்.

ஆனால் அம்மாவுக்குப் பயம். அப்பாவை அதட்டிக் கேட்க பயம். கேள்வி எழுப்ப பயம். மெல்ல 'சரி. இருந்துட்டு போகட்டும் என்ன செய்யறது' என்று மௌனமாய் இருந்தாள்.

'நம்மள நல்லா கவனிக்கறாரு. உனக்கு நல்ல துணிமணி வாங்கித் தர்றாரு. நாலு பேருக்கு முன்னாடி கௌரவமா நடத்தறாரு. எங்கேயோ ஒரு ஆத்திரம் ஏதோ ஒரு பொம்பளை. அவங்க... சங்காத்தம்னு இருக்கு. அவருக்கு இவன் ஏதோ செய்து இவனுக்கு அவர் ஏதோ செய்யறார். இருந்துட்டு போகட்டும்' என்று அம்மா பெருந்தன்மையாக விட்டு விட்டாள்.

அம்மா விட்டுவிட்டது அப்பாவுக்கு தெரிந்து போயிற்று. அப்பெண்மணியோடு உறவு அதிகமாயிற்று. அவளோடு உறவு அதிகமாக அதிகமாக லஞ்சம் வாங்குவதும் அதிகரித்தது.

உலகத்தில் லஞ்சம் கொடுப்பவரால் லஞ்சம் வாங்குபவருக்கு ஆபத்து என்பது மிக மிகக் குறைவு. லஞ்சம் கொடுத்துவிட்டு காரியம் ஆக வேண்டும் என்றுதான் நினைப்பார்களே தவிர காட்டிக் கொடுப்பவர்கள் அதிகம் இருக்கமாட்டார்கள். ஆனால், லஞ்சம் வாங்குபவருக்கு அருகே இருக்கின்ற லஞ்சம் வாங்காத ஆனால் லஞ்சம் வாங்க வேண்டும் என்று பேராசை உள்ள ஆட்களால் ஆபத்து மிக அதிகம்.

லஞ்சம் வாங்கி, தண்டனையிலிருந்து அப்பாவினால் தப்பித்த அந்த ஆள், இந்த் கூட சமயத்தையும் சொல்லி சோறிக்க அப்பா தனது இயல்பான கெட்டிக்காரத்தனத்துடன் சுறுசுறுப்பாக செயல்பட்டார்.

தனக்கு மிக அருகே அப்பாவியான ஆட்களை மாற்றினார். அதிகம் எதிர் பேசுகிறவர்களை தொலை தூரத்திற்கு அனுப்பினார். தனக்கு சிறிய காசுகளுக்காக எதுவும் செய்ய தயாராக இருக்கின்ற நபர்களை தேர்ந்தெடுத்து, பேசி, அவர்களை சற்று தூரத்தில் வைத்துக் கொண்டார்.

சனியும், ஞாயிறும்தான் அப்பாவின் லஞ்ச நாட்கள். அன்றைக்கு அம்மாவை சுறுசுறுப்பாக இருக்கும்படியாகவும் அதிகம் காபிகள் தயாரிக்கும்படியாகவும் சொன்னார்.

மனைவியையும் மகளையும் ஒருதிமிட நோக்... வாயாழந்து அறிமுகப்படுத்துவார். தனக்கு திருமண வயதில் மகள் இருப்பதால் செலவு அதிகம் இருக்கிறது என்று மிகவும் பொறுப்பான ஒரு குடும்பத் தலைவன் போல் முகம் வைத்துக் கொள்வார்.

நிர்மலாவுக்கு அப்போது பதினேழு வயது. பள்ளி ஒன்றில் படித்துக் கொண்டிருந்தாள். வாழ்க்கையை உற்றுப் பார்க்க ஆரம்பித்தாள். ஆண்களைப் பற்றி அதிகம் தெரிந்து கொண்டாள். சினிமாவில் கதைகளில் வரும் சம்பவங்களை மறுபடியும் யோசித்து, 'ஏன் இப்படி செய்கிறார்கள், ஏன் இப்படி அழுகிறார்கள்' என்று ஆராய ஆரம்பித்தாள். சில கெட்டிக்கார தோழிகளிடம் கேள்விகள் கேட்டு அவர்கள் சொல்வதை குறித்துக் கொண்டாள்.

அவளுடைய தோழி ஒருத்தி கட்டுரைகள் படிக்க சொல்லிக் கொடுக்க, பல கட்டுரைகள் படிப்பது அவளுக்கு எளிதாயிற்று. ஆரம்பத்தில் கிரமமாய் இருந்த அந்த விஷயம், தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் பலப்பட்டபோது, கதைகள் படிப்பதைவிட கட்டுரைகள் படிப்பதில் மனம் லயித்தது.

வீட்டில் காசு இறைபட்டது.

"அப்பா, பசங்களோட எக்ஸ்கர்ஷன் போய் வரட்டுமா?"

"போயிட்டு வாடி தங்கம். வேணும்னா அம்மாவையும் கூட்டிக்கிட்டு போ."

"அய்ய... அம்மாவையெல்லாம் கூட்டிக்கிட்டு போக முடியாது."



"அப்போ நீ இல்லாத அம்மா தனியாவா இருப்பா?"

"வேற வழியில்லையே."

"அம்மாவை அவங்க தங்கச்சி வீட்டுக்கு அனுப்பிச்சுரு. நீ எக்ஸ்கர்ஷன் போயிட்டு வா. எப்ப போறே எப்போ வர்றே, எத்தனை நாள் போகப் போறே?"

"ஒரே நாள்தாம்ப்பா. காலைல போயிட்டு சாயந்திரம் வந்திருவோம்."

"எத்தனை பேர் போறீங்க?"

"என் கிளாஸ் பசங்க அத்தனை பேரும்ப்பா. நாற்பது பேர் போறோம்."

"இந்தா பத்தாயிரம் ரூபாய் வைச்சுக்கோ. யாரையும் சாப்பாடு கொண்டு வரச் சொல்லாதே. கையை வீசிட்டு சந்தோஷமா வரட்டும். பவுடர் டப்பா, மேக்கப் சாமானோட வரட்டும். மத்ததை எல்லாம் நீ பார்த்துக்க. ஒரு ஹோட்டல்ல சொல்லி மத்தியான சாப்பாடு, நொறுக்குத் தீனி எல்லாம் ஏற்பாடு பண்ணிக்க."

"எந்த ஹோட்டலப்பா, எப்படி எடுத்துகிட்டு போறது?"

"ஓ, உனக்கு அது வேற சொல்லித் தரணுமா. இரு. நான் சொல்றேன்."

அப்பா யோசித்தார். அலுவலகத்துக்கு போன் செய்து ஒரு பையனை வரச் சொன்னார்.

அந்தப் பையன் தற்காலிக வேலைக்காரன். அலுவலகத்தில் குமாஸ்தாவாக வேலை செய்ய வந்தவன். ஆனால், குமாஸ்தா வேலையைத் தவிர மற்ற எல்லா வேலைகளையும் செய்வதற்கு அப்பா அவனை ஏவிக் கொண்டிருந்தார்.

"இவரைப் போய் பார்த்துவா. அவரைப் போய் பார்த்துவா. அவன் போன் செய்ய மாட்டேன் என்கிறான், உடனே போன் செய்யச் சொல். இங்கே என்ன நடக்கிறது என்று தெரிந்து கொண்டு வா" என்று அவனிடம் பல்வேறு விஷயங்கள் ஏவினார். பணத்தை மட்டும் தானே நேரடியாக கவனித்துக் கொண்டார்.

வேலை, அப்பாவினால் நிரந்தரமாகும் என்ற கனவில் இருந்த அந்தப் பையன், உழைப்பதற்கு அஞ்சாமல் ஓடி ஓடி வேலை செய்தான்.

"முத்துசாமி" என்று அப்பா எங்கிருந்து குரல் கொடுத்தாலும் ஓடிப் போய் அவருக்கு எதிரே பணிவாக

நிற்பாள். அந்தப் பணிவுதான் அவனை அதிகம் வேலை வாங்கத் தூண்டியது.

ஒருதரம் கூட ஒருவரிடம் கூட அவன் எதிர்பாராதது நடந்ததே இல்லை.

யார் கோபித்துக் கொண்டாலும் முகம் தூக்கியதில்லை. எத்தனை சீறினாலும் பயந்து பின் வாங்கியதில்லை. மன்னிச்சுக்குங்க, மன்னிச்சுக்குங்க என்று சொல்லி அவன் வேகவேகமாய் அடுத்த வேலைக்கு நகர்ந்து கொள்வான். வசவு வார்த்தைகள் அவனை எதுவுமே செய்ததில்லை.

இதை அம்மாவும் பெண்ணும் பலமுறை பார்த்து வியந்திருக்கிறார்கள். அவனை கேட்டிருக்கிறார்கள்.

"அய்யா அப்படித்தான் செய்வாங்க. நாம பிரண்டுமா தப்பை திருத்திக்கணும்" என்று உடனடியாகச் சொல்வான்.

முத்துசாமியை வரவழைத்து அவனிடம் ஐந்நூறு ரூபாய் கொடுத்தார்.

"நாற்பது பேருக்கு காலையில் இனிப்போடு டிபன், காபி. மத்தியானம் இனிப்போடு சாப்பாடு. பிற்பகல் திரும்பி வரும்போது இனிப்போடு ஒரு சிறிய நொறுக்குத் தீனி பொட்டலம். காபி நடுவே, தாகமாக இருக்கிறது என்றால், எல்லோருக்குமே குளிர்பானம்" என்று பட்டியலிட்டார்.

வேறு என்ன வசதிகள் செய்து தர வேண்டுமோ அத்தனையும் செய்து தர இந்தக் காசை உபயோகப்படுத்தச் சொன்னார்.

"எங்கையாவது தப்பு நடந்துச்சுன்னு தெரிஞ்சுது. மவனே வெட்டிப் போட்டுருவேன்" என்று உரக்கக் கத்தினார்.

"மாட்டேன்யா. மறந்து போய் கூட தப்பா எதுவும் நடக்க மாட்டேன். உங்க மனசு கோணாதபடி நடந்துக்குக்குவேன் அய்யா."

அவன் உடனடியாக பதில் சொன்னான்.

மிக மிக அநியாயத்துக்கு பணிவாக இருப்பவர்களை நம்பக் கூடாது என்று அவருக்கும் தெரிய வில்லை. அவளுக்கும் தெரியவில்லை. அவள் அம்மாவுக்கும் தெரியவில்லை.

இயல்பான மனிதருக்கு பணிவு, ரோஷம் இரண்டுமே கலந்திருக்கும்.

எல்லையில்லாத பணிவு என்கிறபோது அது நாடகம் என்று புரிந்து கொள்ள வெகு சிலராலேயே முடியும்.



பள்ளிக் கூடம் அவள் உபசரணையைச் சொன்னபோது திகைத்தது.

எங்கள் அப்பாவே தானே முன் வந்து இதைச் செய்தார் என்று சொன்னபோது, அவள் உடனே ஒரு நன்றிக் கடிதம் எழுதி அப்பாவிடம் கொடுத்தாள். மிக சந்தோஷமாக அவர் மதிப்பை எப்படி விபரம் தெரிவித்திருந்தாள்.

அப்பா அதில் மகிழ்ந்து போய் கூடவே ஒரு எடுபிடி ஆளையும் போட்டனுப்ப, அவன் கன கச்சிதமாய் காரியங்கள் செய்தான். அவர்கள் அதைப் பற்றி எந்த கவலையும் கொள்ளாதவாறு மிக அழகாக உணவு வகைகளை நிர்வகித்தான். அவர்களோடு பஸ் உள்ளே நுழைப்பட்டால் அவர்கள் வெட்கப் படுவார்கள் என்பதால் அவனும் அந்த எடுபிடியும் சாமான்களோடு பஸ்ஸின் கூரையில் ஏறிக் கொண்டார்கள்.

உணவு வகைகளுக்கு இரவு முழுவதும் அலைந்ததால் அவன் தோணியை கீழே விரித்தும் தலைக்கு பிளாஸ்டிக் பை முண்டலை வைத்தும் ஆழ்ந்து தூங்கிப் போனான். மகாபலிபுரம் வந்ததும் இறங்கினான். எல்லோரையும் வட்டமாய் உட்கார வைத்து காலை உணவு பரிமாறினான்.

பெற்றோர்கள் இல்லாமல் பெரியோர்கள் இல்லாமல் தங்கள் வயதுக்கு இணையான ஒரு மச்சனோடு சுற்றுலா வந்த அந்த மதர்த்த இளம் பெண்கள். அவன் முன்னும் பின்னும் ஓடுவதைக் கண்டு புளகாங்கிதம் அடைந்தார்கள்.

அவனை கேலி செய்கிற சாக்கில் அவளைப் பற்றி பேசும் ஆவலை வளர்த்துக் கொள்ளும் சாக்கில் நிர்மலாவை கேலி செய்தார்கள்.

"யாரடி இது உன் ஆளா..."

"ஆமாண்டி அவங்க அப்பா. அவ விளையாடறதுக்கு வாங்கிக் கொடுத்திருக்கார்" ஒருத்தி சொல்ல அடுத்தவள் தொடர்ந்தாள்.

"என்ன விளையாட்டுடி விளையாடுவே"

"என்ன விளையாட்டு. கண்ணாமூச்சிதான்."

"கண்ணாமூச்சி ரேரே.. காட்டு மூச்சி ரே.ரே.." என்று கோரசாகப் பாடினார்கள்.

"காட்டு மூச்சி ரே ரேன்னா என்னடி அர்த்தம்" ஒருத்தி திடீரென்று சந்தேகம் கேட்டாள்.

"எல்லாத்தையும் காட்டணும்னு அர்த்தம்." இன்னொருத்தி சொல்ல, குபீரென்று சிரித்தார்கள்.

"அதெல்லாம் கிடையாது இவர் எங்க வீட்ல வே[லை] செய்றவர். சும்மா ஓட்டாதீங்க" என்று அவள் சிரலாய் ப[தில்] சொன்னாள்.

அந்த இளம் பெண்கள் விடவில்லை. அவர்களுக்[கு] பொழுது போக வேண்டும். காம விகாரமாய் ஏதாவது [பேச] வேண்டும்.

"நான் வந்து அவரை கல்யாணம் பண்ணிக்க போறேன்னா சொன்னேன் இல்ல. அவரோட காதல் பண்ண போறேன்னு சொன்னேனா. நான் சொன்[னது] விளையாட்டுக்கு. அவரோட விளையாடுவி[யா] அப்படின்னுதான் கேட்டேன் நீ விளையாடலைன்னா வி[டு] நான் கொஞ்சம் விளையாடறேன்" என்று சொல்[லி] "முத்துசாமி, இங்க வாங்க" என்று கூப்பிட்டாள்.

"பாருங்க. இதுல ஒரு முடி இருக்கு. இதெல்லாம் பார்த்து செய்யக்கூடாதா."

"சாரி மேடம், சாரி மேடம்" அவன் கேட்டுக் கொண்[டான்]. "பரவாயில்லை போங்க" அவனை அவள் திருப்[பி] அனுப்பினாள். மற்றவர்களைப் பார்த்து கண் சிமிட்டினாள்.

"முத்துசாமி இங்க வாங்க." மறுபடியும் அவ[ன்] ஓடிவந்தான்.

"அட்டை தட்டுலேயே கொடுக்கறீங்க. அந்த கழு[வ] முடியாதுன்னு எனக்குத் தெரியும் ஆனாலும் ஒரு துணியால துடைச்சுக் கொடுத்தா நல்லாயிருக்கும்."

"பாருங்க இந்த அட்டைத் தட்டின் ஓரமெல்லாம் ஒரு மாதிரி இருக்கு" இன்னொருத்தி சொல்ல, "சாரி மேடம் நான் துடைச்சுக் கொடுத்திடறேன் மேடம். துடைக்க முடியாட்[டி] தூக்கிப் போட்டுடறேன் மேடம்."

"தட்ஸ் ரைட்."

எல்லாப் பெண்களும் அவள் கூர்மையாய்ப் பேசுவதைப் பார்த்து, அடக்க முடியாமல் சிரிப்பை அடக்கிக் கொண்டார்கள்.

"முத்துசாமி இங்க வாங்க."

"எஸ் மேடம்."

"உங்க பேர் ரொம்ப பெரிசா இருக்கு. நீளமா இருக்கு. நான் முத்துன்னு சுருக்கிக் கூப்பிட்டுமா."

"கூப்பிடுங்க மேடம். உங்க இஷ்டம்" என்று அவன் சொல்ல, "தேங்க்யூ" என்று அவள் மிக இதமாய் புன்னகை செய்தாள்.



அவன் போன பிறகு, "முத்து" என்று கூப்பிட்டாள். அவன் திரும்பிப் பார்த்தான்.

"இல்லே. இப்படி கூப்பிட்டா திரும்பிப் பார்க்கறீங்களான்னு டெஸ்ட் பண்ணேன்" என்று சொன்னாள். மறுபடியும் பெண்கள் கூட்டம் ஆரவாரமாய் சிரித்தது.

அவனும் சிரித்தான்.

"ஏய் பாவம்டி. நல்லவரா இருக்காருடி" என்று ஒரு பெண் சொல்ல, "என்ன நல்லவர். மடையனா இருக்கான்னு சொல்லு" என்று கேலி செய்தவள் பரிதாபப்பட்டவளை திருத்தினாள்.

"சீ. உடனே எல்லாரையும் மக்குன்னு சொல்லிட முடியுமா."

"ஆமா. மக்குதான். இப்ப நான் அவனை மக்குன்னு ரூப் பண்ணட்டுமா."

கேலி செய்தவள் சவால் விட்டாள்.

எல்லோரும் பஸ்ஸுக்கு வரும் பொழுது, "முத்து, என் செருப்பைக் காணோம். பார்த்தீங்களா எங்கே விட்டேன்னு தெரியலையே" என்று என ஸ்வரத்தில் பேசினாள்.

"தெரியலீங்களா. சொல்லுங்க. எங்க விட்டீங்க அய்யோ பஸ்ஸில விட்டுட்டீங்களா பாருங்க."

"பஸ்ஸில இல்லீங்க. நாம கடற்கரையில உட்கார்ந்து இருந்தோமில்ல அங்கேதான் எங்கயோ விட்டுட்டேன். இங்கேயிருந்து பார்த்தா தெரியலையே. அய்யோ அவ்வளோ தூரம் என்னால நடக்க முடியாது. கால் வலிக்குது. வேண்டாம் செருப்பு இல்லாட்டி என்ன அப்படியே வெறுங்காலோடயே வர்றேன்" என்று அவள் பஸ்ஸில் ஏறிக் கொண்டாள்.

"இருங்க நான் பார்த்துட்டு வர்றேன்" அவன் அவர்கள் உட்கார்ந்த இடம் நோக்கி ஓடினான்.

ஒரு நியூஸ் பேப்பருக்கு அடியில் அந்த செருப்பு இருந்தது. அந்த நியூஸ் பேப்பர் அடையாளமாக வைக்கப்பட்டது என்று அவனுக்குத் தெரியவில்லை. நியூஸ் பேப்பர் மறைத்திருந்தது என்று நினைத்தான்.

செருப்பை கையால் எடுத்துக் கொண்டான். தொலை தூரத்திலிருந்து மூச்சிறைக்க ஓடிவந்தான். அவள் காலுக்கெதிரே போட்டான்.

"போட்டுக்குங்க மேடம். கிடைச்சுடுச்சு நல்ல வேளையா" என்று சொன்னான்.

அவள் "ரொம்ப தேங்க்ஸ்" என்று சாதாரணமாகச்

சொல்லிவிட்டு பஸ்ஸில் ஏறிக் கொண்டான்.

"ஏய்... நிர்மலா, என்னடா நம்ம வீட்டு வேலைக்காரனை இல இப்படி கலாட்டா பண்றாளே... பார்க்காதே இப்படியெல்லாம் இவங்களை பண்ணலாமா... உங்களுக்கு சொல்லித் தாறதுக்காகத்தான் இதெல்லாம் செய்தேனே தவிர, எனக்கும் அந்த ஆளுக்கும் ஒண்ணும் சம்மந்தம் இல்லை. நீயே விளையாடிக்க" என்று சொல்லி மறுபடியும் அந்தக் கூட்டம் வாய் விட்டுச் சிரித்தது.

திட்டத்திட்ட நூறு முறைகள் நூறு விதமாய் அவளை அலைக்கழித்தது.

அவனுக்கு அந்தப் பெண்களுடைய திமிர் புரிந்தது இருப்பினும் வாய் திறக்காது மௌனமாக இருந்தான்.

வீடு திரும்பும்போது முத்துசாமியைப் பற்றி ஒரு பரிதாபம் நிர்மலாவுக்குக் கிளம்பியது. அப்பாவிடம் சொல்லி அவனுக்கு கூடுதலாக சம்பளம் கொடுக்கவோ அல்லது கூடுதலாக உதவிகள் செய்யவோ ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

"எப்படிம்மா இருந்தது" என்று அப்பா கேட்க. "ரொம்ப நல்லா இருந்ததுப்பா. முத்துசாமி ரொம்ப ஹெல்ப் பண்ணாருப்பா."

"எல்ல இடங்களும் சுத்திப் பார்த்தீங்களா."

"நல்லா சுத்திப் பார்த்தோம்பா. எல்லா இடங்களும் முத்துசாமி கூட்டிட்டுப் போய் காண்பிச்சார்."

"டிபன் சாப்பாடெல்லாம் எப்படி இருந்தது."

"முத்துசாமி நல்லா பரிமாறினாருப்பா" அவள் திரும்பத் திரும்ப அவனை முன்னிறுத்திப் பேசினாள்.

"அப்பா. அவருக்கு கூட ஏதாவது கொடுப்பா. ரொம்ப ஹெல்ப் பண்ணினார் நாற்பத்தஞ்சு பேருக்கு ஒரே ஆளா நின்னு. பரிமாறி ஒரு கவலையும் இல்லாம பார்த்துக்கிட்டாருப்பா."

"சரி. கொடுத்திடலாம். கொடுக்கிறதுக்காகத் தானே அவனை இங்கே வச்சிருக்கோம்" என்று அவள் ஆசைக்கு அப்பா தலையாட்டினார். டக்கென்று வேறுவிதமாய் யோசித்தார். "ஒண்ணு புரிஞ்சுக்க நிர்மலா அவன் வேலைக்கு வந்திருக்கான். ரொம்ப பரிதாபப்பட்டின்னா தலைக்கு மேல ஏறிடுவான். பரிதாபப்படாதே நிர்மலா. வேலைக்காரனை வேலைக்காரனாவே வெச்சுக்க" என்று சந்தேகத்தோடு அவளுக்கு உபதேசம் செய்தார்.

நிர்மலா புரிந்து விட்டது என்று தலையாட்டினாள்.



...னாலும் ஒரு நல்ல மனிதனை எப்படி வேலைக்காரனாக ...த்துவது என்று திண்டாடினாள்.

"எங்க ஃபிரண்ட்ஸ் எல்லாம் உங்களுக்குப் பிடிச்சதா" என்று கேட்டாள்.

"என்னங்க கேள்வி உங்களை மாதிரியே இருக்காங்க ...ங்க ஃபிரண்ட்ஸ் எல்லாம்" என்று அவன் பொதுவாகச் சொன்னான்.

"என்ன மாதிரியேன்னா."

"எல்லாரும் ரொம்ப நல்லவங்களா இருக்காங்க."

"நான் எப்படி நல்லவன்னு சொல்றீங்க."

"அப்பாகிட்ட சொல்லியிருக்கீங்களே. அவர் ரொம்ப ...தவி செய்தார். அவருக்கு நீங்க உதவி செய்யணும்னு அப்பா சொன்னார். என்னடா ஏகப்பட்ட உதவிகள் செய்திருக்கே போல இருக்கு அப்படின்னார். என்னால முடிஞ்சதை செய்தேங்கன்னேன். ஜாக்கிரதையா செய். நிறைய செய்திராதே அப்படின்னார் சரிங்கன்னு சொன்னேன்."

"என்ன அர்த்தம் அதுக்கு."

"தெரியலீங்களே. அப்பாகிட்டத்தான் கேட்கணும்." அவன் வெகுளியாய் சிரித்தான்.

ஏதனாலேயோ அவனுடைய ஞாபகம் அடிக்கடி நிர்மலாவுக்கு வந்தது.

அவன் வேலைக்காரன் என்கிற எண்ணம் இருப்பினும் அவனை வேலைக்காரனாகத்தான் நடத்த வேண்டும் என்று தெரிந்திருப்பினும் உள்ளுக்குள்ளே மெல்லியதாய் ஒரு காதலை அவள் வளர்த்துக் கொண்டாள். அவன் தனக்கு கணவனாக வந்தால் இன்னும் ஒரு நல்ல வேலைக்காரனாக இருக்க மாட்டானா என்று யோசித்தாள். வெளியே சொல்லாது உள்ளுக்குள் கற்பனை செய்து கொண்டாள்.

அவனைத் தொடுவது போலவும், கட்டித் தழுவுவது போலவும், முத்தமிடுவது போலவும் இவள் கட்டளையிட அவன் அவளுக்காக கூடுவது போலவும் கற்பனைகள் செய்து கொண்டாள்.

வாழ்க்கையில் இந்த வெற்று கற்பனைகள்தான் நம்மை திசை-மாற்றுகின்றன. எதை நோக்கி நாம் போக வேண்டும் என்று தெரியாதவர்களுக்கு இந்த கற்பனைகள் சுகம்.

வாழ்க்கையினுடைய வெம்மையை அனுபவிக்க மறுக்கிறவர்களுக்கு இந்த கற்பனை ஒரு நிழற்குடை. ஆனால்

கற்பனையிலேயே. நிழற்குடையிலேயே எத்தனை நா…
ஒருவர் இருந்துவிட முடியும். வாழ்க்கை நல்லபடிய…
பிடித்து இழுத்துக் கொண்டு போகும். அப்போது நிழலி…
இருந்ததனால் ஏற்படுகின்ற சுகம், சௌகரியம் காண…
போகும் வெம்மை கூடவே தகிக்கும்.

அப்பா, அம்மா பெயரில் வீடு வாங்கிப் போட்ட…
அவர் பெயரில் நிலம் வாங்கிப் போட்டார்.

- நூறு சவரன். நூற்றைம்பது சவரன். இருநூறு சவர…
என்று நகைகள் கூடிக் கொண்டே போயின.

நம்ம பொண்ணுக்கு ரெண்டு மாசத்துல கல்யாண…
நிச்சயம் பண்ணி இருக்கோங்க. ஒரு நல்ல ஹார…
பண்ணனும்னு நினைக்கிறேன். கைகூடி வாமாட்டேங்கு…
என்று யாரிடமோ சொல்ல, மறுநாளே எழுநூறு சவரனில் ஒ…
ஹாரம் வந்தது.

அம்மாவுக்கு பிறந்தநாள் அன்று வைரத் தோடு வந்த…
அப்பாவுக்கு பிறந்தநாள் அன்று ஆறு பட்டுப் புடவைக…
கொடுக்கப்பட்டன.

வெள்ளிக் குடம், வெள்ளி குத்துவிளக்கு, வெள்ளி…
தட்டு, வெள்ளி சந்தனப் பேழை, வெள்ளி பூக்கூடை. என்…
விதம் விதமான வெள்ளி சாமான்கள் இறங்கின.

நல்லவேளை பதினோராம் வகுப்பில் தேர்வு என்பது முக்கியமான விஷயமாக இல்லை. ஏதோ அவள் எழுதினா… ஏதோ பாஸ் செய்தாள். பனிரெண்டாவது வகுப்புக்கு பள்ளி… கூடத்தில் விரட்டினார்கள். அந்த விரட்டலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் அவள் தவித்தாள். அவள் வீட்டில் வருவோர் போவோர் எண்ணிக்கை அதிகமாகி யிருந்தது. இடைவிடாது ஒலிக்கும் டெலிபோனுக்கு பதில் சொல்ல வேண்டியிருந்தது.

அவள் படிப்பில் சுமாராகத்தான் இருந்தாள். டீச்சர் கேட்ட போது "முடியலை டீச்சர், வீட்டுல நிறைய வேலை இருக்கு" என்று சொன்னாள்.

"சரி நீ படிச்சு ஆக வேண்டியது என்ன. உங்க அப்பா உன்னை டக்குன்னு கல்யாணம் பண்ணிக் கொடுத்துடுவாருன்னு நினைக்கறேன். உன் முகத்தை பார்த்தா அப்படித்தான் இருக்கு"

நன்றாக சாப்பிட்டு படுத்துத் தூங்கி சுகம் அனுபவித்த மதமதப்பில் அவள் இளம் பெண்ணாக இல்லாமல் முதிர்ந்த கன்னியாக இருந்தாள். பெரிதாய் வளர்ந்த மார்பகங்களும் அவைகளுக்கு மிக கச்சிதமாய் அமைந்த உள்ளாடைகளும் இடுப்பின் வளைவும், தோளின் சரிவும், கன்னத்தின்



…மையும் அவளை கல்யாணத்திற்கு காத்துக் …கொண்டிருக்கிற பெண்ணாகவே காட்டின.

ஆணின் அருகாமைக்குத் தவித்துக் கொண்டிருக்கிற …வாகவே மற்றவருக்கு வெளிப்படுத்தின. சிலரை கடந்து …க்கும்போது யாரோ சொல்வது காதில் விழுந்தது.

இந்த பாப்பா மட்டும் கிடைச்சா ராத்திரி முழுக்க விடிய …மா தின்னலாண்டா" என்று கரடுமுரடான குரலில் பேசுவது …தில் விழுந்து அவள் திடுக்கிட்டுத் திரும்ப அவர்கள் …ரித்துக் கொண்டார்கள்.

போய் கண்ணாடியில் தன் உருவத்தைப் பார்த்துக் கொண்டாள். இரவு முழுவதும் தின்பதற்கேற்ற பண்டமாகவா இருக்கிறோம் என்று விதம் விதமான கோணங்களில் பார்த்துக் கொண்டாள். ஆம் என்றும் அவளுக்குப் புரிந்தது. …கண்கள் பார்வையில் உள்ள பசி தெரிந்தது.

அவள் வகுப்பில் மிகச் சிறிய உருவமாக …ட்டாங்கிளாஸ் படிக்கும் பெண் போல முகத்தில் …ழந்தைத்தனமும், உடம்பில் வெறுமையுமாய் ஆறேழு …பெண்கள் இருந்தார்கள். அவர்களோடு இவளை ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இவளின் ஆகிருதி மிக உயரம் என்பது அவளுக்கும் தெரிந்தது.

பதினோராம் வகுப்பில் சுற்றியது போல பனிரெண்டில் சுற்றவில்லை. சுற்றுவதற்கு முடியவில்லை. இவளை சுற்றியிருந்த பெண்களும் மெல்ல இவளை ஒதுக்கிவிட்டு படிப்பிலேயே மும்முரமாக ஈடுபட்டார்கள். இவள் வீட்டிற்குப் போய் படிக்கலாமா என்று எவளோ கேட்ட போது. வேண்டாம் அந்த இடத்தில் போனால் படிப்பு ஏறாது. பேச்சுதான் அதிகமாகும். அவள் வீட்டுப் பக்கம் தலை வைத்து படுக்காமல் இருப்பதே நல்லது. அவளை அருகே சேர்க்காமல் இருப்பதே நல்லது. அவளாக வந்தால் சேர்த்துக் கொள்ளலாம். இது விளையாட்டல்ல. இது மிக முக்கியமான கட்டம். அவளுக்கு அவள் தகப்பனார் இருக்கிறார். நமக்கு யார் இருக்கிறார்கள். நம்மை நாம்தான் கடைத் தேற்றிக் கொள்ள வேண்டும். இந்த மார்க்குதான் நம் வாழ்க்கையை நிர்ணயிக்கும் என்று தெளிவாக ஒருத்தி பேச, நிர்மலாவை லேசாகப் புறக்கணித்து, வந்தால் வா, வராவிட்டால் போ என்று சொல்லி எல்லா சிநேகிதிகளும் தங்களுடைய படிப்பில் முழு கவனம் செலுத்தினார்கள்.

அப்படியொரு கவனம் அவளால் செலுத்த முடியவில்லை. ஆனாலும் முழு முயற்சி அவள் செய்தாள். தேர்வு எழுதினாள். அவளுக்கு அவள் தேர்வு பற்றி சந்தேகம்

இருந்தது

"எப்படிம்மா பரீட்சை எழுதியிருக்கே", அம்...
கேட்டாள்.

"சுமாராத்தாம்ப்பா எழுதியிருக்கேன். எனக்கு...
தெரியலைப்பா பாஸ் பண்ணுவேனான்னு."

"அதெல்லாம் பாஸ் பண்ணிடுவே நீ எப்...
படிக்கிறன்னு பார்த்தேனே. பாஸெல்லாம் பண்ணிடுவே...
மார்க்கு குறைச்சலா வாங்கினாலும் கவலைப்படா...
டொனேஷன் கொடுத்து உன்னை எங்க சேரணு...
ஆசைப்படறியோ அங்க நான் சேர்த்திருவேன். எது பத்தி...
கவலைப்படாதே" என்று சொல்ல அவள் அம்மா குறுக்...
விழுந்தாள்.

"எதுக்கு சேர்க்கறது இருக்கறது ஒரு பொண்ணு...
அவளை மேலே மேலே ஏன் படிக்க வச்சுக்கிட்டிருக்கீங்...
அவளை பார்த்தீங்களா எவ்வளோ உசரமா எவ்வளோ...
அகலமா இருக்கா எல்லோரும் கேட்கறாங்க. எப்...
கல்யாணம், எப்ப கல்யாணம்னு. அவ ப்ளஸ் டூன்னா நம்...
மாட்டேன்றாங்க. நடுவுல ரெண்டு மூணு வருஷ...
எதலையாவது பெயிலாயிட்டாளான்னு கேட்கறாங்க."

"நீ என்ன சொல்றே."

"கல்யாணத்தைப் பண்ணி கொடுத்திருவோம்."

"ரொம்ப சின்னப் பொண்ணா இருக்காடி."

"உங்களுக்கு தெரியலை. பொண்ணு பதினாறு வயசுக்கு அப்புறம் சின்னப் பொண்ணே இல்லை பெரிய பொண்ணுதான்.

சில பொண்ணுங்க தேச்சலா கிடக்கும். சில பொண்ணுங்க தப தப தபன்னு வளந்துரும். நம்ம பொண்ணு வேகமா வளர்ற டைப். பதினெட்டு வயசு ஆகிப் போச்சு அவளுக்கு. உங்க கைல காசு நடமாடுற நேரமா பார்த்து நல்ல ஆளா பார்த்து கட்டிக் கொடுத்துருங்க."

"வேணாண்டி. அவ படிக்கட்டும்."

"படிச்சு என்ன பண்ணப் போறா. கல்யாணம் தானே அதுக்கு முதல்லயே பண்ணிடறது."

அம்மா பிடிவாதமாகச் சொன்னாள்.

நிர்மலா அம்மாவைக் கட்டிக் கொண்டு கேட்டாள்.

"எதுக்கும்மா கல்யாணத்துக்கு அவசரப் படறே. நான் படிக்கறனே."

"வேணாண்டி. உன்னைப் பார்த்தா எனக்கு பயமா



இருக்கு."

"எம்மா, நான் நல்லா இல்லையா."

"நீ நல்லாதான். சுத்தி பலபேர் உன்னை நெருக்குவாங்களோன்னு ஒரு பயம் வருது."

"எம்மா அப்படி நினைக்கறே."

"நீ அப்படி இருக்கேடி."

"உன்னைப் பார்க்கற அத்தனை பேரும் முழுங்கற மாதிரிதான் பார்க்கறா. உங்கப்பா நல்லா இருக்க சொல்லலே. அவர் கையில நாலு காசு நடமாடறப்பவே டக்குனு கல்யாணம் பண்ணிக் கொடுத்திடறது நல்லது இல்லையா."

"அப்பாவுக்கு ரிட்டயர்டு ஆகறதுக்கு இன்னும் பனிரெண்டு வருஷம் இருக்கே."

"நான் அதையெல்லாம் நம்பலைடி. நிறைய துட்டு லஞ்சமா வாங்கறார். எப்ப வேணா பிடிச்சு ஜெயில்ல போட்டுருவான். இருக்க சொல்லலே செஞ்சிட்டாக்க எப்பாடு நிம்மதி இல்லே. அவர் எங்கனா ஜெயில்ல போய உட்கார்ந்துக்க. நான் தெருவுல பிச்சைக்காரியா அலையணுமா. வேணாம் அவர் வேலையை அவர் செய்யட்டும். அவருடைய வேலையில் முக்கியமானது உனக்கு கல்யாணம் பண்ணிக் கொடுக்கிறது. அதனாலதான் நான் தொந்தரவு பண்றேன்" என்று சொல்ல,

"இவளோ சீக்கிரம் கல்யாணம் பண்ணினா நல்லாயிருக்காதும்மா. இருபத்தோரு வயசு ஆகணும்."

"யார் சொன்னா அது துட்டு இல்லாதவனுக்கு நமக்கெல்லாம் என்னடி."

"என் லைஃப் பாழாயிடும் இல்லே."

"அதெல்லாம் பாழாகாதும்மா பதினெட்டு வயசுதான் சரியான வயசு. அனுபவிக்கற வயசு. இருபத்தஞ்சு வயசு பையன் கிடைச்சு. பதினெட்டு வயசுல உனக்கு கல்யாணம் ஆச்சன்னா சந்தோஷமா இருக்கலாம். அதிலேயும் ஒன்னு பெத்து இறக்கிட்டேன்னு வெச்சுக்கோ. இன்னும் ஆனந்தம்தான்."

"அதுக்கப்புறம்."

"ஆம்படையான் பெண்டாட்டி ஜாக்கிரதையா இருந்து, கவர்மெண்ட் சொல்ற விஷயங்கள் எல்லாம் ஃபுல் பண்ணி சந்தோஷமா இருக்கலாம். என் வாழ்க்கை அப்படித்தான் இருந்தது.

உங்க அப்பா சாதாரண கிளார்க். பத்தாவது மாசம்

உன்னை பெத்து இருக்கிட்டேன். அடுத்த ஒரு பத்து மாசம் எங்க அம்மா வீட்டில இருந்து சீராட்டு வந்தேன். எப்படி இருந்தது தெரியுமா என் உடம்பு எருமை மாதிரி இருந்தேன். உங்க அப்பாவுக்கு பரமசந்தோஷம். அடுத்த பத்து வருஷமும் தினம் பேயாட்டம்தான் போயேன்."

"பேயாட்டம்னா அப்பா என்ன பண்ணுவார்" மகள் தாயைக் கேட்க, தாய் வெட்கப்பட்டாள். அவர்கள் குசுகுசுவென்று பேசிக் கொண்டார்கள்.

நிர்மலாவிற்கு மேலே படிக்க வேண்டும் என்கிற எண்ணம் அறுந்து போயிற்று.

மும்பையிலிருந்து ஒரு அதிகாரி சென்னை விழுப்பின் தினைக்கு தனிக்கைக்காக அனுப்பப்பட... அந்த அதிகாரியை குளிர்விக்க வேண்டிய அவசியம் அப்பாவுக்கு ஏற்பட்டது.

"மனைவி இல்லாமல் ஒரு வாரம் சென்னையில் எப்படி இருக்கப் போகிறேன்" என்று அவர் திரும்பத் திரும்ப சொல்ல, நிர்மலாவின் அப்பா புரிந்து கொண்டார்.

முறைமை வருஷம் வாங்க சொல்லிக் கொடுத்த அந்த பெண்மணியை அழைத்து வந்து அறிமுகப்படுத்தினார்.

"நம்ம லாட்ஜுக்கெல்லாம் போக முடியாதுப்பா. மாட்டிக்கிட்டா அவமானமா போயிரும்."

"எதுக்கு சார் அங்கெல்லாம் போறீங்க. நம்ம வீட்ல இருங்க சார்" என்று ஏற்பாடு செய்து கொடுத்தார்.

நிர்மலாவின் அறைக்கு அடுத்த அறையில்தான் அந்தப் பெண்மணியும், அந்த அதிகாரியும் இருந்தார்கள். ஒரு நாற்காலி போட்டு, ஏறி, வெண்டிலேட்டர் கண்ணாடி வழியே பார்க்க, எதிர்ப்பக்க நிலைக் கண்ணாடியில் அவர்களுடைய ஆட்டம் தெரிந்தது. அவர்கள் வெளியே வந்து பசியாறியபோது, அவள் அறைக்குள் போய் அந்த நிலைக் கண்ணாடியை வாட்டமாக திருப்பி வைத்தாள்.

மறுபடியும் தன்னுடைய அறைக்குள் புகுந்து கொண்டு படிப்பதுபோல் பாவனை செய்தாள். அவர்கள் அறைக்குள் வந்துவிட்டது தெரிந்ததும் ஸ்டூல் போட்டு ஏறி நின்று ஓசையை கவனித்தாள். இப்பொழுது, தெள்ளத் தெளிவாக சகலமும் தெரிந்தது.

ஐம்பது வயது ஆணின் கரைகாணாத காம வெறியைத்தான் அவள் முதல் முதலில் பார்க்க நேர்ந்தது. அது மனதில் பசுமையாய் படர்ந்தது. அவள் உடம்புத் தீயை அதிகம் எரிய வைத்தது. கண்கள் சிவந்தன. மூச்சு சூடாகியது. பற்கள் அடிக்கடி ஈசின. அவள் எங்கோ பார்ப்பது போல



உட்கார்ந்து கொண்டாள். திரும்பத் திரும்ப நடந்ததை நினைவு படுத்திக் கொண்டாள்.

ஒரு ஆணும், பெண்ணுமாய் இரண்டு உடல்களின் சங்கமிப்பையும், வக்கிரமான நடவடிக்கைகளையும் நினைவுபடுத்திக் கொண்டாள்.

அவர் ஊருக்கு கிளம்புகின்ற நேரம் ஹாலில் உட்கார்ந்து கொண்டார். அப்பாவை எதிரே உட்கார சொன்னார்.

"எல்லாம் நல்லாதாங்க நடந்தது. ரொம்ப நல்லா கவனிச்சுக்கிட்டீங்க. நான் எதுக்கு வந்தேன்னு உங்களுக்கு தெரியுமா" என்று அவர் கேட்க, அப்பா தெரியாது என்று சொன்னார்.

"உம்ம மேல கிட்டத்தட்ட இருபத்தி ஏழு கம்ப்ளெயண்ட் வந்திருக்கு. பாருங்க எல்லாம் நீர் வருஷம் வாங்கினீரோ அவங்கெல்லாம் உடனடியா ஒரு வெள்ளை பேப்பர் எடுத்து, மொட்டக் கடுதாசி மாதிரி இன்ன மாதிரி இன்ன தேதியில இந்த விஷயத்துக்கு இவ்வளவு வாங்கியிருக்கேன்னு எழுதிட்டான். போட்டதும் கணக்குப் போட்டா பல கோடிக்குப் போகுது. என்னன்னு பார்த்துட்டு வா, அப்படின்னு சொல்லித்தான் என்னை அனுப்பிச்சாங்க."

"ஐயா அப்படியெல்லாம் ஒண்ணும் இல்லைங்கய்யா. நான் எவ்வளவு சுத்தமா இருக்க முடியுமோ அவ்வளவு சுத்தமா இருக்கேன்."

"எனக்குத் தெரியும் நீ சுத்தமா இல்லையான்னு. சுத்தமா இருக்கிறவன் ஏன் எனக்கு பொம்பளையை கூட்டிக் கொடுக்கிறே. மேலோட்டமா விசாரிச்சேன். ஒரு ஆறு கேஸ். ஆறு கேஸும் நீ வாங்கினது உண்மைன்னு சொல்லிட்டான். இப்ப என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியல்லை."

"அய்யா என்னைக் காப்பாத்துங்கய்யா."

அப்பா அவர் காலில் விழுந்தார்.

"எழுந்திருப்பா. எழுந்திரு. உன்னை காட்டிக் கொடுக்கிறதா இருந்தா இப்படி உன் வீட்ல உட்கார்ந்து பேசவேணா. என்ன பண்ணினா தப்பிச்சுக்கலாம் அப்படின்னு பார்க்கணும். சரி எனக்கு என்ன செய்வே."

"நீங்க என்ன கேட்கறீங்களோ செய்யறேனய்யா"

அந்த மனிதர் மிக கெட்டிக்காரர். அப்பா சம்பாதித்த அனைத்தையும் ஒரே வீச்சில் சுருட்டி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டார்.

"எவ்வளவு சொத்து வச்சிருக்கேன்னு சொல்லு."

"அதிகம் ஒண்ணுமில்லைய்யா. கொஞ்சம் நிலம். ரெண்டு வீடு அவ்வளவுதான்."

"சும்மா பொய் சொல்லாதே. ஏகப்பட்டது வச்சிருக்கணும்."

"எனக்கும் செலவிருக்குங்கய்யா. முன்னப் பின்ன செலவு ஆயிடுதுங்களே."

"என்ன செலவு."

அப்பா தலை குனிந்து பேசினார். "வந்த பொம்பளைக்கு நானும் கொடுக்கணுங்க."

"நீயும் வச்சிட்டிருக்கியா அவளை" என்று அவர் கேட்க, அப்பா பதில் பேசாதிருந்தார்.

"என் பையன் ஒருத்தன் பிலானியில படிச்சிட்டு வர்றான். அவனுக்கு கல்யாணம் பண்ணி வச்சிட்டு புருனேக்கு அனுப்பலாம்னு நெனைச்சிக்கிட்டிருக்கேன். அந்த ஊர்ல அவனுக்கு வேலை கிடைக்கிறதுக்கு வாய்ப்பு அதிகம் இருக்கு. போறபோது ஆம்படையான் பொண்டாட்டியா போயிட்டா, அவனுக்கு நல்லதில்லே" என்று சொல்ல,

"ஆமாங்க வயசிலேயே கல்யாணம் பண்ணி வச்சிறணும்."

"உம்ம பொண்ணை கொடுக்கறீரா" வந்தவர் டக்கென்று கேட்டார்.

அப்பா திகைத்துப் போனார்.

"நீங்களும் நானும் கிட்டத்தட்ட ஒரு ஜாதிதான். கொஞ்சம் தள்ளிப் போகுது. அதனால என்ன. உங்க பொண்ணை கொடுத்தீங்கன்னாக்க, என் பையனுக்கு சந்தோஷமா கட்டிக்கறேன். இதுதான் என் பையன் போட்டோ. எப்படி ராஜாமாதிரி இருக்கான் பாருங்க."

அவர் நைச்சியமாய் பேச ஆரம்பித்தார்.

"உங்க வீட்டு அம்மாவுக்கும் இந்த போட்டோவை காமிங்க."

"உங்க பொண்ணைப் பார்த்த உடனேயே நான் நினைச்சேன். அட நம்ம பிள்ளைக்கு நல்லா இருக்குமே. அவன் சந்தோஷமா இருப்பானே அப்படின்னுதான் எனக்கு தோணிச்சு. உம்மால முடிஞ்ச அளவுக்கு கல்யாணம் நல்லபடியா பண்ணும். வேற எதுக்கு சம்பாதிக்கிறீரு. பொண்ணுக்காகத் தானே" என்று வந்தவர் சிரிக்க அப்பாவும்



தலையாட்டினார்.

எப்படி இதிலிருந்து மீளுவது என்று வேகமாக யோசித்தார். ஆனால் மீள முடியாமல் வலை இறுக்கப்பட்டது.

"ஒண்ணுக்குள்ள ஒண்ணாயிட்டோம்னா, ஒரு பார்ட்னர் மாதிரி ஆயிடுவோம். நீர் சம்பாதிக்கிறதுல கொஞ்சம்போல கொடுத்தீங்கன்னா, என் செலவுக்கும் உதவும். அதே நேரத்தில உமக்கு பாதுகாப்பாகவும் நான் இருப்பேன். இன்னும் அடுத்த பத்து வருஷத்துக்கு என்னை யாரும் அசைக்க முடியாது. உம்மையும் யாரும் அசைக்க முடியாது என்னா சொல்றீர்."

"யோசனை பண்ணி சொல்றேங்க."

"நீ சொல்றதை வச்சிக்கிட்டுதான் நான் டெல்லியில பேச ஆரம்பிக்கணும்."

அவர் கிட்டத்தட்ட மிரட்டலாய் பேச, அப்பா முறிந்து போனார்.

"ஏன் மிரண்டு போறீங்க." அம்மா ஆசுவாசப்படுத்தினாள். "கல்யாணம் கட்டத்தானே சொல்றார். வேற எதுவும் தப்பா சொல்லலையே. அந்தப் புள்ளை பார்க்கிறதுக்கு நல்லாத்தானே இருக்கான்."

"அப்புறம் வர்றபோதெல்லாம் கையை கட்டி நிக்கணும்டி. சம்பந்தின்னு ஈக்வலா இல்லாத இவனுக்கு அடிமை மாதிரி இருக்கணும். இவன் சும்மா விடமாட்டான்டி. விரட்டிக்கிட்டே இருப்பான். காசைக் கொடு. காசைக் கொடுன்னு கேட்டுக்கிட்டே இருப்பான். இவனைப் பத்தி உனக்கு தெரியலைடி."

"அப்ப வேணாங்கறீங்களா."

"யோசனை பண்ணித்தான் செய்யணும். எப்படி தப்பிச்சுக்கிறதுன்னு பார்க்கணும்" அப்பா அம்மாவிடம் சொல்லிவிட்டு, வந்தவரைப் பற்றி ஒரு பெரிய புகார் எழுதிப் போட்டார்.

தன் வாழ்க்கை தனக்குப் புரிந்து விட்டது என்று எவர் சொன்னாலும் அது சிரிப்பாகத்தான் போய் விடுகிறது. புரிந்தது போல் தோற்றமளிக்கும் வாழ்க்கை பல நேரங்களில் சொன்னவரை சந்தி சிரிக்க வைத்து விடுகிறது.

வெற்றியின் மிதப்பில், சம்பாதித்ததின் திமிரில், ஏவல் ஆட்கள் எடுபிடிகள் இருக்கின்ற அசட்டு தைரியத்தில், அதிகாரம் கொடுத்த மமதையில், புரிந்தது போல் தோற்றமளிக்கும் வாழ்க்கை சிறிய தோல்விகளுக்கும் புலம்ப

வைத்து விடுகிறது.

வெற்றி பெற்றவர்கள் எல்லோருமே வாழ்க்கை தரும் சாதாரண அடியைக் கூட வாங்க மறுத்து கதற ஆரம்பித்து விடுகிறார்கள். ஜெயித்தவர்களில் நிறையப்பேர் கோழைகளாகத்தான் இருக்கிறார்கள்.

நெல் முனையளவும் தோல்வி வராமலிருக்க வேண்டுமென்றுதான் பிரார்த்தனை செய்கிறார்கள். தோல்வியைத் தாங்க முடியாமல் மொத்த வாழ்க்கையும் இருண்டு விடுமோ என்று கற்பனை செய்து கொண்டு பயப்படுகிறார்கள்.

ஆறு வருடங்கள் அதிகாரத்தில் திளைத்து, இடதும் வலதுமாய் அள்ளி அள்ளி சம்பாதித்து, பரிசுப் பொருள்களாய் பல லட்சம் பெருமானமுள்ளவை வாங்கி, ஓர் உச்சத்திற்குப் போன வேளை, நிர்மலாவின் அப்பாவை கொடிய நேரம் சூழ்ந்து கொண்டது. அது விசாரணை அதிகாரி உருவத்தில் அவர் எதிரே வந்து நின்றது.

எனக்கு பிள்ளை இருக்கிறான். உன் பெண்ணைக் கொடு என்று விளையாடத் துவங்கியது.

"கொடுக்கிறதுக்கா தயங்கறேன். தானா கேட்கிறபோது நல்லபடியா கல்யாணம் கட்டிக் கொடுத்திடலாமேன்னு சொல்றேன்.

போட்டோவுல பையன் நல்லா இருக்கான். நேர்ல ஒரு தடவை பார்த்துட்டு சம்மதம் சொல்லிருவோம்."

"யாரு என்னன்னு தெரியலை."

"எங்க, நம்ம வீட்ல இத்தனை நாள் சாப்பிட்டுட்டு போயிருந்திருக்கார். நல்லபடியாதான் பழகுறார். ஏன் அவரை உங்களை மாதிரி கெட்டவரா நினைக்கறீங்க."

மனைவியிடம் விசாரணை அதிகாரியின் வினைகளைப் பத்தி விவரிக்க முடியாத நிர்மலாவின் அப்பா என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார்.

"ஆம்பளைங்களைப் பத்தி என்ன ஏதுன்னு உனக்கு தெரியாது. சும்மா அமைதியா இரு. எனக்கு இவன் பொண்ணு கேட்கறதே பிடிக்கலை."

"வேற யாரு வருவாங்க."

"நம்மகிட்ட காசு இருக்குடி. கைக்கு அடக்கமான மாப்பிள்ளை வருவான். அப்படி வந்தாதான் நமக்கும் சௌகரியம். குழந்தைக்கும் சௌகரியம்."

"நான் என்ன நினைச்சேன். இவரு



சம்பந்தியாயிட்டாரா எந்த நடவடிக்கையும் இல்லாது போகுமேன்னு நினைச்சேன்."

"அப்படி சொல்றதுக்கில்லை. அதுக்கப்புறம் இந்த ஆளு காட்டிக் கொடுக்கலாம். என்னை வம்புல மாட்டி விடலாம். அது தவிர இவன் வரதட்சணைன்னு அதிகமாக்கு கேட்பானோன்னு பயமா இருக்கு. கல்யாணம் முடிஞ்ச இதைக் கொடு, அதைக் கொடுன்னு தொந்தரவு பண்ணுவானோன்னு ஒரு கவலை இருக்கு."

"நீங்க எதுக்கு சம்பாதிக்கறீங்க. பொண்ணுக்குத்தானே."

"அப்புறம் கடைசி காலத்துல நாம பண்டாரத்துல வயித்துல துணி போட்டுக்கிட்டு உட்கார்ந்திருக்கிறதா."

"அப்படி சாப்பாட்டுக்கா வாங்கிடுவாங்க."

"வாங்கற நா... ஜாதி இவன். உனக்கு இவனைப் பத்தி தெரியலை."

முப்பத்தாறு புகார்களில், ஏழு புகார் தவிர மற்றவை எல்லாம் தள்ளப்பட்டு விட்டன. ஏழு புகாரில், மூன்று புகார் முன்பு சொன்னவர் இப்பொழுது மாற்றிப் பேசுகிறார். எனவே அவை மூன்றும் தள்ளப்படுகின்றன.

நான்கு புகாரில், ஒன்று அவருக்குள்ளேயே உள்ள காழ்ப்பு சம்பந்தமாக ஏற்பட்டது. முன்பு நடவடிக்கை எடுத்திருக்கிறார் என்பதாலேயே சம்பந்தப்பட்ட நபர் காழ்ப்போடு பேசுகிறார் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. எனவே, அதுவும் தள்ளப்பட்டது.

மீதமிருக்கிற மூன்று புகார்களில் சாட்சியங்கள் வலுவாக இருக்கின்றன. தொடர்ந்து இவைகளை விசாரித்து உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அறிக்கை எழுதி, விசாரணை அதிகாரி தயாராக வைத்திருக்க, அவர் எதிரே நிர்மலாவின் அப்பா கைகட்டி நின்றார்.

"இதுக்கு மேல என்ன முடியும் சொல்லுங்க. வேற எவனா இருந்தாலும் அந்த முப்பத்தாறையும் வறுத்துப் போட்டு, உங்களை ஒரு வழி ஆக்கிட்டிருப்பான்."

"நல்ல பப்ளிக்கா நாலு பேரு சாட்சி வச்சுக்கிட்டு அதிலேயும் ஊர்ல இருக்கிற பெரிய மனுஷனை, நல்ல மனுஷனை சாட்சி வச்சுக்கிட்டு ஆறு லட்ச ரூபா வாங்கியிருக்கீங்க. கூட வந்த மனுஷனுக்கு பப்ளிக்ல நல்ல பேர். அவன் சொன்னா எடுபடும். நீங்க விசாரணை சரியா நடத்தலைன்னா, நான் பத்திரிகைக்கு போவேன். விவரமா எல்லாம் சொல்லுவேன் அப்படின்னு மிரட்டறான்."

"நிச்சயமா, நீதியா நேர்மையா விசாரணை நடத்துவேன்னு அவருக்கு சத்தியம் பண்ணிக் கொடுத்திருக்கேன். சத்தியத்தை தூக்கி குப்பையில போடறது எனக்கு ஒண்ணும் பெரிசு இல்லை.

நீங்க என்ன பண்ணப் போறீங்கன்றதை பொறுத்துதான் இந்த அறிக்கை. ரெண்டு மூணு நாள்ல நிச்சயதார்த்தம் வச்சிட்டீங்கன்னா எனக்கு சந்தோஷமாக இருக்கும். அப்போ அறிக்கை வேற மாதிரி தயார் பண்ணனும்."

"எப்படிங்க. சாட்சிங்க பலமா இருக்குதுன்னு சொல்றீங்களே."

"கூப்பிட்டு கவுத்து விட்டுடலாம். மூன்றாம் முறை விசாரித்ததில் சாட்சிகள் பல்டி அடித்துவிட்டதாகத் தெரிகிறது. சாட்சிகள் உளறுவதால் மேற்கொண்டு விசாரணையைத் தொடர முடியவில்லைன்னு சொல்லலாம். அவங்க பல்டி அடிக்காமல் உறுதியா நின்னாங்கன்னா ஆளை விட்டு மிரட்டலாம். அதுக்கு வேற வழியிருக்கு. அவங்க வீட்டுக்குப் போய் ஒப்பிட்டு பேசி. இந்த சாட்சியெல்லாம் சொல்ல வேண்டாம், நாங்க வீட்டுக்குள்ள புகுந்து எதுனா பண்ணிருவோம், கோபமாயிருவோம். உங்க பொண்ணை கூட்டிட்டு போயிருவோம். பையனை காணாது அடிச்சிருவோம். அப்படின்னு சொன்னா அவனுக்கு நாம யாருன்னு புரியும்."

"அதை பண்ணிடுங்கய்யா."

"நீ என்ன பண்ணப் போறே சொல்லு" விசாரணை அதிகாரி பதிலுக்கு வேகமாய் கேட்டார். வேறு வழியில்லை. நிர்மலாவின் அப்பா சரி என்று தலையசைத்தார்.

"எப்ப நிச்சயதார்த்தம்."

"இன்னிக்கு சாயந்தரமே செஞ்சுடலாம்."

"செய்" சொல்லிவிட்டு விசாரணை அதிகாரி சிரித்தார்.

பத்துப்பேரை அழைத்து வெற்றிலை பாக்கு தட்டு மாற்றி. ஹோட்டலுக்கு விருந்துக்குச் சொல்லி, நாற்பது பேருக்கு விருந்தளித்து. விசாரணை அதிகாரியின் மகன் கனகசபாபதிக்கும் நிர்மலாவுக்கும் திருமணம் நிச்சயமாயிற்று.

வெகுவிரைவில் திருமணம் நடத்த நல்ல முகூர்த்தம் பார்ப்பதாக ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. நிச்சயதார்த்த பரிசாக மணமகனுக்கு ஆறு பவுனில் தங்கச் சங்கிலியும், வைர மோதிரமும். மூணரை பவுனில் பிரேஸ்லெட்டும். மாப்பிள்ளையின் தந்தைக்கு ஒரு தங்க மோதிரமும். தாயாருக்கு நாலாயிரத்து ஐநூறு ரூபாயில் ஒரு பட்டுப்



புடவையும் பரிசாகத் தரப்பட்டன.

அந்தப் பையன் அப்பாவுக்கு மிஞ்சிய மரியாதையோடு நடந்து கொள்கிறவனாய் தோற்றமளித்தான். அப்படி நடந்து கொண்டான்.

"மாப்பிள்ளை மனசு விட்டு பேசமாட்டேங் கிறாரே" என்று நிர்மலாவின் அப்பா குறைபட்டுக் கொண்டபோது. "நான் சொன்னாதான் பேசுவான். நான் சொல்லாம பேசமாட்டான்" என்று சபைக்கு நடுவே ஏகதாளமாக விசாரணை அதிகாரி சொன்னார். சபை சிரித்தது.

நிர்மலாவின் அம்மா கோபமானாள்.

"எல்லாவற்றிலும் அப்பா சொல்படிதான் நடந்துக்குவாங்களா" என்று நடுவே புகுந்து கேட்டாள்.

"ஆமாம்மா. நாம சொல்படிதான் நடந்துக்குவாங்க. நம்ம பிள்ளைங்க கூட நாம சொல்படி நடந்துக்கலேன்னா. வேற யாரு சொல்படி நடந்துக்குவாங்க, சொல்லுங்க" என்று மிக நிதானமாக விசாரணை அதிகாரி சொல்ல, அங்கு ஒரு இறுக்கம் நிலவியது.

"ஆரம்பத்துல எல்லாரும் இப்படித்தாம்மா இருப்பாங்க. போகப் போக அய்யோ இவன் பேச்சை நிறுத்தமாட்டானான்னு பேச ஆரம்பிச்சுடுவாங்க ஒண்ணும் கவலைப்படாதீங்க மாப்பிள்ளை பேசுவார்" கனகசபாபதியின் அப்பா சமாதானம் செய்து வைத்தார்.

"எங்கேங்க கல்யாணம்."

"அடையாறுல ஒரு இடம் பார்த்திருக்கோம்."

"அதெல்லாம் இல்லைங்க. பெரிய மனுஷாளுக்கு கல்யாணம் ஆகிற இடத்துலதான் நமக்கும் கல்யாணம் ஆகணும்" விசாரணை அதிகாரி ஒரு மஹால் சொன்னார். நாள் வாடகையே ஒரு லட்சத்திற்கும் மேல் இருந்தது.

"வந்து உட்கார்ந்து தங்கிட்டுப் போறதுக்கு ஏங்க இவ்ளோ பெரிய காசு"

"அதாங்க மரியாதை. எங்க கல்யாணம் நடந்துச்சுன்னா இந்த மஹால் பேர் சொல்லுவோம். மஹால் பேர் சொன்னாக்கா நாலுபேருக்கு நம்ம பத்தி மதிப்பா இருக்காதா."

"ரொம்ப அதிகமா செய்ய வேணாங்களே, என்ன ஏதுன்னு கேள்வி வந்துரும்."

"அதைப் பத்தி நீங்க ஏன் கவலைப்படுறீங்க. விசாரணை அதிகாரி நான்தானே. நான்தானே பதில் சொல்லப் போறேன். எங்க வீட்டு கல்யாணம்ன்னுதானே சொல்லப்

போறேன்" என்று உரக்கப் பேச வேறு வழியில்லாமல் நிர்மலாவின் அப்பா அந்த மஹாலை ஏற்பாடு செய்துவிட்டு வந்தார்.

நகைகள் பார்க்க வந்தார்கள். "நூற்றி நாற்பது பவுன் போடுறதா இருந்தாதான் நல்லாயிருக்கும். அதுக்கு குறையாதீங்க. கூடுதலா இருந்தா சந்தோஷம்" என்று விசாரணை அதிகாரியின் மனைவி சொல்ல, வீடு திகைத்தது.

அநேகமாய் ஒரு குண்டுமணி கூட இல்லாமல் வாங்கிக் கொண்டு போகிற ஒரு வேகம் இருப்பதை உணர்ந்தது.

"நூறுதாங்க முடியும்" என்று அவர் சொல்ல, நூற்றிப் பத்து என்று வந்து கடைசியில் நூற்றி இருபது பவுன் போடுகிறேன் என்று முடிவாயிற்று.

அவர்கள் தொணதொணப்பு தாங்காமல் வேகமாக நிர்மலாவின் அம்மா அதற்கு ஒத்துக் கொண்டாள். பிறகு கவலைப்பட்டாள்.

"இதுக்கப்புறம் சீரே கேட்கமாட்டீங்களா."

"அப்படி ஒண்ணும் சொல்லலியே. கேட்டாலும் கேட்பாங்க" என்று நிர்மலாவின் அப்பா சொல்ல, அவளுக்கு முகம் வெளிறிப் போயிற்று.

"அதுக்குத்தாண்டி சொன்னேன். தப்பாப் போறோம், தப்பாப்போறோம்னு. இந்த ஆள் வேணடாம், அவசரப்படாதேன்னேன். நீ அவசரப்பட்டு. இப்போ நெருப்பை பெயறுஞ்ச மாதிரி வச்சுக்கிறே" என்று உரக்கக் கத்தினார்.

கல்யாண சந்தோஷம் துளி கூட இல்லாமல் வீட்டுக்குள் மிகப் பெரிய கலவரம் நுழைந்தது போல ஒரு பிரமை வீட்டில் வந்து இறங்கியது.

கோட்டு சூட்டுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் என்று கேட்கப்பட்டது. வைரத்தோடு நாங்கள் செய்து கொள்கிறோம் என்று சொல்லி, அதற்கொரு ஐம்பதாயிரம் ரூபாய் கேட்கப்பட்டது.

மறுபடியும் தனக்கு அந்தரங்கமான ஆளை வைத்து விசாரணை அதிகாரியைப் பற்றி ஒரு புகார் எழுதி நிர்மலாவின் அப்பா டெல்லிக்கு அனுப்பினார்.

சி.பி.ஐ. வாங்கி வைத்துக் கொண்டது. இரண்டு பேரை சென்னைக்கு அனுப்பி, அவர்களை கண்காணிக்கச் சொன்னது. கல்யாண ஏற்பாடுகளை பார்த்துவிட்டு கணக்கெடுத்து டெல்லிக்கு குறிப்பு அனுப்பியது.

பதினாறாயிரத்து ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு



அதிகாரி, ஒரு நாளைக்கு ஒரு லட்சம் ரூபாய் வாடகை வாங்குகிற மஹாலை ஏற்பாடு செய்திருக்கிறார் என்பது முதல் குற்றமாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

நூற்றி இருபது சவரன் போடுகிறார்கள். நூற்றி இருபது சவரன் நகையையும் பாலிஷ் பண்ணக் கொடுத்தார்கள். அதற்கு ரசீது ஏழாயிரத்து நானூறு ரூபாய் ஆயிற்று என்று குறிப்பெடுத்துக் கொள்ளப்பட்டது.

ரசீதினுடைய ஜெராக்ஸ் காப்பி டெல்லிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. புடவைக் கடை பில்லும், நான்கு கேமராக்கள் கொண்ட வீடியோ கம்பெனி பில்லும், அரண்மனைபோல் மஹாலை அலங்கரித்த இன்டீரியர் டெக்கரேட்டர் பில்லும் டெல்லிக்கு அனுப்பப்பட்டன. கல்யாணம் நடந்து முடியட்டும் பிறகு பார்த்துக் கொள்வோம் டெல்லி பதில் அனுப்பியது. இன்னும் இரண்டு அதிகாரிகள் வந்து இறங்கினார்கள். கல்யாணத்தில் கலந்து கொண்டார்கள்.

மிக எளிதாக இந்த இரண்டு நாட்களுக்கு பத்து லட்சம் ரூபாய் செலவாகி இருக்கும். இரண்டு நாட்களுக்கு பத்து லட்சம் ரூபாய் செலவு என்றால், மற்ற செலவுகள் என்ன என்று கணக்குப் போட்டுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து அந்த அதிகாரி வெகு நிச்சயமாய் லஞ்சம் வாங்கினாலொழிய இதை செய்திருக்க முடியாது. விசாரணைக்கு வந்த அதிகாரியும் இதில் கூட்டாக சேர்ந்து கொண்டு, அந்த கூட்டினுடைய நிலையை உறுதிப்படுத்திக் கொண்டு, இந்த கல்யாண சம்பந்தம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். எனவே விசாரணை அதிகாரியையும் நாம் விசாரிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்று டெல்லிக்கு அறிக்கை அனுப்பியது.

கல்யாணம் முடிந்த நான்காம் நாள் நிர்மலா புருஷன் கனகசபாபதியுடன் தேன் நிலவுக்கு மும்பை போக, சி.பி.ஐ. அதிகாரிகள் ஒரே நேரத்தில் விசாரணை அதிகாரி வீட்டிலும், நிர்மலாவின் அப்பா வீட்டிலும் நுழைந்தார்கள். ரசீதுகளை கைப்பற்றினார்கள்.

## 3

"என்னடா தேன் நிலவுக்கு கொடைக்கானல், ஊட்டின்னு குளுகுளுன்னு போகாது இந்த புகை கக்கற மும்பைக்கு வந்துட்டே" நண்பர்கள் வியந்தார்கள்.

அதற்கு கனகசபாபதி சொன்ன பதில் நிர்மலாவின் வயிற்றை கலக்கியது.

"ரொம்ப சௌகரியம். நாம புகுந்த புறப்பட்ட இடத்திலதான் தேன் நிலவு இருக்கணும் அம்போறது இருக்கிற வீட்டுல போய் உட்கார்ந்துகிட்டு நாங்க என்ன பண்ணுவேன். ஒருவேளை நம்ம பாசிப் ரிப்போர்ட்டிருக்கலாம் இன்னொரு பாட்டி படுக்கவும் பிடிக்கலாம் இல்லையா."

நண்பர்கள் மௌனமாக இருந்தார்கள்.

"என்னடா யாரும் பேசமாட்டேன்றீங்க. இது புது சரக்கு. எடுத்தவுடனே படியும்னு சொல்ல முடியாது ஏதாவது லொள்ளு பண்ணும். அப்போ இது பின்னாடியே சுத்திகிட்டிருக்க முடியுமா. போய் படுத்துத் தூங்குவனு சொல்லிவிட்டு நாம வேற எங்கேயாவது போய் வேற ஏதாவது செய்ய வேண்டியதுதான்" என்று சொல்ல, பருவதனையே கொஞ்சநேரம் திரும்பிப் பார்த்தான்.

சட்டென்று கனகசபாபதி திரும்பினான். "முறைக்க வேலையெல்லாம் வச்சுக்கிட்டே. மூஞ்சி பேத்துரும். ஒழுங்கு மரியாதையா வா" என்று அடிக்குரலில் உறுமினான்.

அவன் உறுமியது அவன் நண்பர்களுக்கும் கேட்டது.

திருமணமான மறுநாளே அவன் முகம் மாறியிருப்பதும், அவன் தந்தை, தாயின் போக்கு வேறுமாதிரி இருப்பதும் அவளுக்குப் புரிந்தது. மெல்ல அம்மாவிடம் சொல்ல,

"அதெல்லாம் ஒண்ணுமிருக்காது. ஆரம்பத்தில் மிரட்சியாக எல்லா விஷயங்களும் கண்ணுக்குத் தென்படும். பிறகு சரியாப் போயிடும்" என்று சமாதானம் சொன்னாள். சமாதானம் சொல்லி விட்டு அவளும் கவலைப்பட்டாள்.

காதல் என்பது அறவே இல்லை. காமம் முரட்டுத்தனமாக இருக்கிறது. "இறுங்க் வலிக்கிறது" என்று சொன்னாலும் "உனக்கு வலித்தால் எனக்கென்ன" என்று அவன் மிருகம் போல நடந்து கொண்டான்.

திருமணமான பதினைந்தாவது நாள் திருமணத்தின் வரவு செலவுக் கணக்கு அத்தனையும் சி.பி.ஐ கையில் எடுத்துக் கொண்டது. அப்பாவின் வீட்டுக் கதவு தட்டியதும் உள்ளுக்குள் நுழைந்தது. அங்கேயும் சோதனையிட்டது. என்ன செலவு, எப்படி செலவு, எங்கே இருந்து வந்தது மூன்று லட்சம் ரூபாய் மஹாலுக்கு கொடுத்திருக்கிறாயே, எங்கிருந்து சம்பாதித்தாய், யார் கொடுத்த காசு என்று பல்வேறு விதமாய் கேள்விகள் கேட்டு, சம்பாதித்தது அத்தனையும் லஞ்சப் பணம் என்று தன் விசாரணையை எழுத்து மூலமாகக்



கொடுக்க, மூன்றாவது நாளில் அப்பாவுக்கு வேலை போயிற்று.

"நீங்கள் என்ன விசாரித்தீர்கள். என்ன கண்டு பிடித்தீர்கள்" என்று கனகசபாபதியின் அப்பாவை சி.பி.ஐ விசாரிக்க, அவர் இதுதான் விசாரித்தேன் என்று ஒரு அறிக்கையைக் கொடுத்தார். அரசாங்கத்திற்கு நாளை சமர்ப்பிக்க இருப்பதாகச் சொன்னார்.

அவர் நிர்மலாவின் அப்பாவிடம் காட்டிய அறிக்கை வேறு. அரசாங்கத்திற்கு கொடுப்பதாக இருந்த அறிக்கை வேறு என்று தெரிந்து போயிற்று.

"அவர் தன்னை பரம்பரை பணக்காரர் என்று சொல்லிக் கொண்டார். என்ன பரம்பரை, எப்படி பணம் வந்தது என்று நான் விசாரிக்கவில்லை. பணம் வருகிறது என்று சந்தோஷமாக நான் ஏற்றுக் கொண்டேனே தவிர அவருடைய வரவு செலவு கணக்கை நான் கேட்கவில்லை. மற்றபடி அலுவலகத்தில் அவரை விசாரித்தபோது அவர் பல இடங்களில் லஞ்சம் வாங்கியிருப்பது தெரிந்தது.

திருமணம் ஏற்கனவே நிச்சயிக்கப்பட்டு விட்டதால் ஒரு பெண்ணின் வாழ்க்கையை நான் நாசமாக்க வேண்டாம் என்று திருமணத்திற்கு சம்மதம் தெரிவித்தேன்" என்று பத்தொன்பது குற்றங்களை உண்மை என்று அவர் கண்டுபிடித்ததாக சொல்லியிருந்த அறிக்கையைக் கொடுத்தார்.

அப்பாவின் மீதிருந்த விலங்கு இன்னும் இறுகியது.

"உனக்கு என்னென்னவோ ஏற்பாடுகள் பண்ணினேண்டா. அத்தனையும் விட்டுட்டு இப்பப் போய் பெரிய யோக்கியன் மாதிரி பேசறியேடா" என்று அப்பா கத்த,

"நீங்க என்ன பேசறீங்கன்னே எனக்கு புரியலையே. நீங்க என்ன ஏற்பாடு பண்ணுனீங்க. நான் என்ன அனுபவிச்சேன்" என்று முகம் நிமிர்த்திக் கேட்க, அப்பாவால் அதிகம் பேசமுடியவில்லை. என்ன பேசினாலும் எடுபடாது என்று தெரிந்து விட்டது.

"சம்பந்திங்கற முறையிலாவது என்னைக் காப்பாற்றக் கூடாதா" என்று அப்பா அழ,

"இனிமேல் முடியாது. எப்ப கத்திட்டியோ அப்போ வேற எந்த வழியும் இல்லை. நீ வேற நான் வேறன்னு ஆயிப் போச்சு. ஒதுங்கிக்கறதுதான் உனக்கு மரியாதை. இல்லேன்னா என்னையும் உள்ள பிடிச்சுப் போட்டுருவான். என்னை உள்ள பிடிச்சுப் போட்டுட்டா என் பிள்ளைக்குக் கோபம் வந்திரும்.

என் பையனுக்கு கோபம் வந்தா உன் பொண்ணு கதி என்ன ஆகும்னு தெரியாது" என்று பயமுறுத்த, அப்பா இன்னும் பின்னடைந்து போனார்.

அம்மா ஒடிந்து போனாள், மயக்கமாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். இருதயம் சரியாக இயங்கவில்லை என்று அவளுக்கு சொல்லப்பட்டது.

அம்மாவுக்கும் அப்பாவுக்கும் துணையாக இருந்துவிட்டு வருகிறேன் என்று நிர்மலா சொன்ன போது "நீ அந்த வீட்டு வாசற்படி ஏறக்கூடாது. அது திருட்டு கும்பல். அங்கே இருந்தால் எனக்கும் கெட்ட பேர்" என்று கனகசபாபதியின் தந்தை மறுத்து விட்டார்.

"போயத்தான் ஆவேன். எங்க அம்மாவுக்கு ஆஸ்பத்திரியில் யாராவது செய்ய வேண்டாமா" என்று உரக்க அவள் பேசியபோது கனகசபாபதி விரைந்து வந்து பளீரென்று அவள் கன்னத்தில் அறைந்தான்.

திருமணமான ஒன்பதாம் நாள் நிர்மலா புருஷனிடம் அடி வாங்கினாள். அதற்குப் பிறகு தினசரி அவன் எதற்காகவாவது அடித்துக் கொண்டேயிருந்தான்.

"மும்பையில வேலை பார்த்தியா எப்படி இருக்காங்க ம், என்ன கலர் பார்த்தியா. நீயும்தான் தீஞ்ச போன தோசை மாதிரி இருக்கியே. அங்க பார் கோதுமை உடைச்சா மாதிரி இருக்கிறா. நான் கூப்பிட்டா வந்துருவா தெரியுமா உனக்கு. நான் கூப்பிட்டுமா, பார்க்கறியா" என்று சொல்லி, ஏதோ ஒரு பெயர் சொல்லி கூப்பிட்டதும், அவள் போய் அருகில் உட்கார்ந்து கொண்டாள். அவளை தொட்டுத் தொட்டுப் பேசினான். சிரித்தாள்.

மிகப் பெரிய ஸ்திரீலோலன் என்று அவளுக்கு பின்னால் தெரிய வந்தது. பெண்களுக்கு அவன் வாரி இறைத்த காசு கொஞ்ச நஞ்சமல்ல. அவனுக்கும் அவன் அப்பாவிற்கும் பெரிய தகராறு ஏற்படுகிற அளவில் பெண்கள் விஷயம் அந்த வீட்டில் அடிக்கடி நடக்குமென்று கேள்விப்பட்டாள். தலையில் அடித்துக் கொண்டாள். மிக மிக தப்பான ஓர் இடத்திற்கு வந்து விட்டோம். தவறான ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப் பட்டுவிட்டோம் என்று தனிமையில் அழுதாள்.

என்ன செய்வது என்று தெரியவில்லை. இவன் திருந்துபவனா, திருந்தக்கூடிய ஜாதியா என்று புரியவில்லை.

மாமனாரும் ஆதரவாக இல்லை. மாமியார் இவர்களிடம் அவஸ்தைப்பட்டு அவஸ்தைப்பட்டு இவர்கள்



என்ன சொன்னாலும் அதற்கு தலையாட்டுகிற பொம்மையாக மாறிவிட்டாள். வீட்டில் ஆணாதிக்கம் கொடி கட்டிப் பறந்தது.

நீசரி கிராமத்து பெண்ணொருத்தியை வேலைக்காரி ஆக்கி வைத்து, அந்த வேலைக்காரியை அறைக்குள் அழைத்துக் கொண்டு போய் கதவு சாத்தி மாமனார் கட்டிக் கொள்ள மாமியார் எந்த சலனமுமில்லாமல் டிவி பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஏன் இப்படி இருக்கிறீர்கள்" என்று கேட்டதற்கு, "என்ன செய்ய முடியும். செய்து என்ன சாதிக்கப் போகிறேன். நரி வலம் போனால் என்ன, இடம் போனால் என்ன. மேலே விழுந்து பிடுங்காமல் இருந்தால் சரி"

"என்னையும் அப்படி இருக்கச் சொல்கிறீர்களா" என்று அவள் கேட்டபோது, "எனக்குத் தெரியாது. உன்னைப் பற்றி எந்த அக்கறையும் இல்லை" என்று அவள் எடுத்தெறிந்து பேசினாள்.

"ஏன் இப்படிப் பேசுகிறீர்கள்" என்று அவள் அழ.

"என்னைப் பற்றி அழுவதற்கே எனக்குப் பிடிக்கவில்லை. அழுது அழுது வெறுப்பாகிவிட்டது. இனி என்ன ஆனாலும் அழுவதில்லை என்று நான் தீர்மானம் செய்துவிட்டேன். என்ன நடந்தாலும் கண்டு கொள்வதில்லை என்று அமைதியாகி விட்டேன்.

இது சந்தோஷமான இடமாக இருக்கிறது. அவர்களும் என்னை மரியாதையாக நடத்துகிறார்கள். முடிந்தால் என் வழியைப் பின்பற்று. அல்லது ஏதேனும் செய்து எப்படியேனும் வாழ். உன்னைப் பற்றி எனக்கு நெல் முனையளவும் அக்கறை இல்லை" என்று சொல்லிவிட்டாள்.

நீசரி வேலைக்காரியை வேலை வாங்க முடியவில்லை. மாறாய், அவளுக்காக இவள் சப்பாத்தி இட வேண்டியிருந்தது.

அப்பா மீது வழக்கு நடந்து சிறை தண்டனை அனுபவிக்கப்பட்டு, பதினைந்து நாள் சிறையிலிருந்து, மறுபடியும் ஜாமீனில் வெளியே வந்து, ஹைகோர்ட்டிற்கு அப்பீல் செய்து, அம்மாவின் கடைசி நகை வரை அவர் விற்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தார் என்று கடிதம் வந்தது.

அப்பா உதவி செய்யப் போவதில்லை. அம்மாவால் முடியாது. மாமனாரும் மாமியாரும் அயோக்கியர்கள். புருஷன் ரௌடி. நண்பர்கள் என்று யாரும் இல்லை.

இருபது வயது கூட முடியாத ஒரு இளம் பருவ... தினசரி புருஷனுக்கு இரையாவதைத் தவிர வேறு எந்த முக்கிய வேலையும் இல்லை என்பது போல் நடத்தப்பட்ட சோகம் அவளை வாட்டி வதைத்தது.

'எப்படிப்பட்ட துன்பம் நடந்தாலும் சரி, ராமநாமம் சொல்லுங்கள். துன்பத்திலிருந்து நிச்சயம் விடுதலை பெறுவீர்கள். இது என் அனுபவம். நான் அனுபவிக்காத துக்கம் இல்லை' என்று டி.வி.யில் ஒரு பெண் சாமியார் ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தார்.

அதையே பார்த்துக் கொண்டிருந்த போது உள்ளுக்குள் ஏதோ ஒரு மலர்ச்சி ஏற்பட்டது.

'பெரிய பெரிய கண்களை உடைய ராமன், உன் ஆபத்து நேரத்தில் நீ அழைக்க நிச்சயம் உனக்கு உதவ ஓடி வருவார் நிச்சயம் வருவார். ஆனால், வந்தது ராமன் என்பதை நீ எங்ஙனம் புரிந்து கொள்வாய்' என்று பாட்டுப் பாடினாள்.

அந்தப் பாட்டு மனதுக்குள் மிகப் பெரிய மாற்றத்தை நிர்மலாவுக்கு ஏற்படுத்தியது. கண்களை மூடிக் கொண்டு ராமநாமம் சொன்னாள். வா, வா என்று கூப்பிட்டாள். அன்று ஏதோ ஒரு சாதாரண விஷயத்திற்காக அடிபட்டாள். எட்டி உதைக்கப் பட்டாள். சுருண்டு ஹாலிலேயே சோறு தின்னாமல் படுத்துக் கொண்டிருந்தாள். எழுந்து உட்கார்ந்து மறுபடியும் ராமநாமம் சொன்னாள்.

'நீ வரமாட்டாயா. நீ வருமளவுக்கு நான் துக்கப்படவில்லையா. அல்லது எனக்கு எந்த யோக்கியதையும் இல்லையா' என்று கதறி அழத் துவங்கினாள்.

நடு நிசியில் முகத்தைப் பொத்திக் கொண்டு அவள் அழ, மறுபடியும் காதுக்குள் ரீங்காரம் கேட்டது. உள்ளுக்குள் ஒரு மாறுதல் ஏற்பட்டது. அவள் அழுகையை நிறுத்திவிட்டு ராமநாமம் சொல்லத் துவங்கினாள்.

மறுநாள் காலை அவளைத் தேடி போலீஸ் வந்தது.

டெல்லியில் உள்ள ஹோட்டல் அடுப்பில் ஒரு அழகிய பெண்ணை யாரோ தூக்கிப் போட்டு கொன்றுவிட்டார்களாம். உருத் தெரியாமல் சிதைந்து விட்டார்களாம். கடும் நாற்றம் எழ, அக்கம் பக்கத்தார் புகார் சொல்ல, போலீசார் வந்திறங்கி, சோதனை செய்து, எங்கு நாற்றம் வருகிறது என்று கண்டுபிடித்து, சிம்னியை அடித்துத் திறந்து பார்த்திருக்கிறார்கள்.



மிக கோரமான நிலையில் ஒரு பெண் பிணம் இருக்க, அது என்ன என்று விசாரித்து, யார் மூலமோ தகவல் கசிய, அவர்கள் இன்னார் என்று முடிவு செய்து, அந்த இன்னாருடன் யார் யார் இருந்தது என்று மேற்கொண்டு விசாரித்து, அதில் இவனும் இருக்கிறான் என்று தெரிந்து அவனை அள்ளிக் கொண்டு போனார்கள்.

அவன் முறைக்கும்போது லத்தியால் பளிச்சென்று முகத்தில் அடித்தார்கள். அவன் உதடு கிழிந்து ரத்தம் வந்தது.

அவன் திரும்பிப் பார்த்தான். "ஏதாவது பண்ணும்" என்று கத்தினான்.

அவள் பேசாமல் இருந்தாள்.

அவனை வாரி ஜீப்பில தூக்கிப் போட்டுக் கொண்டு போனார்கள்.

அவன் அப்பா வக்கீலுக்கு ஓடினார். பேப்பரில், ரேடியோவில், டி.வி.யில் அந்த கோர சம்பவம் வெளியாயிற்று. மாதர் சங்கங்கள் பரிந்து கொண்டு, இப்படிப்பட்ட ஒரு கொலையை ஒருவன் செய்வானென்றால் அவனை சும்மா விடக் கூடாது என்று உரக்கக் கத்தின.

அவள் விபச்சாரி என்றும், பலபேர் அவளை ஏமாற்றி இருக்கிறார்கள் என்றும், ஏமாற்றம் தாங்காமல் அவள் சிலருடன் அன்று சண்டை போட்டாள் என்றும், வாய்க்கு வந்தபடி சண்டையேனிக்கு திட்டினாள் என்றும், அப்படி திட்டிய பெயர்களில் இவன் பெயரும் இருக்கிறதென்றும் கனகசபாபதி கை நீட்டி சுட்டிக் காட்டி குற்றம் சொன்னான் என்றும், கனகசபாபதி கையிலிருந்த மதுபாட்டிலை தூக்கி அவள் மீது அடிக்க, அவள் மீது பட்டு வெளியே போய் சிதறியது என்றும், அடிக்க வந்த கனகசபாபதியை பலபேர் பிடித்துக் கொண்டார்கள் என்றும் அவள் பயந்துபோய் சமையலறைக்குள் ஓடினாள் என்றும் சொல்லப்பட்டது.

அவன் ஜாமீனில் விடு வந்தான்.

அவளுடைய நகைகள் மொத்தமும் அவன் வாரிக் கொண்டான். கணக்குப் போட்டான். எப்படியாவது ஜெயித்து விடுவேன். இந்தக் காசு போதும் என்று கொக்கரித்தான். மிகப்பெரிய வக்கீலை மிகப் பெரிய தொகை கொடுத்து, தனக்கு சாதகமாக வாதாட அமர்த்திக் கொண்டான். அவரால் அவனுக்கு ஜாமீன் கிடைத்தது.

அவன் நேரடியாக இதில் சம்பந்தப்படவில்லை என்று கோர்ட்டில் நிரூபிக்கப்பட்டது. அவன் அவளை கோபித்துக் கொண்டானே தவிர கொலை செய்யும் முயற்சியில்

இறங்கவே இல்லை என்பதை நீதிபதி ஏற்றுக் கொண்டார். அப்படியானால் கொலை செய்தது யார் என்பதை மிக வேகமாக விசாரிக்க வேண்டுமென்று போலீசுக்கு உத்தரவிட்டார்.

போலீஸ் தொந்தரவு செய்ய ஆரம்பித்தது.

போலீசுக்கு இவன் வாரி வழங்க ஆரம்பித்தான்.

எல்லா நகைகளும் விற்பதற்கு எடுத்துப் போனான. கழுத்தில் ஒரு தாலிக் கொடியைத் தவிர இரண்டு வளையல்கள் தவிர. ஒரு பவளக்கல் மோதிரம் தவிர வேறு எந்த நகையும் அவளுக்குத் தேவையில்லை என்று அவள் தீர்மானம் செய்தாள்.

நிர்மலா ஆச்சரியப்படத் தகுந்த ஒரு காரியம் நடந்தது.

"இவனுக்கெல்லாம் இப்படித்தான் முடிவு வரும்" என்று அம்மா பிள்ளையைப் பற்றி சொன்னாள்.

"இப்படிச் சொல்கிறீர்களே" என்று அவள் கேட்டபோது, "அவன் ஜெயிலுக்கு போனாதான்டி நிம்மதியா இருக்க முடியும். இவன் அப்பனையும் சேர்த்து ஜெயில்ல போட்டா நானும் நிம்மதியா இருப்பேன்" என்று சொன்னாள்.

திடீரென்று மாமியார் அவளுக்கு எதிராகப் பேசியது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளும் சுதந்திரமாக நடக்க ஆரம்பித்தாள். மாமியாருக்கு பார்த்துப் பார்த்து சமைத்துப் போட்டாள். அவளுக்கு வேலை செய்ய விட்டாமல் அவளுடைய வேலைகளைத் தான் எடுத்து செய்தாள். மாமியார் எங்கோ அசைவதாகத் தெரிந்தது.

"எதுனா காசு வச்சிருக்கியாடி."

"எம்மா கேட்கறீங்க."

"எப்படியாவது எங்கேயாவது திருடியாவது காசு வச்சுக்க" என்று மாமியார் உபதேசித்தாள்.

"இவன் ஜெயிலுக்குப் போவது நிச்சயமாகி விட்டது. ஆகவே நீ தனியே வாழ்வதற்கு சிறிதளவாவது காசு வேண்டும். ஒரு லட்சம் ரூபாயாவது காசு எங்கிருந்தாவது எடுத்து வைத்துக்கொள்" என்று சொல்ல.

புருஷன் எல்லா நகைகளையும் வாரிக் கொண்டு போய் விட்டான். வெறும் டாலர் மட்டுமே ஒன்று பெட்டிக்கடியில் கிடந்தது. அது நாலாயிரம் ரூபாய் கூட பெறுமானம் இல்லாத டாலர். அதற்கு மேல் காசு வேண்டுமென்றால் என்ன செய்வது அவள் யோசித்தபோது.

பீகாரி பெண்ணுக்கு அவள் மாமனார் எங்கிருந்தோ



காசு கொடுப்பது தெரிந்தது. மூன்று நாளைக்கு ஆயிரம் ரூபாய் என்று அவர் ஏதோ கணக்குப் போட்டுச் சொல்ல. அவர் எங்கிருந்து காசு எடுக்கிறார் என்று கவனித்துக் கொண்டாள்.

அவர் வெளியே போனபோது அவள் தேடத் தொடங்கினாள்.

ஒரு மர பீரோவின் கடைசியில் ஒரு அலுமினிய பெட்டி இருந்தது. அந்த அலுமினியப் பெட்டி பூட்டு போடப்பட்டிருந்தது. காபி விட்டு அந்தப் பூட்டை தெரிந்து அலுமினியப் பெட்டியைத் திறந்தாள்.

உள்ளே நூறும் நூறுமாக கத்தை கத்தையாய் காசு இருந்தது. இரண்டு கல் வைத்த மோதிரமும் ஒரு சாதாரண மோதிரமும் இருந்தது. பெட்டியை அப்படியே எடுத்துக் கொண்டாள். கொண்டு வந்து ஒரு பாலாடையில் முடிச்சாகக் கட்டினாள். சமையலறையில் அடுப்பங்கரை பரணை காலி செய்து அதில் மூட்டையை வைத்து அதன் மீது சாமான்களைப் பரப்பினாள். அந்தப் பெட்டியை பீகாரி வேலைக்காரி தன் சாமான்கள் வைத்திருக்கும் இடத்தில் வைத்துவிட்டாள்.

மூன்று நாள் கழித்து பூகம்பம் வெடித்தது. எங்கே எங்கே என்று அவர் கோபத்தோடு அலைய, எது ஏதுவென்று அவள் கேட்க அவரால் பதில் சொல்ல முடியவில்லை.

அவர் பீகாரி வேலைக்காரியை பிடித்துக் கொண்டார். அவளை அடிக்கத் துவங்கினார். அவள் ஓடிப்போய் அவளுடைய ஆட்களை கூட்டி வர, வீட்டு வாசலில் பெரிய ரகளை நடந்தது.

மதராஸிகள் அதிகம் வசிக்கும் அந்தப் பகுதியில் பலபேர் வந்து என்ன என்று விவரம் கேட்க, அவர் சீறி விழுந்தார். மறுபடியும் கெட்ட பெயர் வாங்கிக் கொண்டார். "நம்ம மானத்தை வாங்குறதுக்குன்னே இங்க வந்திருக்கீங்களா" ஒரு பையன் சொல்ல, அவர் அவனை பாய்ந்து பிடித்தார்.

என்னடா சொன்னே என்று கை ஓங்கினார். அவன் அவருடைய மணிக்கட்டை இறுக்கப் பற்றினான். திருப்பினான். அவர் வலியில் அலறினார்.

"இந்த கை ஓங்குகிற வேலை எல்லாம் வேற இடத்துல வச்சுக்கோ. எங்கிட்ட நடக்காது" என்று சொல்ல, அவருடைய பிள்ளை அப்பாவைக் காப்பாற்ற ஓடிவந்தான்.

அவனையும் இடது கையால் மணிக்கட்டை பிடித்துக் கொண்டான். அவன் அப்பனையும், பிள்ளையையும் மாறு

பிடித்துக் கொண்டு போவது போல தெரு முழுவதும் அழைத்துக் கொண்டு போய் மறுபடி கொண்டு வந்து வீட்டு வாசலில் தள்ளினாள்.

"உங்களாலதான் அடிக்க முடியுமா, உங்களுக்குத்தான் உரம் உண்டா? ஒவ்வொரு எலும்பையும் உடைய வச்சருவேனா ஜாக்கிரதை" என்று பயமுறுத்தினாள்.

அவனுக்கு அவளைப் பார்க்க ஆச்சரியமாக இருந்தது.

வெறுமே கையை முறுக்கி அழுத்தி இப்படி அலற வைக்க முடியுமா, எப்படி செய்கிறாள் இவள் என்று அவளை ஆவலோடு பார்த்தான்.

அவளும் ஒரு கணம் அவனை உற்றுப் பார்த்தது அவனுக்குப் புரிந்தது. அவன் வெட்கப்பட்டு பின்னடைந்தான். அவள் யாரென்று யாரை விசாரிப்பது என்று தெரியாமல் தயங்கினான்.

அன்று மாலையே யாரோ ஒரு ஆளை கூட்டிக் கொண்டு வந்து அந்த இடம் முழுவதும் பவுடர் தூவி கைரேகைகள் பார்க்க, வந்தவன் அங்கு கைரேகைகள் அதிகம் இருப்பது உங்களுடைய மருமகள்தான் என்று சொல்லிவிட அவர் பாய்ந்து அவள் தலைமுடியைப் பிடித்துக் கொண்டார்.

புருஷன் ஓடிவந்து விலக்க அவர் வடசத்தி நாற்பத்தேழாயிரம் ரூபாய் காணோம் என்று சொன்னார்.

"எனக்குத் தெரியாம அவ்வளோ காசு என் வச்சுட்டிருக்கே, எதுக்காக வச்சுட்டிருக்கே" என்று பிள்ளை அப்பாவோடு சண்டை போட்டான். பிறகு இவள் கழுத்தை பிடித்துக் கொண்டான்.

"எங்கடி, எங்க வச்சருக்கே காசு, என் எடுத்தே" என்று சரமாரியாக அடித்தான். அவள் அடிதாங்காமல் அலறினாள். அவள் அலறுவது தெருமுழுவதும் கேட்டது.

எத்தனை அடித்தாலும் அவள் தான் எடுத்ததாக சொல்லவே இல்லை. "அங்கு இருப்பவற்றை சுத்தம் செய்தேனே தவிர வேறு எதுவும் செய்யவில்லை" என்று சத்தியமே செய்தாள்.

அப்படி பொய் சத்தியம் செய்ய அவளால் எளிதில் முடிந்தது. அவளுடைய வேதனைகள் அப்படி செய்ய வைத்தன. இவர்களுக்கு எதிராக இயங்குவது, இவர்களை இன்னும் சிக்கலில் மாட்டி விடுவது என்று அவள் தீர்மானித்தாள். அவளுக்கு வழியே தெரியவில்லை. எப்படி



இவர்களை வாழ்க்கையிலிருந்து துரத்துவது என்று யோசிக்கத் துவங்கிவிட்டாள்.

அந்தப் பையன் அவள் முன்னே அடிக்கடி தோன்றினான்.

அவனிடம் இந்த மாதிரி வித்தைகள் ஏதேனும் கற்றுக் கொள்ளலாமா என்று யோசித்தாள்.

அவன் எங்கிருக்கிறான் என்று எதிர்ப்பக்கம் உள்ளவர்களை விசாரித்தாள்.

அவர்கள் இடம் காட்டினார்கள்.

எந்தக் காரணம் கொண்டும் மூன்றாம் முறை வாய்தா இல்லை. கேஸை இழுத்தடிக்க பார்க்கிறீர்களா, அடுத்த முறை வரவில்லையென்றால் நான் மிகக் கடுமையாக இருப்பேன் நாளை மறுநாள் கோர்ட்டில் ஆஜராக வேண்டுமென்று ஹைகோர்ட் கூறியது.

இந்த கொலைக் கேஸை மறைக்க அரசியல் சக்திகள் முயலுகின்றன என்ற பேச்சு வர, பத்திரிகைகளில் அது பற்றி மிகவும் பேசப்பட்டது.

கனகசபாபதியின் புகைப்படம் போட்டு இவனும் ஒரு திருடன் என்பதுபோல எழுதியிருந்தார்கள். இவனும் பெண்களை ஹிம்சிக்கிறவன் என்று எழுதியிருந்தார்கள். இவனுடைய மனைவியை இவன் சொல்லொணா கொடுமைக்கு ஆளாக்குகிறான் என்ற ஒரு வரியும் இருந்தது.

மறுநாள் காலை போலீஸ்காரர்கள் வந்து அவன் கோர்ட்டுக்கு வராவிட்டால் விபரீதமாகும் என்று எச்சரித்து விட்டுப் போனார்கள்.

அவன் பத்துமணிக்கு கோர்ட்டுக்குப் போனான்.

அந்தப் பையன் வீட்டுக்குள் நுழைந்தான். "என்னைப் பற்றி விசாரித்தீர்களாமே. எதற்கு" என்று வந்து உசுப்பினான்.

அவன் பெயர் கதிரேசன் என்று தெரிய வந்தது. அவள் தன் பெயரைச் சொன்னாள். எதற்குத் தேடினீர்கள் என்று மறுபடியும் அவன் விசாரித்த போது, தட்டுத்தடுமாறி தயங்கித் தயங்கி தன்னுடைய நிலையைச் சொன்னாள். தான் துன்புறுத்தப்படுவதைச் சொன்னாள். தன் வீடு ஏமாற்றப்பட்டதைச் சொன்னாள். தன் வீடு என்னவிதமெல்லாம் ஆடியது என்பதைச் சொன்னாள்.

அவன் மிகப் பொறுமையாகவும் அமைதியாகவும் கேட்டுக் கொண்டிருந்தான்.

நிறைய ஆண்களுக்கு 'பேசுவதைக் கேட்கும் பொறுமை இருப்பதில்லை. மேற்கொண்டு மேற்கொண்டு என்று வேகமாக பேசுவதையே அவர்கள் விரும்புவார்கள். ஆனால் நீ எத்தனைதரம் பேசினாலும், திரும்பத் திரும்ப சொன்னதையே சொன்னாலும், பொறுமையாக கேட்டுக் கொண்டிருப்பேன் என்று அமைதியாக கை கட்டி உட்கார்ந்திருக்கும் ஆண்கள் மிகக் குறைவு. சதீரேசன் அந்த வகையைச் சார்ந்தவனாக இருந்தான்.'

"மன்னிச்சுக்குங்க. நான் சொன்னதையே மறுபடி சொல்லிட்டிருக்கேன்."

"பரவாயில்லே. நீங்க சொல்லி முடிக்கிற வரைக்கும் நான் எதுவும் கேட்கிறதா இல்லை. மனசு தாங்காம நான் கேட்பேன்கிற நினைப்பில்லதானே... கூப்பிடறீங்க. நான் எதுக்கு அதைத் தடுக்கணும். உங்க மனசுக்கு சந்தோஷமா இருந்தா இன்னும் கொஞ்சம் நேரம் கூட நான் கேட்கத் தயாராயிருக்கேன்."

அவன் காட்டிய நட்பு அவளை நெகிழ வைத்தது.

"சரி உங்களைப் பத்தி சொல்லிட்டீங்க. எதுக்கு கூப்பிட்டீங்கன்னு சொல்லலியே."

"என்னால அடி தாங்க முடியலீங்க. அதுலயிருந்து தப்பிக்கச் சொல்லு."

"நீங்க என்ன கேட்கறீங்கன்னு எனக்குப் புரியலை. என்னை உங்க பாடிகார்டா நிக்கணும்னு நினைக்கறீங்களா. அது செய்ய முடியாது. புருஷன் மனைவிக்குள்ள வேறு யாரும் நுழைய முடியாது. ஆனால், உங்களை அடிக்க வரும்போது நீங்க எப்படி தடுக்கணும்கிறதை பத்து நிமிஷத்துல சொல்லிக் கொடுத்துருவேன்."

அவன் தற்காப்புக்கான முறைகளை நிதானமாகவும் திருப்படவும் சொல்லிக் கொடுத்தான்.

"இதுக்கு உடம்புல வலு வேணும்னு அவசியம் இல்லே. மனசுல தைரியம் இருந்தாப் போதும்."

"மனசில தைரியம் எப்போ வரும்."

"உன்னை கடைசி வரைக்கும் எதிர்ப்பேன் அப்படின்னு தீர்மானம் பண்ணிட்டீங்கன்னா உங்களுக்கு தைரியம் வந்திரும். எதிர்க்கிறதா வேண்டாமா அப்படின்னு குழப்பத்துல இருந்தால்தான் இந்த தைரியம் வராது போகும். உங்களுக்கு புருஷன் வேணுமா வேண்டாமான்னு முடிவு பண்ணிட்டு அதற்கப்புறம் இதை செயல்படுத்துங்க" என்று சொன்னான்.



"எனக்கு புருஷன் வேண்டாம்."

"டக்குனு பேசாதீங்க. உங்க குழந்தைக்கு அப்பா வேணும். அப்படின்னு இன்னொரு வார்த்தை வரும். அப்போ உங்க பதில் வேறயா இருக்கும்" என்று சொன்னான்.

"எனக்கு புருஷன் இவன்தான்னு மறுபடியும் சொன்னாலும் நான் தாங்கிக்க தயார். ஆனால், நான் ரொம்ப வேகமா இருக்கிறது என் பொண்ணுக்கு இவன் அப்பாவாக இருக்கவே கூடாது. அவள் அவலத்தையே படக்கூடாது. இதுதான் என்னுடைய முக்கியமான விஷயம்."

"அப்படியானால் செய் எவ்வளவோ வேகமா நீங்க தாங்க முடியுமோ அவ்வளவோ வேகமா செய்திரலாம். இந்த இரண்டு விரலையும் அடிக்கடி விரைப்பா வெச்சுக்க பழகிக்குங்க. அரிசியில மெல்ல மெல்ல விரலைக் குத்தி வந்து எத்திக்குங்க. ஆரம்பத்தில வலிக்கும். ரெண்டு மூணு நாளில சரியாப் போயிடும்" என்று சொல்லிக் கொடுத்தான்.

அப்பாவும் பிள்ளையும் போலீஸ் ஸ்டேஷன், கோர்ட் என்று அலைந்தார்கள். வக்கீல் வீட்டு வாசலில் தவம் கிடந்தார்கள்.

"இருக்கிற சிறிது வழக்கையே என்ன பண்றது என்று முழித்துக் கொண்டிருக்கிற போது இப்படி அயோக்கியத்தனமா இன்னொண்ணுல மாட்டியிருக்கியேடா" என்று அப்பா சொல்ல, அப்பனுக்கும் பிள்ளைக்கும் இடையே சண்டை வந்தது.

இவர்களை மிக மோசமான ஆட்கள் என்று சிபிஐ போலீஸிடம் சொல்ல, போலீஸ் மிக வேகமாய் இந்தக் கேஸை எடுத்துக் கொண்டு தீவிரமாய் விசாரணை செய்தது. பத்திரிகைகள் அதிகம் பேசியதால் இந்த கொலைக் கேஸில் ஆர்வம் ஏற்பட்டது. ரகசியமாக துப்புகள் கிடைத்தன. மொட்டைக் கடிதாசிகள் வந்தன. வேறு எங்கெல்லாம் இந்தப் பையன் ஆட்டம் போட்டிருக்கிறான். யாரெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று பட்டியல் தரப்பட்டது.

அந்தப் பட்டியலை எடுத்துக் கொண்டு போலீஸ் நாலா பக்கமும் விசாரித்து, பட்டியலில் பாதி பேரை வளைத்து, அவர்களையும் அவனுக்கு எதிராக சாட்சி சொல்ல வைத்தது. குற்றம் நிரூபிக்கப்பட்டது என்று போலீசுக்கு தெள்ளத் தெளிவாகத் தெரிந்த போது, அவனைக் கைது செய்து உள்ளே வைக்க வாரண்ட் வாங்கியது. அவன் போலீஸ் மூலம் விவரம் தெரிந்து கொண்டு காணாமல் போனான். தலைமறைவானான்.

போலீஸ் அவள் அப்பாவை கைது செய்து உள்ளே வைத்தது. அப்பா மார்பு வலிக்கிறது என்று அரசாங்க பொது மருத்துவமனையில் சேர்ந்தார். அவருக்கு அங்கு சரியான உதவி செய்ய ஆளில்லாமல் அவஸ்தைப் பட்டார். நான் எப்படி இருந்தவன் தெரியுமா என்று அங்கும் பிதற்றிக் கொண்டார்.

தலைமறைவானவர்களைத் தேடி போலீஸ் இந்தியா முழுவதும் வலை விரித்தது. அவன் சென்னைக்குப் போயிருப்பான் என நினைத்து அங்கு ஓடியது. ஆனால் அவன் கெட்டிக்காரன். போலீஸ் எங்கு நகரும் என்று அறிந்து அவன் காஷ்மீர் பக்கம் போனான். கையிலிருந்த காசில் தீவிரவாதிகளிடம் ஒரு ரிவால்வர் வாங்கினான். புல்லட் பெட்டிகள் வாங்கினான். அநியாய விலைக்கு வாங்கிய அந்த கருவியை எடுத்துக் கொண்டு மறுபடியும் மும்பைக்கே திரும்பினான்.

இரவில் மொட்டைத் தலையுடனும் பகலில் தாடியை ஒட்டிக் கொண்டும் அலைந்தான். தினம் ஒரு ஹோட்டல் நாடினான். கையிருப்பு வேகமாகக் கரைந்தது. யாரையோ வழிப்பறி செய்து அந்தக் காசை வைத்துக் கொண்டு மறுபடியும் காலம் ஓட்டினான். வழிப்பறி செய்த ஆட்கள் குழப்பமாய் தகவல்கள் கொடுக்க, போலீஸ் கைரேகை பரிசோதனை செய்தது. ஏதேச்சையாய் இவன் கைரேகை என்பதை கண்டுபிடித்தது.

இவன் மும்பையில்தான் இருக்கிறான்... என்று ஆச்சரியப்பட்டது. இன்னும் அவனைப் பிடிக்க ஆட்கள் அனுப்பியது. அவன் உத்திரப் பிரதேசம் மீரட்டுக்குப் போனான். அங்கு ஒரு கூட்டுறவு பேங்கை பட்டப் பகலில் கொள்ளையடித்தான். டெல்லி போகிறேன் என்று டெலிபோனில் யாரிடமோ சொல்லி விட்டு, தெற்கு நோக்கிப் பயணப்பட்டான். அங்கிருந்து டெல்லி கிளம்பி டெல்லியிலிருந்து விமானம் பிடித்து மும்பைக்கு வந்து, ஒரு பழைய மோட்டார் சைக்கிள் வாங்கி, பலமுறை அவன் வீட்டை சுற்றி வந்தான். திடீரென்று வீட்டிற்குள் நுழைந்தான்.

உள்ளே உட்கார்ந்து டி.வி. பார்த்துக் கொண்டிருந்த மனைவியை மிரட்டி, கதவு தாழ்ப்பாள் போடச் சொன்னான். உடனே படுக்கைக்கு வரும்படி மிரட்டினான். அவள் மறுக்க அடித்தான். அவள் எதிர்க்க இன்னும் மோசமாய் அடித்தான். அவள் அடி தாங்காமல் பணிந்தாள்.

அருகே குழந்தை உட்கார்ந்து கொண்டிருந்தது. அவன் எந்த லஜ்ஜையும் இல்லாமல் அவளை மனதாலும் உடலாலும்



துன்புறுத்தினான். குழந்தையும் பார்த்துக் கொண்டிருந்தது. அவள் வேதனைப்பட்டாள்.

"என்ன ஓடிட்டான்னு நினைச்சியா ஒழிஞ்சிட்டான்னு நினைச்சியா என்னை யாரும் ஒழிக்க முடியாதுடி. ஒண்ணுல ரெண்டு பார்த்திடுறேன் இந்த கவர்மெண்ட் என்னை கண்டு பிடிக்க முடியாதபடி வேற விதமா வருவேன். நீ பெட்டி படுக்கையோட கிளம்பத் தயாரா இரு. வேற இடத்துக்கு வேற தேசத்துக்கு நாம குடி போறோம்" என்று அவளை மிரட்டி விட்டு, வேறு உடைகளை எடுத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறினான்.

அவள் கதிரேசனுக்குப் போன் செய்தாள். கதிரேசன் வந்ததும் அவனுக்கு நடந்ததை தெரிவித்தாள். அந்தக் குழந்தை மிரண்டு அழத் தொடங்கியது. கதிரேசன் மெல்ல அந்தக் குழந்தையை அணைத்துக் கொண்டான்.

கணவன் மனைவி விவகாரத்தில் எவ்வளவு தூரம் தலையிடுவது என்று தெரியவில்லை. எவ்வளவுதான் மனைவியை ஒரு கணவன் துன்புறுத்தினாலும் எத்தனை அவள் கதறி அழுதாலும் அவர்களுக்குள் உள்ள பிணக்கு ஒரு இரவில் தீர்ந்து போகும்.

ரகசியமாய் அந்தரங்கமாய் அவளிடம் கணவன் மன்னிப்புக் கேட்டாலும் இனி கோபித்துக் கொள்ள மாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்தாலும், மனைவி எப்படியும் முரடனாய் மாறிப்போய் யார் யாரிடமெல்லாம் தன் கணவனைப் பற்றி புகார் சொன்னாலும் அத்தனை பேரையும் சந்திக்கவே மறுத்து விடுவாள். பேசவே பயப்படுவாள்.

இது சமாதானம் பேசுகிறவருக்கு மிக சங்கடத்தைக் கொடுக்கும். கொஞ்சம் அதிகப்படியாய் கணவரை எச்சரிக்கப் போய் விட்டால், மிரட்டத் துவங்கி விட்டால் இன்னும் அதிகமான முக இறுக்கத்தைக் கொடுத்து விடும். எனவே மிகுந்த கவனத்தோடு கணவன்-மனைவி சண்டைக்குள் நுழைவது நல்லது என்று கதிரேசன் தீர்மானித்தான். இருப்பினும் தனக்கு இந்த விஷயம் தெரியும் என்று நிர்மலாவின் கணவனிடம் சொல்வதற்குத் திட்டமிட்டான்.

நிர்மலாவின் கணவனை எங்கு தேடுவது என்று தெரியவில்லை. வேறு யாரை இதற்கு உதவிக்கு வைத்துக் கொள்ள முடியும் என்றும் புரியவில்லை.

போலீசாரால் தேடப்படுகின்ற ஒரு ஆளை தான் தேடுகிறபோது, தானும் வம்பில் மாட்டிக் கொள்ள

வாய்ப்பிருக்கிறது. இரண்டாவது ஆளை கட்டில் சேர்த்துக் கொள்கிறபோது அந்தக் கூட்டாளி ஏதேனும் குழப்பம் செய்து விட வாய்ப்பிருக்கிறது. எனவே, நிர்மலாவிடமும் சொல்லாமல் இவனை தனியே கண்காணிக்க வேண்டும் என்று தீர்மானித்து, நிர்மலாவின் வீட்டிருப் போகும் வழியில் வேறு விதமாய் உடுத்தி, ஒரு வட இந்தியன் போல் உட்கார்ந்து கொண்டான்.

முதல் நாளும் மறுநாளும் வெறுமனே கழிந்தன. எதற்காக நிர்மலாவிடம் இல்லாமல் ஈடுபாடு கொள்கிறோம் என்கிற துக்கமும் அவஸ்தையும்தான் அதிகம் ஏற்பட்டன.

'எனக்குத் தெரியாதம்மா. உன்பாடு உன் புருஷன்பாடு' என்று கைகழுவி விடலாமா என்று தோன்றியது.

ஆனால் வெகுநேரம் மௌனமாய் இருந்து விட்டு கதிரேசன் அணைத்துக் கொண்டதும் அழுத குழந்தை ஞாபகம் வர, இந்தக் குழந்தைக்காகவாவது ஏதாவது செய்யலாம் என்கிற எண்ணம் வந்தது.

பத்து வயதில் லக்னோவிருந்து வந்து இருபது வயதில் மும்பைக்கு மாறி முப்பது வயதில் செக்யூரிட்டி கம்பெனி வைத்துக் கொண்டிருக்கிற ஒரு பெங்காலி தோழனுக்கு உதவி செய்து கொண்டிருப்பதும் அவன் ஆதரவில் வாழ்ந்து கொண்டிருப்பதும் தவிர வேறு எதுவும் புதிதாக நிகழ்ந்து விடவில்லை.

ஆனால், நிர்மலாவைப் பார்த்தால் அந்தக் குழந்தையின் ஸ்பரிசத்தை உணர்ந்தால் வேறு ஏதோ புதிதாக நிகழ்ந்து விடும் என்று தோன்றுகிறது. பெங்காலித் தோழன் தன் சொந்த சகோதரியை திருமணம் செய்து கொடுக்க முன்வந்தபோது, அவன் கைகூப்பி மறுத்து விட்டான்.

நமக்குள்ளே அற்புதமான நட்பு இருக்கிறது. எதற்காக அதை முறித்துக் கொள்ள வேண்டும். நீயும் நானும் உறவானால் வந்த பெண்ணால் உனக்கும் எனக்கும் மெல்லிய அளவு ஏதேனும் மனஸ்தாபம் வரக்கூடும். அது தொழிலில் பெரிதாய் பிரதி பலிக்கும். நீயும் நானும் இருக்கின்ற இந்த செக்யூரிட்டி தொழில் மிக கவனமாய் ஈடுபட வேண்டிய தொழில். நாம் இரண்டு பேரும் எந்த பிளவுமின்றி இருந்தால்தான் இதை திறம்பட நடத்த முடியும். இது ஒருவரால் நடத்த முடியாத விஷயம்.

நானூற்று ஐம்பது ஆட்களை கட்டி மேய்ப்பது என்பது எளிதல்ல. நாம் அனுப்புகின்ற செக்யூரிட்டிகள் திருடர்களாக மாறாமலிருக்க, நாமே கண்காணிக்க வேண்டியிருக்கிறது.



எனவே, உறவாக நம்மை பலப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உனக்கு நானும், எனக்கு ஏற்படும் பிரச்சினைக்கு நீயும் உணர்ந்து உண்மையாய் ஒருவரை ஒருவர் ஈடுபடுத்திக் கொண்டால் போதும். அது நம் உறவை, நட்பை பலப்படுத்தும் என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டான்.

அவனுடைய பேச்சு பெங்காலித் தோழனுக்குப் பிடித்திருந்தது.

கதிரேசனுக்கு அந்தக் கம்பெனியில் எந்த பதவியும் இல்லை. எந்த அதிகாரமும் இல்லை. ஆனால், அவன்தான் அங்கு சகலமும் இயக்கிக் கொண்டிருந்தான்.

பெங்காலித் தோழன் வருவதைக் கண்டு பயப்படாத செக்யூரிட்டிகள், இவன் வருவதைக் கண்டால் நடுங்குவார்கள். இரவு கம்பெனி வாசலில் பாய் போட்டுத் தூங்குகிறாயாமே. ஒரு பாட்டில் மது அனுப்பட்டுமா, கால் பிடித்து விட பெண் அனுப்பட்டுமா என்று சாதாரணமாக கேட்க, அவன், இல்லை பழக்கமில்லை என்று சொல்வான். சத்தியம் கூட செய்து கண் கலங்குவான். அந்த நேரம் கதிரேசன் விட்டு விட்டு, மறுபடியும் அவன் பாய் போட்டு படுத்துத் தூங்குகிறபோது அருகே போய் தட்டி எழுப்புவான். எழுந்ததும் கன்னத்தில் அறைவான். மிக மோசமாக அவனை நடத்துவான்.

இனி எந்த செக்யூரிட்டியிலும் நீ வேலை செய்ய முடியாது. கிராமத்திற்குப் போய் சாணி பொறுக்கத்தான் லாயக்கு போ. போய் விடு என்று விரட்டி அனுப்புவதை மற்ற செக்யூரிட்டி ஆட்கள் பார்க்கிறபோது ஒழுங்காக இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பார்கள். வார்த்தையாலும், செய்கையாலும் கடமை தவறியவரை மிக வேகமாக தண்டிப்பது கதிரேசனுக்கு வழக்கம்.

அதே நேரம் ஒரு ஐரோப்பியர் வீட்டில் ஒரு திருடன் உள்ளே நுழைய முற்பட, செக்யூரிட்டி விழித்துக் கொண்டு போலீஸுக்கு போன் செய்து, இவனுடைய டெலிபோனுக்கும் தகவல் சொல்ல, போலீஸ் வருவதற்கு முன்பு கதிரேசன் வந்து விட்டான்.

"போலீஸ் லேட்டாதான் வரும். நீ சத்தம் போட்டு அவனை விரட்டு. அவன் வெளியே வருவான். அதற்கப்புறம் நான் பார்த்துக்கறேன்" என்று சொல்ல,

"அவன் யாரது, என்ன" என்று ஹிந்தியில் கத்தி அவனை விரட்ட, அவன் கையில் துப்பாக்கி இருப்பது

தெரிந்து ஒளிந்து கொள்ள இரண்டு முறை துப்பாக்கி சூடு நடந்தது. பூந்தொட்டியும், கண்ணாடிகளும் உடைந்தன. வீட்டுக்குச் சொந்தக்காரரான ஐரோப்பியன் எழுந்து விளக்குப் போட தோட்டத்து விளக்குகள் பளீரென்று எரிய, மாடி ஏறியவன் கீழே குதித்து வெளியே ஓடினான். வெளியே ஓடியவன் தெருவில் இறங்கி மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளப்ப, அவனைத் தன்னுடைய காரில் கதிரேசன் பின் தொடர்ந்தான்.

ஒரு இடம் தாண்டியதும் மிக வேகமாகப் போய், கொஞ்சமும் கூச்சமில்லாமல் பளிச்சென்று இடது பக்கம் வலித்து அவனை இடித்து சாய்த்தான்.

ஏய் ஏய் என்று அவன் கத்த, மடக்கி பிடித்ததில் பயங்கரமாக அடிபட்டிருந்தது. அடித்ததில் அலறல் இன்னும் அதிகமாயிற்று.

யார் சொல்லு... சொல்லு... என்று விரல்களை நசுக்கியதில் கணுக்கால்களை அழுத்தியதில் உண்மை வெளி வந்தது. இது வெளிநாட்டு சமாச்சாரம். அந்நிய தேசத்து உளவாளி. தூக்கி சுவற்றில் நான்கு முறை எறிந்து, அவன் முதுகெலும்புகளை நகர வைத்து விட்டு, அவனை குப்பையாகத் தூக்கி போலீஸ் ஸ்டேஷன் வாசலில் போட்டு விட்டு வந்து விட்டான்.

அன்று மாலை, அந்த செக்யூரிட்டிக்கு மூவாயிரம் ரூபாய் பெங்காலித் தோழன் பரிசாகக் கொடுக்க, பத்தாயிரம் ரூபாய் அந்த ஆங்கிலேயர் பரிசாகக் கொடுக்க அவனுக்கு தன்னுடைய செலவாக தங்கமுலாம் பூசிய பதக்கம் ஒன்று மாட்டினான்.

செக்யூரிட்டிக்கு காசை விட அந்தப் பதக்கம் பெரிய சந்தோஷமாகப் போயிற்று.

கதிரேசன் புகழ் மும்பையிலுள்ள பங்களா செக்யூரிட்டிகளுக்கு நடுவே வெகு வேகமாக வளர்ந்தது.

அவனுடைய கம்பெனி அல்லாத செக்யூரிட்டிகளும் அவனுக்கு வணக்கம் சொன்னார்கள். அவனை மரியாதையாக நடத்தினார்கள்.

"இந்த வீட்டை எப்படிப் பாதுகாக்கலாம் என்று எனக்கு சொல்ல முடியுமா" என்று ஆலோசனை கேட்டார்கள்.

இலவசமாக கதிரேசனும் ஆலோசனை வழங்கினான்.

மும்பை முழுவதும் நண்பர்கள் இருந்தார்களே தவிர, எப்பொழுது வேண்டுமானாலும் எதற்கு வேண்டுமானாலும் உதவ ஆட்கள் இருந்தார்களே தவிர, அவன்



நேசிப்பதற்கென்று ஆட்கள் இல்லை. குடித்தனம் இல்லை. குடித்தனம் வைத்துக் கொள்ள பயமாக இருந்தது.

ஒரு பெண்ணோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்வது இந்த வேலைக்கு உகந்தது இல்லை என்று தோன்றியது. தன்னை மிரட்டுவதற்கு தன்னுடைய வீட்டை ஒருவர் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். தன்னுடைய குழந்தையையோ மனைவியையோ அடித்துத் துன்புறுத்தி தன்னை வழிக்குக் கொண்டு வரலாம். எனவே, இந்தத் தொழிலில் இருப்பவர் குடும்பம் இல்லாமல் இருப்பது நல்லது என்று பெங்காலித் தோழனிடம் சொல்ல,

அவன் வாய்விட்டுச் சிரித்தான்.

"அப்படியானால் உலகத்தில் எந்த ஒற்றனும் கல்யாணம் செய்து கொள்ள முடியாது. கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால் ஒரு ஒற்றனால் நிம்மதியாக வாழ முடியாது. அவனுக்குப் பைத்தியம் பிடித்து விடும்." என்று சொன்னான்.

"நம் தொழிலில் இருக்கின்ற வன்முறை, நம் தொழிலில் இருக்க வேண்டிய பரபரப்பு, நம் தொழிலில் இருக்க வேண்டிய வேகம் இதற்கெல்லாம் ஒரு வடிகால் தேவைப்படுகிறது. ஒரு அமைதியான, ஆறுதலான, மிருதுவான இடம் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட இடம் மனைவியாக அமைந்து விட்டால் நீ பிழைத்தாய். இல்லையெனில் பிரச்சினைகள் உனக்கு அதிகமாகும். உன்னால் பரபரப்பிலிருந்து மீளவே முடியாமல் போகும். அந்த பரபரப்பிலிருந்து மீளவே முடியாத தன்மை உன்னை வெகு சீக்கிரம் வயசாளியாக்கி விடும். மன நோயில் தள்ளி விடும். உண்மை இதுதான்" என்று பயமுறுத்தினான்.

கதிரேசன் அதை காதில் போட்டுக் கொள்ளவில்லை.

ஆனால் சில சமயம் அவனுக்கு ஏதோ ஒரு மிருதுவான விஷயம் தேவைப்பட்டது. அது மனைவியாக இருப்பதை விட மகளாக இருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது. மூன்று குழந்தைகளுக்கு தகப்பனாக இருப்பது ஒரு நிறைவு என்ற எண்ணம் வந்தது. தன் முரட்டுத் தனத்திற்கு முற்றிலும் எதிராய், குழந்தைகளோடு உட்கார்ந்திருப்பது. அவர்கள் கேலி செய்யவும் அடிக்கவும் வாங்கிக் கொண்டிருப்பது மிகுந்த சந்துஷ்டியைக் கொடுக்கும் என்று தோன்றியது. மற்றபடிக்கு பெண் சுகம் அவனுக்கு எளிதில் கிடைத்தது.

அவன் கையிலிருக்கும் காசுக்கு ஆசைப்பட்டு பல

பெண்கள் அவனிடம் பிரியமாய் இருப்பதாய் நாடகமாடினார்கள். அவர்கள் பல பேரிடம் பிரியமாய் இருக்கும் பெண்கள்.

லேசான குடிவெறியில் உடம்பு கிளரும் போது அவர்களை நோக்கி அவன் போய் விட்டு வந்து விடுவது வழக்கம். ஆனால் சமீபமாய் அதையும் செய்ய முடியவில்லை.

தொலைவிலே மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. சட்டென்று கதிரேசன் காவலாளனாக வந்தவன் வாசலில் நின்று இரண்டு பக்கமும் பார்த்து விட்டு ஒரு திருடனைப் போல் வீட்டிற்குள் நுழைந்தான்.

உள்ளே பாத்திரங்கள் வீசப்படும் ஓசை கேட்டது.

கதவுக்கருகே அவன் போய் நிற்க அவன் மனைவியை படுக்கைக்கு வரும்படி சொல்லுகின்ற வார்த்தைகள் கேட்டன.

அவள் குழந்தையை காரணம் காட்ட இரண்டு மூன்று அடிகள் விழுவதும் கேட்டது.

கதிரேசன் அந்த அடுக்கு மாடியின் பின்புறம் போனான். மூன்றாவது மாடி மேல் தளத்திற்குப் போய் அங்கிருந்து பைப் பிடித்து முதல் மாடிக்கு இறங்கி போய் வாயில் நின்று பார்க்கும் பொழுது படுக்கை அறை தெரிந்தது.

இடுப்புப் பாவாடையோடு அவள் போராடுவதும் அவன் அதை இழுப்பதும் அருகே குழந்தை சுவரோடு நின்று கத்திக் கொண்டிருப்பதும் தெரிந்தது.

சட்டென்று எல்லா கூச்சல்களும் அடங்கின.

மறுபடியும் எட்டிப்பார்த்தான். குழந்தை கட்டிலைப் பார்த்தபடியே விசித்துக் கொண்டிருந்தது. கட்டிலைப் பார்க்க கதிரேசனுக்கு விருப்பமில்லை. பைப்பை பிடித்து கீழே இறங்கினான்.

'யார் நீ' என்று அடுக்கு மாடியின் செக்யூரிட்டி கேட்க, தன் அடையாள அட்டையைக் காட்டினான்.

செக்யூரிட்டி வணக்கம் சொன்னான்.

அவன், மறுபடியும் எதிரே போய் உட்கார்ந்து கொண்டான். என்ன செய்வது என்று தெரியவில்லை. ஏன் இப்படி கொடுமைப்படுத்துகிறான் என்று புரியவில்லை. இவனை எப்படி எச்சரிப்பது என்று கதிரேசன் யோசிக்கத் துவங்கினான்.

மோட்டார் சைக்கிள் கிளம்பியது. பின்னால் தன்னுடைய மாருதி காரில் கதிரேசனும் கிளம்பினான்.



மோட்டார் சைக்கிள் ஒரு பஞ்சாபி தாபாவுக்குள் நுழைந்தது. அவன் தாபாவுக்குள் நுழைந்து பிராந்தியும் உணவுக்கும் ஆர்டர் செய்து மேஜையில் தட்டிக் கொண்டிருக்க அவன் எதிரே போய் கதிரேசன் உட்கார்ந்து கொண்டான்.

"என்ன வேணும்" நிர்மலாவின் புருஷன் கனகசபாபதி கேட்க.

"நீதான் வேணும்" என்று நிதானமாய் தமிழில் கதிரேசன் பதில் சொன்னான்.

"யார் நீ என்ன..." என்று அவன் எழுந்திருக்க முயற்சி செய்ய,

கதிரேசன் அவன் தோளை அழுத்தினான்.

"உன்னைப் பற்றி விசாரித்தேன். ஏகப்பட்ட வேலை இருக்கு. போலீஸ் கத்தி கத்தி தேடுகிறது. மும்பையில அங்கங்கே போலீஸ்காரனுக்கு மாமூல் போட்டு சுத்திக் கொண்டிருக்கே. பெரிய தாதா மாதுங்காவில் இருக்கே. ஆனால் நீ என்ன பண்ணாலும் அதுபற்றி அக்கறை இல்லை. உன் பொண்டாட்டி குழந்தைகளை தொந்தரவு பண்றதை விட்டுடு."

"ஏன் இதைச் சொல்ல நீ யாரு."

"அது வேற விஷயம். விட்டுட்டா அது நல்லது. தொடர்ந்து அங்க போய் தொந்தரவு பண்ணின்னா, அந்தக் குழந்தையை அழ விட்டின்னா மூஞ்சி போகறதேயில்லாம் பேத்துருவேன். நீ யார் கீழே வேலை செய்தாலும் அக்கறை இல்லை. உன் தலைக்கு மேல எப்பேர்ப்பட்ட தாதா இருந்தாலும் எனக்கு பயமில்லை. எனக்கு கோபம் வந்தா விரல் விரலா உடைப்பேன் ஜாக்கிரதை. இதுதான் கடைசி தடவை" என்று சொல்ல, அவனுக்கு சுடச்சுட சப்பாத்திகளும் சாகுவும் வந்தது.

எழுந்து போன கதிரேசனை, அவன் கையிலிருந்த சாப்பாட்டுத் தட்டை கொண்டு மண்டையில் ஓங்கி அடித்தான்.

கதிரேசன் உடம்பு முழுவதும் சாகுத்தெறித்தது.

கதிரேசன் பளிச்சென்று ஓடி, தொலைவு தூரத்தில் நிற்க வைத்த காருக்குள் பாய்ந்து ஏறி, காரை வேகமாகக் கிளப்பி, திருப்பி, ஒன்வேயில் நகர்ந்து போய் மெயின் ரோட்டில் கலந்து விட்டான்.

அங்கு, நின்று கனகசபாபதி வாய் விட்டு கொக்கரித்தான். மறுபடியும் சப்பாத்தி ஆர்டர் செய்தான்.

தடைப்பவனுக்கு நூறு ரூபாய் கொடுத்தான்.

கதிரேசன் மிக அமைதியாய் தன் நண்பனோடு பேச ஆரம்பித்தான்.

"மாருதி காரை பார்த்திருப்பாங்கன்னு நினைக்கிறேன். வித்துரு. வேற கார் வாங்கு."

"இதுல நீ தலையிட வேண்டாம். ஆனா, எனக்கு பாதுகாப்பா ரெண்டு ஆளுங்க வேணும். எங்கிருந்தாவது யாருடைய செல்போனையாவது திருடிட்டு வந்து அதில் பேசி மறுபடியும் அந்த செல்போனை கொடுத்திரலாம். அதை வேற விதமா காம்பன்சேட் பண்ணிரலாம். எனக்கு வேணும்கிறது ஒரு செல்போன் உடனே ஏற்பாடு பண்ணு. இன்னைக்கு சாயந்திரத்துக்குள்ளே அவனுக்கு பாடம் சொல்லியாகணும். அவன் வீட்டுக்கு அவன் போகாது பண்ணியாகணும்."

அவன் கழுத்து வீங்கியிருந்தது. பீங்கான் தட்டு பட்டு ஒரு கீறல் இருந்தது. அதற்கு பெங்காலித் தோழன் மருந்து போட்டு பிளாஸ்டர் ஒட்டினான்.

"இதில் ஈடுபட வேண்டியது அவசியமா."

"ஆமா. அந்த பெண் குழந்தைக்காக நான் ஈடுபடப் போகிறேன். என்னுடைய பகுதி மக்கள் என்பது மட்டும் அல்ல. இந்த நாய் மிகப் பெரிய அயோக்கியன். வேறு விஷயங்களில் மாட்டிக் கொண்டிருப்பவன். இவனால் பல பேருக்கு தொந்தரவு வரப் போகிறது. இவனை ஏதோ ஒரு இடத்தில் காலை உடைத்துப் போடுவது நல்லது என்று எனக்கு தோன்றுகிறது."

அன்று இரவுக்குள் அவனைப் பற்றி பல தகவல்கள் சேகரிக்கப்பட்டன. பல போலீஸ் ஸ்டேஷனிலிருந்து அவனுக்கு உளவு சொல்லப்பட்டன.

அன்று காலை கனகசபாபதியிடமிருந்து பத்தாயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கிய ஒரு போலீஸ்காரன் அவன் எங்கே படுத்துத் தூங்குவான் என்பதை எளிதாக காட்டிக் கொடுத்தான்.

இன்னொரு ஆயிரம் ரூபாய் தர, இன்னொரு துப்பும் கொடுத்தான். ஓல்டுமங் ரம் பார்த்தால் அவனால் ஆசையை அடக்கிக் கொள்ளவே முடியாது. நிச்சயம் ஒரு பாட்டில் குடித்து விடுவான் என்று சொன்னான்.

கதிரேசன் ஓல்டுமங் ரம்மோடு அந்த போலீஸ்காரர் சொன்ன இடத்திற்குப் போய், அவனைத் தேட, அந்த வீடு பூட்டியிருந்தது. வேறு சாவி போட்டுத் திறந்து உள்ளே போக,



மிகவும் குப்பையாக இருந்தது. படுக்கையில் பெண்கள் வந்து விட்டுப் போன அறிகுறிகள் தெரிந்தன. ஒரு மர பீரோவில் கீழ் பகுதியில் கட்டுக் கட்டாய் பணம் இருந்தது. படுக்கைக்குக் கீழே நகைகள் இருந்தன. பரணையில் மூன்று பிஸ்டல்களும் தோட்டா பெட்டிகளும் கிடந்தன.

ஓல்டுமங் ரம்மை மேஜை மீது வைத்து விட்டு சமையலறையில் உள்ள மேடை மீது ஏறி உட்கார்ந்து கொண்டான். கண்மூடி அமர்ந்து கொண்டான். வாசல் கதவை பூட்டும்படி செல்போனில் கூட வந்த செக்யூரிட்டிக்கு உத்தரவிட்டான்.

வாசற் கதவு பழையபடி பூட்டப்பட்டது. அடுத்த இரண்டே முக்கால் மணியில் அசைக்கப்பட்டது. கதவு திறக்கப்பட்டது. அவன் உள்ளுக்குள் கம்பீரமாய் நுழைந்தான். கூட இரண்டு பெண்கள் வந்தார்கள்.

சமையலறை இடுக்கு வழியே பார்க்கும் போது வெவ்வேறு இடங்களிலிருந்து பிடித்து வந்த பெண்கள் என்று தெரிந்தது. அவர்களுக்குள் சண்டைபோட்டுக் கொண்டிருந்தார்கள்.

நான் தொழில் செய்யும் போது நீ ஏன் வருகிறாய். நீ தொழில் செய்யும் போது நான் வருவேனா. என்றெல்லாம் பேசிக் கொண்டிருக்க இவன் நடுவே இடை இடையே ஏதோ பேசி சண்டையை அதிகமாக்கிக் கொண்டிருந்தான். அவர்கள் சண்டைக்கு வாய் விட்டு சிரித்துக் கொண்டிருந்தான்.

காசு பத்திரமாக இருக்கிறதா என்றும் நகைகள் பத்திரமாக இருக்கிறதா என்றும் பார்த்துக் கொண்டான்.

அந்த பெண்களுக்கு நடுவே சண்டை அதிகமாயிற்று. அவர்களில் ஒருத்தி பட்டென்று இன்னொருத்தியை அடிக்க, மற்றவள் அவளைப் பாய்ந்து பிடித்து ஒதுக்கினாள். தரையில் தள்ளினாள். அவர்கள் சண்டை போட்டார்கள். அவன் போய் விலக்கினான். இரண்டு பேரையும் ஆபாசமாகத் தொட்டான். இரண்டு பேர் கையிலும் ஐந்தாயிரம் ரூபாய் கட்டு வைத்தான்.

அவர்கள் நோட்டுக் கட்டை பார்த்ததும் அமைதியானார்கள். வெவ்வேறு மூலைக்கு போய் உட்கார்ந்து கொண்டார்கள்.

செல்போனில் வாசற்கதவை மறுபடியும் பூட்டுப் போடும்படி செக்யூரிட்டிக்குச் சொல்ல, வாசற்கதவு பூட்டு போடப்பட்டது.

வாசற் பக்கம் ஏதோ சத்தம் கேட்கிறதே என்று

கனகசபாபதி கூர்ந்து கவனித்தான் சத்தம் அடங்கியதும் சமாதானமானான்.

தட்டுகள் எடுக்க சமையலறைக்கு வந்தான். கதிரேசன் உட்கார்ந்திருப்பதை பார்த்ததும் பயத்தில் வெளிறிவாய் திறக்கிட்டான். 'ஏய்' என்று கத்தினான். அந்தப் பெண்களும் பயந்து போய் எழுந்து கொண்டார்கள்.

"நீ போலீஸா, நீ போலீஸா. இந்த ஆள் வழியில ஒரு பொம்பளைய குத்திட்டு வந்திட்டான். இவனை விடாதே அரெஸ்ட் பண்ணு" கூட வந்த அந்தப் பெண் உரத்துக் கத்தினாள்.

"இவன் கொலைகாரன் மூணு தடவை அந்தம்மாவை குத்தினான். என் கண்ணால பார்த்தேன். அந்த அம்மா கைகூப்பி அழுதிச்சு. ஆனாலும் விடலை. தலைமுடியை பிடிச்சு மல்லாத்தி நெஞ்சிலேயே குத்தினான். இவனை விடாதே இவனை அரெஸ்ட் பண்ணு" என்று கத்த, அவன் பாய்ந்து அந்தப் பெண்ணை அடித்தான்.

கதிரேசன் வேகமாக முன்னேறி அவன் தலைமுடியைப் பிடித்து இழுத்து, தரையில் தள்ளினான். அவன் கணுக்காலில் ஏறி நின்று கொண்டான். இடுப்பு பெல்ட்டை சுழற்றி முகத்திலடித்தான். அவன் அலற வாசல் பக்கம் நடமாட்டம் கேட்டது. யாரோ கதவு தட்டுவது கேட்டது. இந்தப் பெண்கள் ஓடிப் போய் கதவு திறக்க முயற்சி செய்ய வெளியே பூட்டியிருப்பது புரிந்து இவர்களும் கத்தத் துவங்கினார்கள்.

கதிரேசன் எது குறித்தும் கவலைப்படவில்லை.

"இனிமேல் வீட்டுப் பக்கம் போனா, உன் பொண்ணை, பொண்டாட்டியைத் தொட்டா கொலை பண்ணிடுவேன் ராஸ்கல்" என்று சொல்லி முகத்தில் வேகமாய் மிதித்தான். உதடு கிழிந்து கீழ் பற்கள் இரண்டு உதிர்ந்தன. அவன் தள்ளாடி எழுந்திருக்க மறுபடியும் எட்டி உதைத்தான். வேகமாய் உடம்பு எகிறி மேஜை மீது பட்டு கருண்டு விழுந்தான். விழுந்தவன் குப்புற கிடக்க முதுகில் மறுபடியும் பெல்ட் அடி மூன்று விழுந்தது.

"அடிச்சா வலிக்குமுனு தெரியாதா இதை விட மோசமா அடிப்பேன். இதுதான் கடைசி விட்டுட்டு ஓடிப்போ. கண் காணாது ஓடிப்போ. மறுபடியும் அந்த தெருவுக்குள்ள நீ நுழைஞ்சே.. நடக்கிறதே.. வேற."

அவன் ஏதோ சொல்ல முயற்சித்து அடக்கிக் கொண்டான்.



மறுபடியும் செல்போனை இயக்க வெளிக்கதவு திறக்கப்பட்டது. அவன் இறங்கி வெளியே போனான்.

கூட வந்த ஒருவனை அந்த இடத்தை கண்காணிக்க சொல்லி விட்டு காரில் ஏறி நகர்ந்தான். சகலரும் அவனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர யாரும் தடுக்கவில்லை.

மும்பை அப்பேற்பட்ட இடம். யாருக்கு எது நடந்தாலும் ஏன் என்று கேட்கமாட்டார்கள். கேட்க நாதியற்ற கூட்டம்தான் மும்பையில் அதிகம் இருந்தது.

நேரே போய் நண்பனிடம் விஷயத்தைச் சொல்லி விட்டு வீட்டுக்குப் போய் குளித்து உடை மாற்றி உணவருந்தி மறுபடியும் அவன் இருக்கும் தெருவுக்குப் போய், பீடா கடைக்கு அருகே உட்கார்ந்து கொள்ள, செல்போன் ஒலித்தது.

அவனைத் தேடி ஜீப்பிலும் கார்களிலும் ஆட்கள் வந்து இறங்கியிருக்கிறார்களாம். இரண்டு பெண்களும் ஓடி விட்டார்களாம். அவன் வீட்டுக்குள் யாரையும் நுழையவிடவில்லையாம். மறுபடியும் கதவு பூட்டிக் கொண்டு வந்தவர்களோடு ஜீப்பிலேறி ஆஸ்பத்திரிக்கு போயிருக்கிறானாம். மும்பையில் மிக நவீனமான ஆஸ்பத்திரியில் அவனை சேர்த்திருக்கிறார்களாம். கணுக்காலில் பெரிய கட்டு போட்டிருக்கிறார்களாம். அவனை அடையாளம் தெரிந்து சொல்லியிருக்கிறார்களாம்.

ஆபீஸிற்கு வருவதற்கு வாய்ப்புகள் உண்டு என்று சொல்ல, அவன் உடனடியாக ஆபீஸிற்குப் போனான். பெங்காலி நண்பனிடம் விஷயத்தைச் சொன்னான்.

கவலைப்படாதே இதற்கெல்லாம் எப்போதுமே நான் தயாராக இருக்கிறேன். வந்தவர்கள் பேச ஆரம்பிப்பார்கள். பேசும்போது விஷயம் சொல்லி விடுகிறேன்.

அவன் சொல்லி முடித்த மூன்றாவது நிமிடம் வாசலில் ஜீப் சத்தம் கேட்டது.

பெங்காலி நண்பன் இறங்கி தெருவில் ஓடினான். வந்தவர்களைப் பார்த்து கை கூப்பினான்.

"என்ன தகராறு செய்கிறீர்கள். ஏன் எங்கள் ஆளைப் போட்டு அடிக்கிறீர்கள்."

"முற்றிலும் சொந்த விஷயம். அவன் மனைவியை அடிப்பதால், அவன் மனைவியின் உத்தரவின்பேரில் அவனை மிரட்டி வைத்தோம்".

"குடும்ப விஷயத்தில் ஏன் தலையிடுகிறீர்கள்"

"குடும்ப விஷயமல்ல. தொழில் தனிப்பட்டோருக்கு பாதுகாப்புக் கொடுப்பது எங்கள் வேலை. கணவன் மனைவிக்கு நடுவே சண்டை ஏற்பட்டால், மனைவிக்கு பாதுகாப்பு கொடுப்பது எங்களுடைய தொழிலில் ஒன்று.

மனைவியை துன்புறுத்தினால் போலீஸுக்கு போவதற்கு முன்பு எங்களிடம் வருவார்கள். போலீஸுக்கு போனால், திரும்ப பேப்பருக்கு போய் விடும். பேப்பருக்கு போகக்கூடாது என்பதற்காக எங்களிடம் வருவார்கள். நாங்கள் பாதுகாப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

உங்க ஆள், மனைவியை துன்புறுத்துகிறான். மகனை அடிக்கிறான். மகள் முன்பு மனைவியைப் புணருகிறான். இது சரியாக இல்லை. என்பதை மட்டும் சொல்லி வையுங்கள். இந்த இடத்திற்கு அவர் வரவில்லை என்றால் வேறு எந்த தொந்தரவும் அவருக்கு இருக்காது. மற்றபடி உங்கள் தொழிலுக்குள் நுழையவோ அதை தடுத்து நிறுத்தவோ நாங்கள் எந்த முயற்சியும் செய்யவில்லை. அந்த விதமான ஈடுபாடும் எங்களுக்கு இல்லை. நீங்கள் யார் என்றும் எங்களுக்குத் தெரியும்" என்று வேகமாக சொல்லி முடிக்க,

அவர்கள் முகவாயைச் சொறிந்து கொண்டார்கள். அங்கிருந்து செல்போனில் யாரிடமோ பேசினார்கள்.

செல்போன் பெங்காலி நண்பருக்கு தரப்பட்டது.

"யாரது கதிரேசன், அவனை என்னை வந்து பார்க்கச் சொல்" என்று ஒரு உத்தரவு செல்போனில் சொல்லப்பட்டு அணைக்கப்பட்டது.

எங்கே வந்து பார்க்க வேண்டும் என்று பெங்காலி நண்பன் கேட்க,

"இங்கே நிற்கச் சொல். நாங்கள் கூட்டிப் போகிறோம்" என்று சொன்னான்.

கதிரேசன் கீழே இறங்கி வந்தான். அவனை ஜீப்பில் ஏற்றிக் கொண்டார்கள். போகும் போது விதவிதமாக விசாரித்தார்கள். எல்லாவற்றுக்கும் பதில் சொன்னான்.

"உங்கள் நாட்டுப் பெண், உங்கள் மொழிப் பெண் என்பதனால்தான் இதில் இறங்கினாயா."

"ஆமாம். அது தவிர அந்த குழந்தையை எனக்குப் பிடித்திருந்தது. அவள் அழுவது எனக்குப் பிடிக்கவில்லை என்பது என் சொந்தக் காரணம்" என்று சொல்ல, அவர்கள் மும்பையின் எல்லையில் ஒரு பெரிய தோட்ட பங்களாவுக்குள் நுழைந்தார்கள். உள்ளிருந்து மேனேஜர் போல தோட்டும் குட்டுமாய் ஒரு ஆள் வந்தான்.



யார் அந்த கூட்டத்தின் மையமோ அவர் தொலைவிலிருந்து அவனைப் பார்த்துக் கொண்டிருப்பதாக அவனுக்கு ஒரு உணர்வு ஏற்பட்டது. அந்த மேனேஜர் அவனிடம் குறுக்கு விசாரணை ஆரம்பித்தார்.

"அந்த அறைக்குள் என்னென்ன பார்த்தாய்" என்று கேட்டார்.

"நிறைய நோட்டுக் கட்டுகள் இருந்தன. ரிவால்வர்கள் இருந்தன. தங்க நகைகள் இருந்தன. இவை மட்டுமே என் கண்ணில் பட்டன. இதற்கு மேல் மும்முரமாகத் தேட நான் முயற்சி செய்யவில்லை."

"ஏன்"

"என் வேலை அவன் சொத்து என்ன என்பதல்ல. அவனை அடித்து முடக்க வேண்டும் என்பது மட்டுமே."

"அவன் சமையலறையில் ஏதேனும் சரக்கு வைத்திருந்தானா."

"இல்லை. சரக்குகள் எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை."

"ஒரு சின்ன உதவி செய்ய வேண்டும்."

"சொல்லுங்கள்."

"எங்களிடமிருந்து பதினாறு கிலோ சரக்கு அனுப்ப வேண்டிய ஒரு விஷயத்தை அவன் மேற்கொண்டான். ஆனால், பதினைந்து கிலோதான் போயிருக்கிறது. ஒரு கிலோ தவற விட்டிருக்கிறான். கேட்டால் இல்லையென்று சத்தியம் செய்கிறான். வேறு யாரோ எடுத்திருக்கக் கூடும் என்று சொல்கிறான். இன்னொருவன் மேல் பழியைப் போடுகிறவனை நாங்கள் நம்பவே இல்லை. அந்த சரக்கு வேறு எங்கேயோ இருக்கும் என்று எங்களுக்குத் தோன்றுகிறது. அது விலை மதிப்பு மிக்கது. அது வேண்டுமென்று எங்களுடைய தலைவர் விரும்புகிறார். நீ உதவி செய்ய முடியுமா."

"இதற்குத்தான் அழைத்தீர்களா."

"ஆம். இதற்குத்தான் அழைத்தோம்."

"உங்கள் தலைவரைப் பார்க்க முடியுமா."

"அது அவசியமில்லை."

"அப்பொழுது நான் உதவி செய்வதும் சந்தேகம்."

"ஏன்."

"என்னிடம் உதவி கேட்பவர் யார் என்று தெரியாமல் ஒருத்தருக்கு உதவி செய்வதில் எனக்கு இஷ்டமில்லை.

உங்கள் பேச்சை நம்ப நான் தயாராக இல்லை. நேரடியாக பேசுவது எனக்கு நல்லது."

"உனக்கு என்ன நல்லது."

"ஒருவேளை நான் ஏதேனும் வம்பில மாட்டிக் கொண்டால் என்னை அய்யர்தான் மீட்க முடியுமே தவிர, உன்னைப் போன்ற ஆட்கள் மீட்க முடியாது என்பது எனக்குத் தெரியும். அவருடைய வாக்கு எனக்கு வேண்டும். இந்த விஷயத்தை நான் கண்டுபிடித்து உங்களுக்கு கொடுக்கும் பொழுது நான் இதைக் கடத்தினேன் என்று என் பெயருக்கு வந்துவிடக்கூடாது."

"ஜாக்கிரதையாகப் பேசுகிறாயே."

"ஆமாம். மிக மிக ஜாக்கிரதையாகப் பேசுகிறேன். நீங்கள் ஒரு கிலோ அரைக்கிலோ என்றுபேசும் போதே அது என்ன என்று தெரிந்து விட்டது; நம்நு தேசத்தை நாசமாக்கிக் கொண்டிருக்கிற விஷயம் என்று எனக்குப் புரிந்து விட்டது."

"இது நம்நு தேசத்து விஷயமல்ல. கொழும்பிலிருந்து வெளிநாட்டிற்குப் போக வேண்டிய விஷயம். நாம் நடுவே தரகராகத்தான் இருக்கிறோம்."

"எப்படி வேண்டுமானாலும் இருங்கள். இது மனித குலத்தை நாசமாக்கக்கூடிய விஷயம். இதை செய்வதற்கு எனக்கு இஷ்டமில்லை. ஆனால், மிகப் பெரிய எதிரியை ஒழிக்க நான் இதைச் செய்ய விரும்புகிறேன். இதற்கு நான் உங்கள் தலைவரைப் பார்க்க வேண்டும்."

அவர் உள்ளே போனார். அடுத்த முப்பதாவது வினாடியில் திரும்பி வந்தார். அவனை அழைத்தார். மாடிப்படி ஏறினார். இரண்டு அறைகள் தாண்டினார். அந்த வீட்டின் பின்பக்கம் பெரிய வெட்ட வெளியில் கயிற்றுக் கட்டில் போட்டு அதன் மீது மெத்தை போட்டு, திண்டுகள் போட்டு இருக்க, அதில் அறுபது வயது மதிக்கத்தக்க கிழவர் ஒருவர் உட்கார்ந்திருந்தார்.

'வெளிநூர் கிங்சைஸ் சிகரெட்டுகள் அவருக்கு எதிரே பாக்கெட் பாக்கெட்டுகளாக இருந்தன. அதிலிருந்து ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டு, அவனையே பார்த்தார், சிரித்தார்.

"அவனுக்குப் பிறகு அந்தப் பொம்பளையை நீ வச்சக்குவியா" என்று கேட்டார்.

ஒருதலைவனாக இருக்கிறவன், எவ்வளவு தெளிவாகவும் திறமையாகவும் இருக்க வேண்டுமென்று கதிரேசனுக்குப் புரிந்தது.

அவன் திகைத்தான். பிறகு சிரித்தான். "ஆமாம்



அய்யா" என்று சொன்னான்.

"அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவளா அந்தப் பெண்."

"இல்லை. அது தெரியவில்லை. ஆனால், இதுவரை தனியாக இருந்த எனக்கு என்னவோ ஒரு மன மாறுதல் ஏற்பட்டு, அந்தத் தாலியும் சேலையும் அள்ளிக் கொள்ள வேண்டுமென்ற ஆசை வந்து விட்டது."

"நான் அழகான பெண்ணாகப் பார்த்து உனக்கு திருமணம் செய்து வைக்கட்டுமா. என்னோடு இருந்து விடுகிறாயா."

மறுபடியும் கதிரேசன் சிரித்தான்.

"உங்களோடு இருக்கும் போது ஏன் ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ஒன்பது கல்யாணம் செய்து கொள்ளலாம். ஆனால் அது வாழ்க்கையாக இருக்காது. வேறு விஷயமாக இருக்கும். உங்களோடு இருக்கிற போது பரபரப்பு அதிகம் கூடும். நான் பரபரப்பு குறைவாக இருக்கவே விரும்புகிறேன். இதுவரை இருந்த பரபரப்பு போதுமென்று நினைக்கிறேன்."

'இவ்வளவு திறமையானவனாக இருந்து கொண்டு, ஏன் ஒதுங்கி வாழ நினைக்கிறாய். சரி இந்த அண்டர் கிரவுண்ட் உலகத்தில் ஒரே ஒரு விதிதான் உண்டு. நீங்கள் குடிப்பவராகவோ பிக்பாக்கெட்டாகவோ, கன்னம் வைத்து காக திருடுபவராகவோ இருக்கலாம். உங்களுக்கு மரியாதை ஒரு போதும் குறையாது. ஆனால் நம்பிக்கைத் துரோகம் செய்பவர்களென்றால், உடனடியாய் இங்கு சிரச்சேதம் தவிர வேறு எந்த தண்டனையும் வழங்கப்படுவதில்லை. நம்பிக்கைத் துரோகம் செய்பவனை எவரும் அருகே அண்டவிடுவதில்லை."

"சரி ஐயா. நான் விடை பெறுகிறேன். சரக்கோடு சந்திக்கிறேன்."

இவனுக்கு இது ஏன் புரியவில்லை. இந்த கனகசபாபதி ஏன் இதை முக்கியமாக எடுத்துக் கொள்ளவில்லை. பதினாறு கிலோவில் ஒரு கிலோ தனக்கு என்று ஒதுக்கிக் கொள்வது. மிகக் கேவலம். உச்சாணிக் கொம்பிலிருக்கும் நம்பிக்கைத் துரோகம்.

காக மதிப்பு 'இங்கே போய், இவனை கடுகளவும் நம்பக்கூடாது. இவன் காட்டிக் கொடுப்பவன் என்றெல்லாம் பெயர் வந்துவிடும். காட்டிக் கொடுப்பவனை எவரும் எந்தக் காலத்திலும் மன்னிப்பதே இல்லை.

இவனிடம் பேசாமல் இதைப் பற்றி விளக்கிச் சொல்லாமல், நான் உன்னை மிகப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறேன் என்பதை விளக்கி இனிமேலாவது உன் மனைவியிடமும் குழந்தைகளிடமும் பிரியமாக இரு. எங்கேயாவது தெற்கே போய்விடு என்று சொல்லாமல், இன்னுமொரு வாய்ப்பு கனகசபாபதிக்கு கொடுத்துப் பார்க்கலாமா கதிரேசன் யோசித்தான்.

ஒரு செக்யூரிட்டிக்கு நல்லவர்களுடைய நகர்தலும் கெட்டவர்களுடைய நகர்தலும் நிச்சயமாகத் தெரிந்தாக வேண்டும். அந்த பெங்காலி நண்பன் கதிரேசனுடைய புத்திக்கூர்மையை ஞாபக சக்தியை மனதில் கொண்டே அவனோடு சேர்த்துக் கொண்டிருக்கிறான்.

செக்யூரிட்டியாக இருப்பவர், அண்டர்வேர்ல்டு மனிதர்கள் யார்? அவர்கள் எங்கே நகர்ந்து கொண்டிருக்கிறார்கள், எங்கே குடியிருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். வெறும் வாயிற்காப்பவன் பணியாக மட்டுமே அல்லாமல் உலகத்தினுடைய நடவடிக்கைகளை மும்பையைப் போன்ற முக்கியமான நகரங்களில் உள்ள செக்யூரிட்டிகள் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

காவலர்களுக்கு உண்டான ஒரு குணமும், புலனாய்வுத் துறைக்கு உண்டான ஒரு புத்தியும் அவர்களிடம் இருந்தாலொழிய கொடி கட்டிப் பறக்க முடியாது. அப்படி திறமையாக இருப்பதால், சம்பளம் பல மடங்கு வாய் விட்டு கேட்கப்படும். கேட்கப்படாமலேயே கொடுக்கப்படும்.

பெங்காலி நண்பனிடம் போய் தன் மனதில் தோன்றியவற்றை கதிரேசன் சொல்ல, பெங்காலி நண்பன் வேகப் பதட்டமடைந்தான்.

"நீ தேவையில்லாமல் ஒரு திருமணமான பெண் மீது ஆசை வைத்திருக்கிறாய் என்று தோன்றுகிறது. இத்தனை நாள் இல்லாமல் இப்போது எதற்காக இந்த இரக்கம். ஏன் அவர்களை முக்கியமாக நினைக்கிறாய். உலகத்தில் பல பெண்கள் புருஷனிடம் அடி வாங்குகிறார்கள். சித்திரவதை படுகிறார்கள். எல்லோரையும் நீ காப்பாற்ற முடியுமா. லட்சோப லட்சம் பேரில் இந்தப் பெண்ணும் ஒருத்தி என்று மௌனமாக இருப்பதுதான் நல்லது.

இதில் நீ தலையிட, அண்டர் வேர்ல்டு சமாச்சாரம் என்று போலீஸோ அல்லது வேறு யாரோ நினைத்து விடலாம். அவனை விட்டு விலகி இருப்பது நல்லது என்று தோன்றுகிறது" என்று பயம் காட்டினான்.



"சேர்ந்து விடுகிறாயா என்று கேட்கிறார்கள்."

"ஆமாம், கேட்பார்கள். உன்னைப் பற்றி மேலே பலபேர் வந்து விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். பல விதமாகப் பேசி, உன்னைத் தொழிலுக்கு இழுக்கிறார்கள். உன்னை போலீஸ் தரப்பிலும் பேசுகிறார்கள். முக்கியமான ஆளாக மாறிக் கொண்டிருக்கிறாய். இதுவே எனக்கு கவலையாக இருக்கிறது."

"நண்பனே, நான் உன்னிடம் புத்திமதிகள் கேட்கவில்லை. சில சமயம் எனக்கு பாதுகாப்பு தேவைப்படும் என்பதற்காக கேட்கிறேன்."

"செய்ய வேண்டியது என் கடமை. பல நேரங்களில் பல விஷயங்களில் என்னை நீ பாதுகாத்திருக்கிறாய். உனக்கு ஒரு பிரச்சினை என்று வரும்போது, கேள்வி கேட்காமல் உதவுவதுதான் என்னுடைய வேலை. ஆனாலும் புத்தி சொல்ல வேண்டிய கடமையும் இருக்கிறது.

அந்தப் பெண்ணையும், அந்தக் குழந்தையையும் நீ எதனால் முக்கியமாக நினைக்கிறாய் என்று தெரியவில்லை. எப்படியும் ஒரு வார்த்தை சொல். நான் அவர்களை முக்கியமாக நினைக்கிறேன். எனக்கு வேண்டுமென்று கருதுகிறேன் என்று ஒரு வார்த்தை சொல் பிறகு உன்னை கேள்வியே கேட்க மாட்டேன். தயவு செய்து இதை தெரிவித்து விடு" பெங்காலி நண்பன் கேட்டு விட்டு அமைதியானான்.

கதிரேசனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. தன்னைத்தானே அந்தக் கேள்வியை கேட்டுக் கொண்ட போது, அவனுக்கு பதில் வரவில்லை. எதனால் நிர்மலா முக்கியம், எதனால் அந்தக் குழந்தை முக்கியம். ஏன் இவர்களிடம் இவ்வளவு ஈடுபாடு கொள்கிறேன். நான் யார். அவர்கள் யார், யாரோ ஒரு கணவன் மனைவி. யாரோ ஒரு குடித்தனம். எதற்காக நான் அங்கு மாட்டிக் கொண்டு அவஸ்தைப் படுகிறேன். இத்தனைக்கும் என் மீது மிகுந்த காதல் உள்ளதாக நிர்மலா என்னிடம் தெரிவிக்கவில்லை. நீங்கள் இல்லாமல் இறந்து போய் விடுவேன் என்று அந்தக் குழந்தை கதறவில்லை. ஆனாலும் ஏதோ ஓர் ஈர்ப்பு இருக்கிறது. எதனால் என்று புரியவில்லை.

"அவர்கள்' எனக்கு வேண்டுமென்றுதான் தோன்றுகிறது. என்னால் அவர்களைப் பற்றி சிந்திக்காமல் ஒரு நாளும் ஒரு பொழுதும் இருக்க முடியவில்லை. ஆயினும் அவர்களை நான் என் பக்கம் இழுப்பதற்கு முயற்சி செய்யப் போவதில்லை. அவனைத் திருத்தி அவர்களை

சந்தோஷமாக்கவே நான் விரும்புகிறேன்."

"சந்தோஷமாக்கி விட்டு என்ன செய்வாய்."

"எங்கேனும் தனிமையில் அமர்ந்து கொண்டு அழுவேன் என்று நினைக்கிறேன்."

"கதிரேசா, உனக்கு பைத்தியம் பிடித்து விட்டதா" பெங்காலி நண்பன் கோபமாகக் கேட்டான். கிட்டத்தட்ட ஒரு சிபிஐ ஆளுக்கு இணையாக நிற்கின்ற செக்யூரிட்டி ஆள் நீ. நீ இப்படி ஒரு இடத்தில் கேவலமாகவும், கோணலாகவும் நொய்மையாகவும் இருப்பது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. நீ இதை மறுபரிசீலனை செய்யக்கூடாதா."

"எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. இத்தனை நாள் எவர் மீதும் வராத ஈர்ப்பு, என்னைக் காதலிக்கிறேன் என்று சொன்ன பெண்கள் மீதெல்லாம் வராத ஈர்ப்பு இவள் மீது ஏன் வந்திருக்கிறது என்று தெரியவில்லை. இது விட்டகுறை தொட்டகுறை என்று நினைக்கிறேன்."

"சரி முடிந்து விட்டது. இனி நான் உன் பக்கம். மேற்கொண்டு எந்தக் கேள்வியும் கேட்கப் போவதில்லை. அவர்களை உன் சொத்தாக நானும் பாவித்து, உனக்கு உண்டானதைச் செய்கிறேன். நீ சொன்னது போல அவனுக்கு ஒரு கடைசி முறை வாய்ப்பு கொடுத்துப் பார். ஆனால் ஒன்று சொல்கிறேன். அது திருந்துகிற நாய் இல்லை. திருத்த முயற்சிப்பவர்களை கடித்து குதறுகிற நாய். அவனிடம் நீ அடிபடாது வந்தால் அதுவே பெரிய விஷயம்."

"அவன் என்னிடம் வலிவு காண்பித்தால் ஒரே வீச்சில் அடித்துக் கொன்று போடுவேன்." கதிரேசன் இந்தியில் கத்தத் துவங்கினான்.

"அதுவும் ஆபத்து. தேவையில்லாதது. ஒரு கொலைக் குற்றத்தில் நீ மாட்டிக் கொள்வதிலும் எனக்கு விருப்பமில்லை."

"இல்லை நான் மாட்டிக் கொள்ள மாட்டேன். ஏனெனில் எனக்கு உயிர் வாழவும், ஒரு குடும்பத்தோடு இணையவும் மிகப் பெரிய ஆசை இருக்கிறது. என் ஆசைகளை நான் நிறைவேற்ற தயங்குவதே இல்லை. ஆசைகள் நியாயமாக இருக்கும் பட்சத்தில் அதன் மீது எனக்கு பிடிப்பு இன்னும் அதிகமாகி விடுகிறது."

கதிரேசன் தன் பெங்காலி நண்பனிடம் சொல்ல அவன் எழுந்து தழுவிக் கொண்டான்.

"நான் இருக்கிறேன் கவலைப்படாதே. ஆனால் இது தாதா விஷயம், போதை பவுடர் விஷயம். எனவே, மிக மிக



ஜாக்கிரதையாக செயல்படு. அந்த ஒரு கிலோ பவுடரை தாதாவுக்கு எப்படிக் கொடுக்கப் போகிறாய்."

"ஆமாம். அதுதான் முதல் வேலை. அவன் எங்கு ஒளிந்திருக்கிறான் என்பதை கண்டு பிடிப்பதுதான் என்னுடைய முக்கியமான வேலை." கதிரேசன் சொல்லிவிட்டு வெளியேறினான்.

அவனை அறியாமல் அவனைக் கண்காணிக்க இரண்டு ஆட்கள் அவன் பெங்காலி நண்பனால் போடப்பட்டனர். அவன் இரண்டு ஆட்களோடு சுற்றுகிறான் என்று தாதாவுக்கு தெரியவர, தாதாவும் நாலு ஆட்களை கதிரேசன் பின்பு அனுப்பினான்.

ஒரு பெரிய பட்டாளம் தன்னைத் தேடி அலைகிறது என்று கனகசபாபதிக்குத் தெரியவில்லை. ஆனாலும், எது வேண்டுமானாலும் எப்பொழுது வேண்டுமானாலும் நடக்கும் என்ற பதட்டத்தோடு அவன் மும்பையில் அலைந்து கொண்டிருந்தான். அடிக்கடி இடம் மாறிக் கொண்டிருந்தான்.

இன்னும் மூன்று நாட்களில் அந்த தாதாவின் எதிரி சரக்கு வாங்கிக் கொள்ள வருவதாகச் சொல்லியிருந்தான். அவன் நினைத்ததை விட மிகப் பெரிய தொகை தருவேன் என்று சொல்லியிருந்தான். அது மட்டுமில்லாமல் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு அவனுக்கு வசதிகள் செய்து கொடுப்பதாகவும் வாக்குறுதி தந்திருந்தான். இன்னும் மூன்று இரவு மூன்று பகல்கள் கடந்து விட்டால் ஏதேனும் ஒரு விடிவுகாலம் பிறக்கும். இந்த ஒளிந்துறையும் வாழ்விற்கு ஒரு முடிவு வரும் என்று கனகசபாபதி நம்பினான்.

மும்பையில் உள்ள விபச்சாரிகளின் வீடுகளில் காசு கொடுத்து தங்கினான். அவர்கள் மிக கவனமானவர்கள். எதன் பொருட்டும் எவர் பொருட்டும் போலீஸில் மாட்டிக் கொள்ள விருப்பம் இல்லாதவர்கள். எனவே, வந்து தங்குகிறவர்களை உடனடியாக அப்புறப்படுத்துவதில் கைதேர்ந்தவர்கள். அதற்காக பல வழிமுறைகளை அவர்கள் வைத்திருந்தார்கள்.

அவன் எங்கு தங்குகிறான் என்பதை கண்டுபிடிக்க கதிரேசனுக்கு அதிக நேரம் ஆகவில்லை. அவன் போய் தங்குகிற இடங்களை தெரிந்து கொண்டு, அடுத்தபடி என்ன செய்வது என்று யோசிக்கத் துவங்கினான்.

செக்யூரிட்டிகள் யோசிக்காமல் வெறுமே காவல்காரர்களாய் இருப்பதில் லாபமில்லை. சென்னை போன்ற நகரங்களில் தடி வைத்துக் கொண்டு வாசலில் உள்ள மடக்குச் சேரில் உட்கார்ந்து கொண்டிருப்பவர்களுக்கு போதுமானதாய் இருக்கலாம். ஆனால், மும்பையில்,

அவர்கள் கிட்டத்தட்ட ஒரு போலீஸ் அதிகாரியைப் போல நடந்து கொள்ள வேண்டும். அவன் எங்கே வைத்திருப்பான் என்று திரும்பத் திரும்ப யோசித்துப் பார்த்த போது சட்டென்று அவனுக்குள் ஒரு பொறி தட்டியது.

விபச்சாரி வீட்டில் பயமின்றி தங்குகிறவன் வேறொரு இடத்தில்தான் சரக்கு வைத்திருப்பான். அந்த இடம் அவனுடைய வீடாகத்தான் இருக்கும். அவன் வீட்டை சந்தேகப்பட மாட்டார்கள் என்று தீர்மானம் செய்து அவளோடு பெரிய சண்டை போட்டு அவளுக்கும் இவனுக்கும் சம்பந்தம் இல்லை என்று சொல்லி அதே சமயம் அந்த சரக்கை அவளறியாமல் எங்கேனும் ஒளித்து வைத்திருக்கலாம்.

இப்போது அந்த இடத்திற்குப் போய் என்னவென்று பார்ப்பது, என்னவென்று தேடுவது அவளுக்கு எப்படிச் சொல்வது. பெங்காலி நண்பனிடம் தன் சந்தேகத்தைச் சொன்னான். அங்கு போகப் போவதாக அறிவித்தான்.

குழந்தைக்கு பொம்மைகளும் தின்பண்டங்களும் பிஸ்கெட்டுகளும் வாங்கிக் கொண்டான். அவளுக்கு சூடெக்ஸ்கள் பிடிக்குமென்று நினைத்து, மூன்று விதமான சூடெக்ஸ்கள் வாங்கிக் கொண்டான்.

கதவு தட்டினான். குழந்தை கதவு திறக்காமல் இடுக்கு வழியே பார்த்து விட்டு, அவன் பெயரைச் சொல்லிக் கொண்டு போயிற்று.

அவள் வேகமாக வந்து கதவு திறந்தாள், வரவேற்றாள்.

"அப்பாகிட்டயிருந்து லெட்டர் வந்தது. கேஸ் அவங்க பக்கம் ஜெயிக்கும்படியா இருக்காம். இவர் மீதும் இவர் அப்பா மீதும் நிறைய புகார்கள். நிறைய பக்கத்திலிருந்து வர. இவரை வீணா மாட்ட வச்சுட்டோம்கிற மாதிரி கோர்ட்ல வாதாடினாங்களாம். ஜட்ஜ் ரொம்ப பரிவோடு கேட்டுக் கொண்டாராம்.

இத்தனை நாள் தண்டனை அனுபவிச்சதே போதும் என்று நினைக்கிறேன் நான் தீர்ப்பு அப்புறம் சொல்றேன்னாராம். இன்னிக்கு இல்ல நாளைக்கு தீர்ப்பாயிடும்னு சொல்றாங்களாம்.

நல்லபடியா தீர்ப்பாகி அப்பாவுக்கு விடுதலை கிடைச்சிட்டா, நான் குழந்தையோட மெட்ராஸ் போயிடுவேன்."

அவனுக்குள்ளே டக்கென்று ஒரு குமிழி எழுந்து அடங்கியது. வந்த விஷயத்தை மறந்து விட்டு திரும்பி



விடலாமா என்று ஒரு கணம் தோன்றியது.

"மெட்ராஸ் போய் என்ன பண்ணுவீங்க".

"எங்கேயாவது ஒரு டீச்சர் உத்தியோகம் இல்ல ஆபீஸ் உத்தியோகம் பார்த்து என் வாழ்க்கையை நான் கவனிச்சுக்குவேன். எப்படிப்பட்டாவது இவளை பெரியவளா கொண்டு வருவேன் என்ன நீங்க இந்தப் பக்கம்" என்று புன்னகை செய்தாள்.

அவன் யோசித்தான். தலை நிமிர்ந்தான்.

"ஒரு மோசமான பொருள் அவன் இங்கே மறைத்து வைத்திருக்கணும். அது பல லட்சம் ரூபாய் மதிப்புடையது. அது இங்கு இருக்கிற ஒரு தாதாவுடையது. தெரியாத்தனமா சரக்கு ஆசைப்பட்டு அதுல கையை வச்சுட்டான் அவன் தாதாவினுடைய எதிர் பார்ட்டிகிட்ட போய் சேர்த்துட்டான் இது எல்லாமே சரியா வராத ஒரு விஷயம்.

அந்த பொட்டலம் எங்கே இருக்குமென்று முதல்ல தேடணும். இருந்தா உடனே அப்புறப்படுத்திடணும்."

"அது இங்கதான் இருக்குன்னு நினைக்கிறேன். ஆனா அது என்னன்னு பார்க்கல."

"எங்கு இருக்கு"

"ஒரு டேப் ரெக்கார்டரில் வச்சு ப்ளாஸ்டிக் போட்டு மூடியிருக்குன்னு நினைக்கிறேன்."

"இந்த டேப்ரெக்கார்டர் வேலை செய்யாது வச்சுக்கோ அப்படின்னான். டேப் ரிக்கார்டரை விட இது கனமா இருந்தது உள்ள ஏதோ வச்சுருக்காங்க தங்கமா இருக்கும்னு நினைச்சேன்."

"எடுங்க பார்க்கலாம்" அவன் கேட்க அவள் எடுத்துக் கொடுத்தாள்.

எந்தப் பக்கமும் எந்த ஸ்க்ரூவும் கழட்ட முடியாதபடி அதில் கூழ் போல ஒரு திரவம் ஊற்றப்பட்டு அடைக்கப்பட்டிருந்தது.

சப்தம் அதிகரிக்கின்ற இடத்தைக் கழற்றி, மெல்லிய கம்பியை உள்ளே விட்டு அழுத்திப் பார்க்க, கம்பி பல இடங்களில் தடைப்பட்டு, எங்கோ போய் குத்தி இறங்கியது. வாசனை மூக்கைத் தாக்கியது. சுவைத்துப் பார்க்க கண்ணுக்குள் வெறியேறியது. "நல்ல வேளை கண்டுபிடிச்சுட்டேன். இது உங்ககிட்ட இருக்கிறது தெரிஞ்சதுனா, எந்தக் கேள்வியும் இல்லாம கொண்டு போய் உள்ள வச்சுடுவாங்க. என்ன கதறினாலும் விடமாட்டாங்க. குழந்தையையும் சேர்த்து உங்களை மட்டுமில்லை,

வைச்சுடுவாங்க. இதுதான் பெரிய கொடுமை. வேற எதுக்கும் மன்னிப்புக் கிடைக்கும். இந்த ஒரு சரக்கு கையில இருந்தா யாரும் மரியாதையே பண்ண மாட்டாங்க. நல்லவேளை, நல்லவேளை" அவள் திரும்பத் திரும்ப புலம்பிக் கொண்டிருந்தாள்.

மறுபடியும் அமைதியாக உட்கார்ந்து யோசித்தான். டேப்ரெக்கார்டரை கையில் எடுத்துக் கொண்டான். சட்டென்று வெளியே போய் காரில் ஏறி அமர்ந்து, ஸ்டார்ட் செய்தான். வெளியே வந்துநின்றவளிடம், "நான் எடுத்துக் கொண்டு போய் விட்டேன் என்று சொல். வந்து சோதனை போட்டேன் என்று சொல். நீ கொடுத்ததாகச் சொல்லவேண்டாம். இங்கு யாரும் வரமாட்டார்கள். நான் உரியவரிடம் சேர்த்து விட்டு மறுபடியும் வருகிறேன்" என்று சொன்னான். வேகமாக காரை கிளப்பினான். அவனை நாலு பேர் வழி மறித்தார்கள். தாதாவிடம் போக வேண்டும் என்று சொன்னார்கள். அங்குதான் போய்க் கொண்டிருக்கிறேன் என்று சொன்னான்.

"எங்கள் வண்டியில் வா" என்று வற்புறுத்தினார்கள். அவன் வண்டியில் ஏறிக் கொண்டு, கதவை சாத்திக் கொண்டு தாதாவிடம் பேசினான். தாதாவை வரச் சொன்னான். தாதாவும் அவனும் ஒரு முக்கியமான இடத்தில் வைத்து சந்திக்க, டேப்ரிக்கார்டரைக் கொடுத்தான். அந்த இடத்திலேயே டேப்ரிக்கார்டர் கல்லால் உடைக்கப்பட்டு, பார்சல் பிரிக்கப்பட்டது.

சரக்கு என்று தெரிந்ததும் அள்ளிக் கொண்டு, விநாடி நேரத்தில் அவர்கள் தலைமறைவானார்கள். தாதா எங்கிருந்தோ போன் செய்தான். "மிக்க நன்றி. உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டான்.

"அந்தப் பெண்ணுக்கும் அவள் குழந்தைக்கும் பாதுகாப்பு வேண்டும்" என்று சொன்னான்.

எதிர் முனையில் அமைதியானார்கள். "இங்கு பாதுகாப்பு கொடுப்பது கடினம். மிகப் பெரிய வேலை. அவர்களை வேறெங்கேனும் போகச் சொல். உண்டானதாக கொடுக்கிறேன்" என்று சொல்லி தொலைபேசியை அணைத்தான்.

அதற்கு மேல் அவனிடம் எதுவும் எதிர்பார்க்க முடியாது என்று கதிரேசனுக்குத் தெரிந்து போயிற்று. எனவே, பாதுகாப்பு கொடுப்பது என்பது அவன் தலையில் வந்து விழுந்தது.

மறுபடியும் அந்த வீட்டிற்குப் போய் நிற்க,



அவர்களிடம் இந்த இடத்தை விட்டு காலி செய்து வேறு இடம் போய் விடலாமா என்று கேட்டான்.

அவர்கள் விழித்தார்கள். குழந்தையை அணைத்துக் கொண்டு, சென்னை பக்கம் போகலாமா என்று கேட்க,

"எனக்கு தமிழ் தெரியாதே... அங்கெல்லாம் தமிழ்தானே பேசுவார்கள். எனக்கு தமிழ் சுமாராகத்தான் வரும்" என்று குழந்தை ஹிந்தியில் கொஞ்சியது.

"சென்னைக்கு எங்களை அனுப்பி விட்டு, நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்." அவள் கூர்மையாக அவனைப் பார்த்துக் கேட்டாள்.

"உங்களோடு தங்கி விடலாம் என்று நினைக்கிறேன்" என்று வேகமாய் கதிரேசன் பதில் சொன்னான்.

அவள் தலை குனிந்து கொண்டாள்.

"இரண்டாம் முறையாக நான் ஏமாற வேண்டுமா" என்று நிமிர்ந்து கேட்டாள்.

"வேண்டாம். ஏமாற்றுவதற்காக நான் எதுவும் செய்யவில்லை."

"அவருடைய தொழிலை விட உங்கள் தொழில் மிகவும் மோசமானதாகத் தெரிகிறது. நீங்களும் நாலா விதமான ரகசியத் தொடர்புகள் உடையவர்கள் என்று தோன்றுகிறது."

"இல்லை. நான் ரகசியத் தொடர்புகள் உள்ளவன் அல்ல. தவறான வேலை செய்பவனும் இல்லை. இருந்தாலும் இந்த வேலையை எல்லாம் விட்டு விட்டு தெற்கே வந்துவிடத் தயாராக இருக்கிறேன்."

"எதற்கு, என் கூட வாழ்வதற்கா."

அவன் சட்டென்று பதில் சொல்லத் தயங்கினான்.

"ஆமாம்" என்றான்.

"நான் எச்சில் பண்டம். மிக வேகமாக வந்து மிக மோசமாக காயம் பட்டவள். இரவெல்லாம் தனித்து உட்கார்ந்து புலம்பிக் கொண்டிருப்பவள். என்னை ஏன் தேர்ந்தெடுக்கிறீர்கள்."

"நான் உங்களை விட மோசமாக வாழ்ந்தவன். உங்களை விட மோசமாகக் கிடந்தவன். என் சிறுவயது வேதனைகளைச் சொன்னால் நான் எத்தனையோ மேல் என்று சொல்வீர்கள். ஒருவேளை நீங்களும் நானும் ஒன்றாக இருப்பதுதான் நல்லதோ என்று தோன்றுகிறது."

அவள் சிரித்தாள்.

"எனக்கு இதெல்லாம் தெரியவில்லை. சற்று குண்டா[க] இருக்கிறேன். படுக்கையில் வளமாக இருப்பாள் என[்று] நீங்கள் நினைத்திருக்கலாம். அல்லது சிறிது நாள் ஏதேது[ம்] பேசி உபயோகப்படுத்தி விட்டு, நகரத் தீர்மானிக்கலாம். எ[து] செய்தாலும் உண்மையாக இருந்தால் எனக்கு சந்தோஷமா[க] இருக்கும்" அவள் அமைதியான முகத்தோடு அவனிட[ம்] பேசினாள்.

"நீங்கள் இத்தனை கடுமையாகப் பேசுவதால், நானு[ம்] உங்களிடம் சிலதை சொல்ல வேண்டியிருக்கிறது.

என்னை மும்பையின் தாதா என்றே வைத்து[க்] கொள்ளுங்கள். சந்தோஷப்படுத்துகின்ற பெண்கள[ை] எனக்கும் தெரியும். ஆனால், நான் கேட்பது அதுவல்[ல]. இந்தக் குழந்தையோடு உங்களோடு இருக்க வேண்டுமென்[று] ஒரு இனம் புரியாத ஆசை எனக்கு வந்திருக்கிறது.

இதற்குக் காரணம் நான் பலமுறை என்னைக் கேட்டு[ம்] புரியவில்லை. என் அம்மாவின் ஞாபகம் உங்களைப் பார்[க்கும்] போது வருகிறது. என் அம்மாவோடு என் அப்[பா] சந்தோஷமாக இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேன். அது நடக்கவில்லை. அதுபற்றி நான் விவரிக்கவு[ம்] விரும்பவில்லை. ஆனால், நீங்கள் அவ்விதமே புருஷனோடு சிரமப்படுகிறீர்கள் என்கிறபோது உங்களை சந்தோஷப்படுத்த வேண்டுமென்று எனக்கு தோன்றியது. அது, என் அம்மாவை சந்தோஷப் படுத்துவது போல என்று எனக்கு தோன்றுகிறது.

இதுதான் மிக மிக ஆழமான என் நெஞ்சினடியில் புதைந்து கிடக்கின்ற விஷயம். உங்களை பார்க்கிற போது, சிறிது கூட காமமே இல்லாமல் பார்க்கிறேன் என்று பொய் சொல்ல விரும்பவில்லை. ஆனால், காமம் மட்டுமே என் எண்ணம் அல்ல.

உங்கள் அமைதியான முகமும் பெரிய கண்களும் சிரிப்பும், பேச்சும், பாட்டும் கூப்பிட்டவுடன் ஓடி வருவதும் என்னை நெகிழ வைத்து விட்டன.

உங்களிடம் ஒரு பிரேமை இருக்கிறது. மனம் கனிந்து புருஷனோடு கொண்டாடி வாழ வேண்டுமென்ற மிகப் பெரிய ஆசை இருக்கிறது. அது இப்பொழுது காணாமல் போனதால், முகத்தில் கருப்பு படிந்திருக்கிறது.

நான் அதைத்தான் உங்களிடமிருந்து அபகரிக்க நினைக்கிறேன். உங்களுடைய பிரேமை எனக்கு



வேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

உங்களுக்கு விருப்பம் உண்டாயின் நாம் தெற்கே போகலாம். அல்லது நீங்கள் மட்டுமே தெற்கே போவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன்."

அம்மாவும் கதிரேசனும் பேசிக் கொண்டிருப்பதை கதிரேசனிடம் அமர்ந்தபடி அந்தக் குழந்தை உற்று உற்று பார்த்தது.

"கதிரேசன் வர்றேன்றாரும்மா நாம அவரை கூட்டிட்டு போனா என்ன. எனக்கு மும்பை பிடிக்கலேம்மா. மெட்ராஸ் போயிடலாமே. அங்க போய் நாம மூணு பேரும் ஒரே வீட்ல இருக்கலாமே. எனக்கு கதிரேசனை பிடிச்சிருக்கும்மா. உனக்கு பிடிக்கலையா" குழந்தை ஆவலோடு கேட்டாள்.

நிர்மலா பதில் சொல்லவில்லை.

"குழந்தை கேட்கிறதே பதில் சொல்லலாமில்லையா" கதிரேசன் தனக்கு வேண்டிய பதிலை நிர்மலாவிடமிருந்து எதிர்பார்த்தான்.

"எனக்கு பிடிச்சிருக்கா பிடிக்கலையாங்கிறது இல்லே முக்கியம். நடக்குமா நடக்காதா. மறுபடியும் சரியா வருமா வராதா. திருப்பியும் எதிர் இன்னொரு குப்பைத் தொட்டியில் விழ நான் தயாராக இல்லை. அதுக்கு வெறுமனே கிடக்கலாம்னுதான் தோணுது. அத்தனை பயம், அத்தனை கவலையும் உடம்புல இருக்கு. இத்தனை பயமும் கவலையும் வச்சுக்கிட்டு, நான் யாரை சந்தோஷப்படுத்தமுடியும்னு தெரியலை."

"என்ன பயம்"

"தெற்கே போனாலும் மறுபடியும் இவன் வந்து நம வீட்டு வாசல்ல நின்னு என்னைன்னு கேட்பான் கோவை நடுங்கும். மனசு செத்துப் போகும். எல்லாம் பிடுங்கிக்கிட்டு போகப் போகுது அப்படின்னு ஒரு அலறல் வரும். அந்த ஒரு வினாடிக்காக, அந்த ஒரு வினாடி நேர நெருப்பு பிடிப்புக்காக நான் எதுவும் செய்ய விரும்பவில்லை. மறுபடியும் அவமானம் என்றால், என் மனம் தாங்காது. மும்பையில் பட்ட அவமானம் போதும். மெட்ராஸ்லே, கோயம்புத்தூர்லே, பெங்களூர்லேன்னு ஒவ்வொரு இடமா மாத்தி, ஒவ்வொரு இடமா அவமானப்பட்டு, அலைய வேண்டாம். எனக்கு புருஷனே தேவையில்லை அவ்வளவுதான் தோணுது."

"அந்த ஆள் வரமாட்டான். நீங்க கவலைப் படாதீங்க."

அவனையெல்லாம் யாரும் சாகடிக்க முடியாது. ரக்தபீஜியன் மாதிரி மறுபடி மறுபடி வந்துகிட்டேதான் இருப்பான். மத்தவங்களுக்கு தொந்தரவு கொடுக்கிறதுக்காகவே பொறந்திருக்கிற ஜென்மம் அது."

"சரி நான் வர்றேன்" திடமாய் கதிரேசன் எழுந்தான். இப்பொழுது வேலை இவர்களை பாதுகாப்பது மட்டும் அல்ல. அவன் இவர்களைத் தேடி வராமல் செய்வதும்.

என்ன செய்வது என்று எதிர்ப்பக்கம் போய் நின்று யோசித்தான்.

தெரு முனையில் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது. திடுக்கிட்டான். அவன் வந்து இறங்குவதைப் பார்த்தான். அவசரமாய் பெங்காலி நண்பனுக்கு போன் செய்தான். என்ன நடக்கிறது என்று தெரிவித்தான். நேரே அவனிடம் போனான்.

உன்னை தாதா கூப்பிடுகிறார் என்றான்.

அவனுக்கு கதிரேசனை பார்த்தவுடன் கலவரமாகி விட்டது.

"என்ன மறுபடி வந்து தொந்தரவு பண்றே. உன்னால சும்மா இருக்க முடியாதா" என்று கேட்டான்.

"எங்களா நகர்ந்து போலீஸ்னா, கை வேறு கால் வேறா போயிடும். பேசாம மோட்டார் சைக்கிள் எடுத்துக் கொண்டு முன்னால போ. எங்க போகணும்னு நான் வழி சொல்றேன்.

நீ எங்கேயும் தப்பிச்சு போக முடியாது. வீணா எங்கேயும் போய் அடிபடாதே. வந்திரு. உன்னை சுற்றி ஏழு எட்டு பேர் இருக்கோம். எங்க நகர்ந்தாலும் அடிச்சு பலி போட்டுருவோம்" என்று பொய் சொன்னான்.

கனகசபாபதிக்கு உடம்பு நடுங்கியது. நாலா பக்கமும் பார்த்தான். மோட்டார் சைக்கிளை உதைத்து ஏறினான்.

வாசலுக்கு வந்து நிர்மலாவும் அவள் பெண்ணும் பார்த்தார்கள். நிர்மலாவின் மகள் கை தூக்கி தன் தந்தைக்கு தன்னையும் அறியாமல் டாட்டா காட்டினாள்.

பதிலுக்கு டாட்டா காட்ட கனகசபாபதிக்கு தோன்றவில்லை. எந்த உணர்ச்சியுமில்லாமல் வண்டியை கிளப்பிக் கொண்டு முன்னே போனான்.

பின்னே மாருதிக் காரில் கதிரேசன் தொடர்ந்தான்.

சிறிது தூரம் போன பிறகு, முன்னே போனவனுக்கு சந்தேகம் வந்திருக்க வேண்டும். திரும்பித் திரும்பி மாருதிக் காரை பார்த்தான். மெல்ல வண்டியின் வேகத்தைக் குறைத்தான்.



"எங்க போகணும் இப்போ."

"போடா" அவனை கதிரேசன் ஒற்றை வார்த்தையில் கட்டளையிட்டான். அவர்கள் எங்கே போய்க் கொண்டிருக்கிறார்கள் என்று தாதாவுக்கு போன் செய்தான். பெங்காலி நண்பனுக்கு போன் செய்தான்.

தன்னை யாரும் பின் தொடரவில்லை என்று கனகசபாபதிக்கு தெரிந்து விட்டது. அவன் வண்டியின் வேகத்தை அதிகரித்தான்.

மும்பையை விட்டு தாண்டி, பெரிய ட்ரங்க் ரோட்டில் மோட்டார் பைக்கை செலுத்தினான்.

கதிரேசனும் பின் தொடர்ந்தான். கதிரேசனைத் தாண்டி இரண்டு அம்பாஸடர் கார்கள் வேகமாக போயின.

வண்டியின் கண்ணாடி கீழிறங்கி, மறுபடியும் மேலேறியது. உள்ளே உட்கார்ந்திருந்தவர் முகம் தெரிந்தது.

"நீ இதில் கலந்து கொள்ளாதே. விலகி நில். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்."

அவனுக்கு போன் வந்தது. அம்பாஸடர் கார்கள் மோட்டார் சைக்கிளை வேகத்தில் மடக்கின. அவன் கொத்தாய் பிடிக்கப்பட்டான். அருகே உள்ள பஞ்சாபி தாபாவிற்கு கொண்டு போகப்பட்டான்.

பெஞ்சில் உட்கார வைத்து, கயிற்றால் அவன் கால்களையும் கைகளையும் கட்டினார்கள். சரமாரியாய் அடித்தார்கள்.

அங்கு உட்கார்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் பயந்து எழுந்த, எல்லோரையும் அமைதியாய் உட்கார்ந்து சாப்பிடும்படி கட்டளையிட்டார்கள்.

மறுபடியும் அடித்தார்கள்.

வண்டியை தொலைவில் நிறுத்தி விட்டு, அவர்கள் செய்வதை அவன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால், அந்த தாதாவின் ஆட்களைத் தாண்டி வேறு யாரும் எதற்கும் ஊடுருவக் கூடும். ஒருவேளை போலீஸ் இதில் வந்து கலக்கக்கூடும் என்ற பயம் கதிரேசனுக்கு இருந்தது.

பாதைகளின் இரு பக்கமும் வண்டிகளின் நடமாட்டத்தை கவனித்துக் கொண்டே வந்தான். ஒரு மினி பஸ் தாண்டிப் போயிற்று. சற்று போய் நின்றது. பிறகு மறுபடியும் முன்னேறிப் போனது. அந்த மினி பஸ்ஸின் நிற்றல் சரியாக இல்லை. மறுபடியும் சிறிது நேரம் கழித்து அந்த மினி பஸ், வலப் புறத்திலிருந்து வந்தது. வேகமாக

தாபாவுக்கு அருகே நின்றது. உள்ளிருந்து இருபது பேர் இறங்கினார்கள். கட்டிப் போட்டிருந்தவனின் கயிற்றை தாக்கினார்கள். சுற்றி நின்றவர்களை அடித்துத் தூக்கினார்கள். இரண்டு மூன்று துப்பாக்கி சப்தங்கள் கேட்டன. யார் யாரைச் சுடுகிறார்கள் என்று அந்த தொலைவிலிருந்து தெரியவில்லை.

தாபாவில் சாப்பிட்டுக் கொண்டிருந்த ஜனங்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடினார்கள். ஒரு அம்பாஸடர் அடித்து நொறுக்கப்பட்டது. அவன் உதறி, எதிர்ப்பக்கம் கடந்து தபதபவென்று வெட்ட வெளிக்கு ஓடினான். சற்று தூரம் போனான். அடுத்த சாலையை அடைந்து வேறு வண்டி பிடித்து போய் விடலாமென்று நினைத்தான். அவன் போவதைப் பார்த்து விட்டு, கதிரேசனும் வண்டியை எடுத்துக் கொண்டு அதே சாலையில் சற்று தூரம் போய், அடுத்த சாலையைச் சேர்ந்து, அங்கிருந்து அவன் எந்த மேட்டில் படியேறுவானோ அங்கே காத்திருந்தான்.

அவன் மூச்சிரைப்போடு மேடு ஏறி வருவது தெரிந்தது. அவனை யாரும் தூக்கிக் கொண்டு வரவில்லை. திரும்பிப் பார்த்தான். மெல்ல ஒரு மரத்தடியில் சாய்ந்து நின்று கொண்டான். எதிர் வரும் வண்டிகளுக்கு கை காட்டினான்.

மாருதிக் காரை மெல்ல செலுத்திக் கொண்டு அவனுக்கருகே கதிரேசன் வந்தான். கண்ணாடியை இறக்கினான். என்ன வேண்டுமென்று கேட்டான்.

கதிரேசனைப் பார்த்தவுடன் அவன் மேலும் மிரண்டான். வேறு பக்கம் போவதற்கு முயற்சி செய்தான். சட்டென்று ஒரு மரத்தின் பின்னே நின்று கொண்டான். பேண்ட் ஜிப்பை அவிழ்த்து பெல்ட்டை தளர்த்தி உள்ளே வைத்திருந்த நிக்கரிலிருந்து ரிவால்வரை எடுத்து, லோட் செய்து கொண்டான். மறுபடியும் கதிரேசன் கார் வருமா என்று காத்திருந்தான்.

கதிரேசனுக்கு அவன் என்ன செய்தான் என்பது புரியவில்லை. மறுபடியும் காரை அருகே கொண்டு போக, பளிச்சென்று ஒரு குண்டு கண்ணாடியைத் துளைத்தது.

கதிரேசன் மின்னல் வேகத்தில் காரை கியர் மாற்றி செலுத்தி முன்னே கொண்டு போக, பின் கண்ணாடியும் துளைக்கப்பட்டது.

கதிரேசன், வண்டியை பாதையிலிருந்து இறக்கி, புதர்களுக்குள் செலுத்தி மறைந்து கொண்டான். இறங்கி தள்ளிப் போய் நின்று கொண்டான். எந்த ஆயுதமும்



இல்லாமல் வந்தது தவறு என்று நினைத்துக் கொண்டான். எப்படி இவனை சமாளிப்பது என்று யோசித்தான்.

இரண்டு பக்கமும் பார்த்து மறுபடியும் துப்பாக்கியை நீட்டி ஏதோ காரை நிறுத்த முயற்சி செய்ய, அந்தக் கார் இவனை உரசி விட்டு போயிற்று. ஒரு லாரியை நிறுத்த முயற்சி செய்ய, அந்த லாரிக்காரன் கதவை பளிச்சென்று கனகசபாபதி முகத்தில் அடித்து உதறிவிட்டு, வண்டியை திருப்பிக் கொண்டு போய் விட்டான்.

ஓடி வந்த களைப்போ அல்லது கலவரமோ இவனால் குறி பார்த்து சுட முடியவில்லை. அவன் சுடவும் முயற்சி செய்யவில்லை. ஓடி வந்து எங்கே கார் இறங்கியதோ அந்த இடத்தில் தேட ஆரம்பித்தான்.

கதிரேசன் புதருக்கு மறைவில் இருக்க வேண்டுமென்று தீர்மானமாக துப்பாக்கியை பிடித்தபடி உள்ளே நுழைந்தான்.

உள்ளே நுழைகின்ற ஆளை கதிரேசன் எகிறி தாவி தரையோடு அழுத்த, துப்பாக்கி மூன்றாம் முறை வெடித்தது.

முப்பது வினாடிகளில் கதிரேசன் அவனிடமிருந்து துப்பாக்கியைப் பிடுங்கினான். அடிக்கட்டையால் முகத்தில் அடித்தான். நெஞ்சில வைத்து கொன்றுவிடுவேன் என்று அடிக் குரலில் அதட்டினான். அவனை எழுந்திருக்கச் சொன்னான்.

எழுந்திருந்தவன் கீழே இருந்த மண்ணை வாரி பளிச்சென்று கதிரேசன் முகத்தில் வீச, கதிரேசன் முகம் முழுவதும் கண் முழுவதும் மண் வந்து அப்பிக் கொண்டது. வேறு வழியில்லாமல் கதிரேசன் மண் வந்த திசை நோக்கி குறி பார்த்து இரண்டு முறை சுட, ஒரு அலறல் சத்தம் கேட்டது. கதிரேசன் உட்கார்ந்து கொண்டான்.

கண்ணிலிருந்த மண்ணை துடைத்து துடைத்து எடுத்தான். கண் திறக்க மறுபடியும் எரிந்தது. மெல்ல நகர்ந்து காருக்குப் போனான். கதவைத் திறந்து, கண்ணாடி பாட்டிலிலிருந்த தண்ணீரை எடுத்தான். முகத்தில் அடித்துக் கொண்டான். அழுந்தத் துடைத்தான். கண்ணிலிருந்த மண்ணை எடுத்தான். கண் கரித்தது. இருப்பினும் ஈரத் துணி வைத்து, மறுபடி மறுபடி கழுவ, கண் சிறிது திறக்க முடிந்தது.

இடது கண்ணால் என்ன நடந்தது என்று பார்க்க ரத்த வெள்ளத்தில் கனகசபாபதி கிடப்பது தெரிந்தது.

கதிரேசன் வண்டியை எடுத்தான். மேடேறினான்.

மும்பையை நோக்கி வேகமாய் ஓட்டி மற்ற வாகனங்களோடு கலந்து மறைந்து போனான்.

அந்தக் கொலை, கேட்பாரே இல்லாது போயிற்று. மும்பையில் பல கொலைகள் கேட்பாரே இல்லாது போயிருக்கின்றன. பல விஷயங்கள் அடையாளம் தெரியாமல் ஆக்கப்பட்டிருக்கின்றன. இவனுடைய மரணம், போலீஸாலும் தாதாக்களாலும் அதே விதமாய் எந்த பிரச்சினையுமின்றி அமுக்கப்பட்டது.

"இதை கிளறினோம்னு வச்சுக்கோ, பல பேர் மாட்டுவோம். பல கேள்விகள் வரும். பேப்பர்ல போட்டு காச்சி எடுத்துடுவானுங்க. விட்டுரு. இவன் செத்துப் போனது யாருக்கும் நஷ்டமில்லே. மும்பையில ஆட்டம் போட்டுகிட்டிருந்த ஒரு ஆள் குறைஞ்சு போனான். அவ்வளவுதானே விடு" என்று போலீஸிலேயே அமுக்கி விட்டார்கள்.

அவனைப் பற்றி, சந்து முனைகளில் பீடா கடைகளில் எப்படி செத்தான் என்று விவாதித்தார்கள்.

அந்த ஒரு கிலோ மட்டும் அவன் எடுத்துக் கொண்டு டெல்லியில் போய் விற்றிருந்தால் மறுபடியும் மும்பையில் மிகப் பெரிய தாதாவாக தலைவனாக வந்திருப்பான். கிட்டத்தட்ட பல லட்சங்கள் சம்பாதித்து சென்னையில் செட்டிலாகயிருந்தவனின் விதி மோசமாக இருந்தது. அவன் எதிரிகள் வலிவாக இருந்தார்கள். அதனால் செத்துப் போனான் என்று சொன்னார்கள்.

ஒரு பொழுதும் நம்பிக்கைத் துரோகம் செய்யாதே. அப்படி செய்தால் இதோ ஒரு கதை சொல்கிறேன் கேள் என்று கனகசபாபதியின் கதையைச் சொன்னார்கள்.

அவன் பைத்தியம் போல் அலைந்ததை, இடம் மாற்றி இடம் மாற்றித் தங்கியதை எவரைக் கண்டும் பயந்ததை கடைசியில் எங்கோ கட்டப்பட்டு புதர் நடுவில் மூன்று நாள் அழுகிக் கிடந்ததை கோரமாய் விவரித்தார்கள்.

அவன் தங்கியிருந்த இடத்தை மறுபடியும் கதிரேசன் போய் சோதனை போட்டபோது இன்னும் காசும், நகைகளும் கிடைத்தன.

எங்கு கொள்ளையடித்ததோ எந்த வங்கியில் திருடியதோ தெரியவில்லை. அதனை மூட்டையாக கட்டிக் கொண்டு வந்து நிர்மலாவின் முன்னே வைத்தான்.

"அய்யோ. இது வேணாம். இதையெல்லாம் கொண்டு



போய் ..." என்று அவள் சொல்ல, சட்டென்று கையை உயர்த்தினான். "இதையெல்லாம் கொண்டு போய் எதாவது உண்டியல்ல போட்டுரு. யாருக்காவது கொடுத்திருன்னு தயவு செய்து சொல்லாதே. உனக்கொரு பொண்ணு இருக்கு. அவளுக்கு காசு வேணும். உன்னுடைய புருஷன் அவனுடைய மகளுக்கு கொடுத்த காசு. இது நல்ல காசா கெட்ட காசான்னு அவனுடைய விஷயம். இதை உபயோகப்படுத்தறதால உனக்கோ உன் பொண்ணுக்கோ எந்தக் கெடுதலும் வராது. மிஞ்சி மிஞ்சிப் போனா பதினொரு லட்ச ரூபாய். இதை வேண்டாம்னு சொல்லிடாதே. இது உனக்குத் தேவை. நீ பட்ட அவஸ்தைக்கு இது பரிசு" என்று சொன்னான்.

பெங்காலி நண்பனிடம் போய், செக்யூரிட்டி விஷயத்திலிருந்து விடை பெறுவதாக அறிவித்தான். சென்னைக்கு போய் விடப் போவதாகச் சொன்னான். டிராவல்ஸ் நடத்த வேண்டுமென்று ஆசை இருப்பதாய் விவரித்தான். நிம் மாதிரி மும்பையில பல்வேறு திமிரான விஷயங்களில் ஈடுபட்டவர்கள் கடைசி காலத்தில் டிராவல்ஸ்தான் வைக்கிறார்கள் என்பதை அவன் புரிந்து கொண்டிருந்தான்.

டிராவல்ஸ் என்பது பல்வேறு தரப்பட்ட மனிதர்களோடு பழகுவது, நல்லவர்களோடும் கெட்டவர்களோடும் தைரியமாய் தொடர்பு கொள்ள வேண்டிய நிர்பந்தம் உடையது. வண்டியோடு காணாமல் போகிறவர்களைத் தேடி கண்டுபிடிக்க வேண்டிய அவஸ்தை உடைய விஷயம் அது.

மிக பலம் இல்லாதவர்கள் டிராவல்ஸ் நடத்த முடியாது. மிக பலம் உள்ளவன் நிஜமி சண்டை வேண்டாம் என்கிறபோது டிராவல்ஸ் நடத்தத் தான் முயற்சி செய்வான். அதில்தான் நல்ல காசும் நிரம்ப மரியாதையும் சௌகரியமும் இருக்கின்றன.

பெங்காலி நண்பன் இரண்டு லட்ச ரூபாய் காசு கொடுக்க, அதை மிகுந்த நன்றியோடு வாங்கிக் கொண்டான். பிற்பாடு ஏதேனும் ஒரு சமயம் கடன் கேட்டால் கொடுக்க வேண்டும் என்று பணிவாக கேட்டுக் கொண்டான்.

பெங்காலி நண்பன் எழுந்து தட்டி, "மறுபடியும் கடன் என்று சொல்லாதே. நான் காசு தருகிறேன். அதை எவ்விதமேனும் அடைப்பதற்கு முயற்சி செய்" என்று உற்சாகமூட்டினான்.

"திருமணம் எங்கு செய்து கொள்ளப் போகிறாய்."

"வீட்டிலேயே ; ஒரு வெங்கடாஜலபதி படத்திற்கெதிரே அந்த குழந்தைக்கெதிரே தாலி கட்டப் போகிறோம். அதோடு முடிந்து விட்டது. மற்றபடி வேறு எவர் காலிலும் விழுந்து வணங்க எனக்கு இஷ்டமில்லை. மறைமுகமாய் எவரும் கேலி செய்தால் கூட என்னால் தாங்கிக் கொள்ள முடியுமா என்று தெரியவில்லை. ஒருவேளை அவர்கள் முகம் சுருக்கினால் எனக்கு கோபம் வந்து விடக்கூடும். எனவே, கல்யாணம் என்கிற சடங்கை நான் முற்றிலுமாய் புறக்கணித்து விட்டு, எங்கள் வீட்டு விஷயமாய் நாங்களே செய்து கொள்கிற நோன்பாய் அதை மாற்றிக் கொள்ளப் போகிறோம். கல்யாணம் முடிந்து விட்டது என்று உனக்கு செய்தி சொல்கிறேன். நீ மனசுக்குள் ஒரு நிமிடம் எங்களை நினைத்து இறைவனிடம் வேண்டினால் போதும்" என்று சொல்ல வலியதே செய்பவதாய் பெங்காலி நண்பன் விடை கொடுத்து அனுப்பினான்.

சென்னை தொடர்பான செக்யூரிட்டி விஷயங்கள் இருந்தால் உதவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டான்.

மும்பையில் டெம்போ ட்ராவலர்கள் அப்போது பிரசித்தமாக இருந்தன. அந்த டெம்போ ட்ராவலர் வாங்கினால் சென்னையில் உபயோகமாகும் என்று தெரிந்தது.

ஒரு சினிமா அதிபரின் டெம்போ ட்ராவலர் அதிகம் ஓடாமல் நல்ல நிலையில் இருந்தது. கிட்டத்தட்ட பெரிய விலை சொன்ன அவரை, போய் பார்த்து பேரம் பேசி படிய வைத்து, உடனடியாக காசை அவர் முன்னால் வைத்து, என்னால் இவ்வளவுதான் தர முடியும் என்று சொல்லி, அவர் இணங்கின பிறகு இன்னும் கொஞ்சம் கூட கொடுத்து, வண்டியைத் தன் பெயருக்கு மாற்றி எழுதி வாங்கி வந்தான்.

வீட்டில் உள்ள நல்ல சாமான்களை அழகாக அடுக்கி எடுத்துக் கொண்டு மற்றபடி பீரோ தட்டுமுட்டு சாமான்களை கடையிலே விற்று விட்டு, தெரிந்தவர்களுக்கு கொடுத்து விட்டு, அவனோடு டெம்போ ட்ராவலரில் ஏறி சென்னையை நோக்கிப் பயணமானான்.

அவன் மும்பை எல்லையை தாண்டுகிற போது, ஒரு கார் வழி மறித்தது.

தாதா செல்போனில் பேசுவதாகச் சொல்ல, செல்போனை வாங்கி காதில் வைத்துக் கொண்டான்.

"என்ன, யாருக்கு பயந்து ஓடறே. என்னோட சேரச் சொன்னேன். ஏன் சேர மாட்டேங்கிறே."



"இல்லே. இந்த மும்பையே வேண்டாமென்று நினைத்து நான் கொஞ்சம் அமைதியாக இருக்கறதுக்காக மெட்ராஸ் போறேன்."

"நீதான் அவன் புருஷனைக் கொன்னேன்னு அவளுக்குத் தெரியுமா."

"இல்லே, தெரியாது."

"தெரிஞ்சா உன்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டா."

"தெரியலே. மாட்டேன்னு சொன்னாலும் சொல்லலாம்."

"சரி. அது இப்போ விஷயமில்லே. எனக்கு உதவி செய்யுட்டு, எதுவும் கேட்காம போறியே அது ரொம்ப பெரிய துணிச்சலா எனக்குப் பட்டது. சின்னதா பல்லு குத்த குச்சி கொடுத்துட்டு, ரெண்டாயிரம் ரூபாய் காசு கொடுங்க அப்படின்னு கேட்டவங்களையெல்லாம் நான் பார்த்திருக்கிறேன். ஒரு கிலோ கலப்பமா பிடுங்கி என் கையில கொடுத்துட்டு, சம்பந்தமே இல்லாதவன் மாதிரி நடந்துக்கிட்டது சந்தோஷமா இருக்கு. உன்னை மாதிரி ஆளுங்க எனக்கு இல்லியேன்னு ஒவ்வொரு நாள் ராத்திரி தூங்கும்போதும் நினைக்கிறேன்.

எப்பவாவது வேலை வேணும்னு நினைச்சா எங்கிட்டதான் வரணும். வருவியா."

"அப்படி ஒரு நிலைமை எனக்கு ஏற்படாதுன்னு நினைக்கிறேன். நான் வரமாட்டேன்னு நினைக்கிறேன். நான் போயிட்டு வர்றேன்" என்று செல்போன் கொடுக்க, மறுபடியும் செல்போன் ஒலித்தது.

"மெட்ராஸ்க்கு பெங்களூர் வழியாதானே போறே."

"ஆமாம்."

"பெங்களூர் மெட்ராஸ் ரோட்ல நுழைஞ்ச பிறகு, உன் பின்னால அம்பாஸடர் கார் வரும். 4444. பெங்களூர் ரெயில்வே ஸ்டேஷன் தாண்டி, உனக்கு பரிசு கொடுக்கிறதுக்கு ஆசைப்படறேன். இப்பவும் அதுபத்தி கேட்காம போன் கொடுத்தியே. அதுவும் எனக்குப் பிடிச்சிருக்கு. மறுபடி சொல்றேன் ஏதாவது வேலை வேணுமின்னா எங்கிட்ட வா."

அவன் சரியென்று சொன்னான். வண்டி ஏறினான். பெங்களூர் தாண்டி சென்னை ரோட்டில் நுழையும் போது, அங்கே ஒரு அம்பாஸடர் கார் அவனை பின் தொடர்ந்து வந்து நின்றது.

"என்ன" என்று கேட்டபோது, அவனிடம் சாவி நீட்டப்பட்டது.

"எனக்குப் புரியலியே."

"இந்தக் காரை உங்களுக்கு கொடுக்கச் சொன்னாங்க."

"யார்" என்றபோது மும்பையிலுள்ள தாதாவின் பெயரைச் சொன்னார்கள்.

அவன் சிறிது நேரம் கண்மூடி நின்றான்.

"நான் எப்படி எடுத்துக் கொண்டு போறது. டெம்போ ட்ராவலர் எடுத்துட்டுப் போறேனே."

"இல்லை, நீங்க எங்கே கேட்கறீங்களோ அங்கே கொண்டு வந்து கொடுக்கும்படியா எனக்குக் கட்டளை."

"அப்படியானால் பின்னாடியே வா."

டெம்போ ட்ராவலரும் அம்பாஸடர் காருமாய் அவன் சென்னைக்குள்ளே நுழைந்தான்.

அவன் ட்ராவல்ஸ் நடத்துவதைப் பற்றி பெங்காலி நண்பன் தாதாவிடம் சொல்லியிருக்க வேண்டும். தாதா அதற்காக இந்தப் பரிசு கொடுத்திருக்க வேண்டும்.

அவன் சென்னைக்குள் நுழைந்ததும் பெங்காலி நண்பனுக்கு போன் போட்டு, தாதாவுக்கு நன்றியை சொல்லுமாறு சொன்னான். போனை துண்டித்தான்.

ஹோட்டலில் தங்கியபடி வீடு தேடினான். மூன்றாம் நாள் வீடு கிடைத்தது. ஆறுமாத வாடகை அட்வான்ஸ் என்று சொன்னபோது, இல்லை ஒரு வருட வாடகையை அட்வான்ஸாக வைத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொரு முதல் தேதியும் உங்களுக்கு வாடகை வந்து விடும். அவைகளை இப்பொழுதே கொடுத்து விடுகிறேன் என்று பனிரெண்டு காசோலைகள் கொடுத்தான்.

கையிலிருந்த பெட்டிகளைக் கொண்டு போய் வீட்டில் வைத்து, புதிய கட்டில், புதிய சோபா, புதிய நிலைக்கண்ணாடி, புதிய சமையல் பாத்திரங்கள் என்று பல்வேறு புதிய விஷயங்களோடும் மனைவியோடும் குழந்தையோடும் உள்ளுக்குள் குடித்தனம் போனான்.

குழந்தை குதித்தாள்.

இரண்டு அறைகளும், ஒரு பெரிய ஹாலும் கிச்சனும் இருக்கிற, அழகான வராண்டா இருக்கிற இரண்டாம் மாடி கட்டிடம் அது. திருப்பதி வெங்கடாசலபதி படம் மாட்டி, அதற்கு மாலை போட்டு, பிறகு குண்டும் குழலும், பவழமும்



ஒரு திருமாங்கல்யமும் கோர்த்த மங்கள நாணை அவள் கழுத்தில் அணிவித்தான். அவளோடு போய் புதிய நகைகள் வாங்கினான். குழந்தைக்கு காது ஸ்டேடும் வீட்டிற்கு நல்ல கம்ப்யூட்டரும் வாங்கி வைத்தான். அம்மாவும் பெண்ணும் கம்ப்யூட்டரில் மாற்றி மாற்றி பல்வேறு விஷயங்களை சோதனை செய்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

நகரம் முழுவதும் சுற்றி, எங்கு இருந்தால் ஒரு ட்ராவல்ஸ் சரியாக இருக்கும் என்பதைப் பார்த்து நகரத்தின் மையப் பகுதியைத் தேர்ந்தெடுத்து, அங்கு கார் ஷெட் போட்டிருந்த இடத்தை வாடகைக்கு எடுத்து, அதில் மூன்று நான்கு கார்கள் நிறுத்தும்படிச் செய்து, அந்த கார் ஷெட்டை இடித்து வேறு விதமாக மாற்றி, கட்டிடம் கட்டி நிர்மல் ட்ராவல்ஸ் என்ற பெயரில் கம்பெனி துவங்கி, அவன் பேச்சு சாமர்த்தியத்தில் அவனுடைய அனுபவ சாமர்த்தியத்தில் வெகு எளிதாய் நல்ல நண்பர்கள் கிடைத்தார்கள். வியாபாரம் சூடு பிடிக்கத் துவங்கியது.

தங்களிடமிருந்த இரண்டு வண்டிகளைத் தவிர மற்ற வண்டிகளை வெளியே வாடகைக்கு எடுத்து, வசதி உள்ளவர்களை வண்டிகள் வாங்கச் சொல்லி அந்த வண்டியை தான் பராமரித்து, அவர்களுக்கு சரியான தேதியில் காசு கொடுத்துக் கொண்டிருந்தான்.

ஒன்றாம் தேதி காலை எட்டு மணிக்கு அல்லது ஒன்பது மணிக்கு அந்த வண்டியின் வாடகைப் பணம் உரிய நபர்களுக்கு வந்து சேர அவர்கள் சந்தோஷமாயினர்.

இன்னொரு வண்டி வாங்கலாமா என்று அவனிடமே யோசனை கேட்டார்கள். இன்னொரு வண்டி வாங்கிக் கொடுக்க இவனே தரகு வேலை செய்தான். அதிலும் சம்பாதித்தான்.

காலை ஏழரை மணிக்கு கம்பெனிக்குப் போய் இரவு எட்டு வரையில் இருந்து சில சமயம் இரவு நேரம் கண் விழித்துக் காத்திருந்து, ஒரு வேளை கம்பெனியில் இல்லாவிட்டாலும் வீட்டுக்குத் தொடர்பு கொள்ளச் சொல்லி, செல்லுக்கு தொடர்புக் கொள்ளச் சொல்லி, நாலாவிதமான தொடர்பு சாதனங்கள் வைத்திருக்க, அவனை எதற்கும் அணுக, பல பேருக்கு தெரிந்திருந்தது. உடனடியாய் தீர்வுகள் செய்ய அவனுக்கும் தெரிந்திருந்தது.

ட்ராவல்ஸ் என்பது இருபத்து நாலு மணிநேர வேலை. இருபத்து நாலு மணி நேரமும் தொடர்பு கொள்ளும்படி அவன் இருந்து விட்டால் போதும் அது வீடாக இருந்தாலும்

கம்பெனியாக இருந்தாலும் கவலை இல்லை. அவன் வீட்டிலிருந்தபடியே உத்தரவுகள் கொடுக்க, வண்டிகள் பலவேறு திக்குகளில் நகர்ந்தன.

மனைவியை அணைத்தபடியே போனில் பேச, அவனுக்கு நண்பர்கள் அதிகமானார்கள். குழந்தையோடு கொஞ்சியபடியே கதைகள் சொல்லி வண்டியை எடுத்துக் கொண்டு, மற்ற ட்ராவல்ஸ்களிடம் போய் வர, அவர்கள் நட்பு மேலும் உறுதிப்பட்டது. அவன் நம்பிக்கையானவனானான்.

"இனி ஒண்ணும் எனக்கு குழந்தை பெத்துக்கணும்னு இல்லை எனக்கு இந்த பொண்ணு போதும். நீ போதும்.

திருமணம் என்ற ஒரு விஷயத்தை பதினைந்து வருஷத்துக்கு மேல கொண்டாடக்கூடாது. அதுவரைக்கும் நீ என்னோடு ஆட்டம் போட்டால் போதும். அதுக்குப் பிறகு இந்தப் பொண்ணு. இவள் வாழ்க்கை அப்படின்னு நாம நகர்ந்தா போதும்.

ஐம்பது வயதுக்குப் பிறகு சம்பாதித்தது போதும்னு எல்லாத்தையும் இழுத்து மூடிட்டு. வேறொரு ட்ராவல்ஸ் கம்பெனியில மேனேஜரா காலை பத்திலிருந்து மாலை ஐந்து வரைக்கும் வேலை செய்யற ஆளா உட்கார்ந்திருவேன். இன்னொரு ஐந்து வருஷம் பொறுத்து, அதையும் விட்டுட்டு, வெறுமே பல்லு குத்திக்கிட்டு கோயில் பக்கம் போய் ஜபம் செய்து, அறுபத்தஞ்சு, எழுபது வயசுல என் கதையை முடிச்சுக்குவேன். இதுக்கு மேல உயிரோட இருக்கிறது இந்த ஊர்ல கஷ்டம்.

நமக்கு பெரிய பொறுப்புக்கள் இல்லை. இந்தப் பொண்ணுதான். இந்தப் பெண் கல்யாணத்துக்கு எவ்வளவு நகை வாங்க முடியுமோ, அதை வருஷா வருஷம் வாங்க ஆரம்பிச்சிருவோம்.

நூறு பவுன் போடுவோமா. அவளுக்கு ஒன்பது வயசு. இன்னொரு பத்து வயசுக்குள்ளே நூறு பவுன் சேர்க்கணும்னா வருஷத்துக்கு பத்து பவுன் வாங்கிரு. டக்கு டக்குனு முதல் தேதியே வாங்கிரு.

கல்யாணத்துக்கு இப்பமே எங்கனா காசு போட்டு வை. எல்.ஐ.சி.லே. பேங்க்ல மல்டிபிள் ஆகிற மாதிரி காசு போட்டு வை" என்று சொல்ல, அவள் அதை வேகமாகக் கடைபிடித்தாள். புருஷனோடு சந்தோஷமாக இருந்தாள். குழந்தையும் அவர்கள் இருவரையும் பார்த்து பல விஷயங்கள் புரிந்து கொண்டு, விலகியிருந்த நேரத்தில விலகி நின்றது. இழைய வேண்டிய நேரத்தில் இழைந்து



நின்றது. வாழ்க்கை அவனுக்கு சந்தோஷமாகப் போயிற்று. ஆனால், அவள் உள்ளுக்குள் ஏதோ இழந்தது போலவும், ஏதோ நிறைவு இல்லாதது போலவும் தவித்தாள்.

மும்பையில் அதிரடியான விஷயங்களிலெல்லாம் ஈடுபட்டு விட்டு இப்பொழுது அவன் அமைதியாக இருப்பதைப் பார்த்து அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

"இங்கு செக்யூரிட்டி கம்பெனி ஆரம்பிக்கணும்னு தோணலையா?"

"வேண்டாம். செக்யூரிட்டியெல்லாம் அங்க திருட்டு, அடிதடி ரகளை. அந்த இடத்துக்கு நான் இறங்கினேன்னா மெட்ராஸ் தாங்காது. என் கோபம் ஜாஸ்தியாகிகிட்டே போகும். எப்பவாவது அது வீட்ல வந்து விழுந்துரும். வீட்ல என் கோபம் வந்து விழுந்தா நீ தாங்க மாட்டே. மறுபடியும் பழைய வாழ்க்கைதானான்னு நீ பயப்பட ஆரம்பிச்சுருவே.

உனக்காகத்தான் நான் செக்யூரிட்டி வேலையை மெட்ராஸ்ல ஆரம்பிக்காம இருக்கேன். எனக்கு ட்ராவல்ஸ் போதும். இதுலயே சில சமயம் கோபம் ஊட்டறாங்க. மறுபடி நான் கத்தக்கூடாது. உன் முன்னாடியோ குழந்தை முன்னாடியோ நான் கோபமே படக்கூடாது. அப்படி திரும்பத் திரும்ப கத்துகிறதா இருந்தா, நான் இதையும் விட்டுட்டு வேற ஏதாவது வேலைக்குப் போயிருவேன்."

"இப்படி எங்களுக்காக எங்களுக்காகன்னு செய்யறதுக்கு உங்களுக்கு எப்படி மனம் வந்தது?"

"எனக்காக நீங்க செய்வீங்கன்னா உங்களுக்காக செய்யறேன். எனக்காக வந்து இழைவீங்கன்னா உங்களை கொஞ்சறேன். பதிலுக்கு என்னை பாராட்டுவீங்கன்னா செய்யறேன்.

திவ்யா கொஞ்சம் கூட இதில் குறை வைக்காமல் என்னை கொண்டாடிட்டிருக்கா. நான் வர்றதுக்கு அரைமணி நேரம் ஆச்சுன்னாலும் போன் பண்றா. தனக்கு ஒரு சின்ன சந்தேகமாயிருந்தாலும் போன் பண்றா. ஒரு சின்ன தோல்வியாயிருந்தாலும் என்னோட பகிர்ந்துக்கிறா. இப்படி என்கிட்ட வந்து அந்தக் குழந்தை இழையறது எனக்கு சந்தோஷமாயிருக்கு. நான் பெத்தாக்கூட இத்தனை ஆசை வருமா எனக்குனு தெரியலை.

உண்மையா உன்னை நான் நேசிக்கிறதுக்கு காரணம் திவ்யா. அதுக்கு ஒன்பது வயசுதான் ஆகுது. ஆனா இப்பவே அவளுக்கொரு நல்ல மாப்பிள்ளை தேடணும் அப்படின்னு ஆசை வந்திருக்க

"இந்தப் பையன் சரியா இருப்பானா இந்தப் பையன் சரியா இருப்பானான்னு பனிரெண்டு வயசுப் பசங்களோட நான் உட்கார்ந்து பேசிட்டிருக்கேன். அது தெரியுமா உனக்கு" இரவு அவள் அவனை அணைத்துக் கொண்டு பேச அவன் திடுக்கிட்டான்.

இது என்ன புத்தி. இது என்ன அன்பு. இது என்ன ஆசை. இவனுக்கு ஈடாய் நான் இல்லையே. இவனை இவன் சகலமும் உதறி விட்டு தன்னையே முக்கியமாய் நினைத்து இங்கு வந்தது போல, தான் இவனிடம் இருக்க முடியவில்லையே என்று பயந்தாள். அப்படி இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்று யோசித்தாள். முயற்சித்தாள். ஆனால் முழுவதுமாய் முடியவில்லை.

அவனுக்குத் தெரியாமல் நாலு லட்சம் ரூபாய் காசு வேறொரு வங்கியில் போட்டிருந்தாள். அவனுக்குத் தெரியாமல் பதினாறு சவரன் நகைகள் வேறொரு இடத்தில் பதுக்கி வைத்திருந்தாள்.

அப்பா விடுதலையாகி வந்ததும் அவர் யாருக்கும் தெரியாமல் ஒளித்து வைத்திருந்த நகைகளை இவர்களுக்குக் கொடுக்க, அந்த நகைகளையும் ரொக்கத்தையும் தனியே வேறொரு வங்கியில போட்டிருந்தாள்.

"நீ சந்தோஷமா இருக்கேன்றது போதும். நான் வந்து நின்னு ஏதாவது பேசி வாழ்க்கையை குழப்ப விரும்பவில்லை. நான் பண்ணின பாவத்திற்கு நீதான் அனுபவிச்சே. நல்லவேளை எவனோ வந்து காப்பாத்திட்டான். என் புத்தி நாய் புத்தி திரும்பவும் ஏதாவது ஏடக்கு மடக்கு பண்ணி, ஏடா கூடம் பண்ணி எதிர்ப் பேசி, வம்பு பண்ணும். நான் உன் கண்ணுலபடாத போயிடறேன். ஞாயிற்றுக்கிழமை ஞாயிற்றுக்கிழமை போன் பண்றேன். நல்லாருக்கியா நல்லாருக்கேன் அவ்வளவுதான். அத்தோடு போதும்" என்று சொல்லி திண்டுக்கல் பக்கம் நகர்ந்து விட்டார். பசுமையான மலைகளும் வயல்களும் சூழ்ந்த அந்த இடத்தில் மருந்துக்கடை திறந்து இரண்டு ஆட்களைப் போட்டு மௌனமாய் வாழ்ந்திருந்தார்.

சென்னையில் சில தெருக்களை பார்க்கும் போது, திடீரென்று தான் அலைந்ததும் திரிந்ததும் பள்ளித் தோழிகளோடு ஆடியதும் பாடியதும் ஞாபகத்திற்கு வரும்.

படுக்கைக்கு கீழே கத்தை கத்தையாய் நோட்டுக்கள் பரப்பி அதன் மேல் இன்னொரு படுக்கை போட்டு புரண்ட காலம் ஞாபகம் வரும்.



இப்படி வேறு யாரோ வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்கிறபோது, எப்படி நம்மால் அந்த வாழ்க்கையை தொடர்ந்து நடத்த முடியாது போயிற்று என்ற எண்ணம் வரும். இவை எல்லாம் வர தூக்கம் கெட்டுப் போகும். நடுநிசியில் எழுந்து வந்து வராண்டாவில் நின்றபடி யோசித்துப் பார்க்க, எங்கோ மனம் வலிக்கும்.

இவனைப் போல இவனிடம் முழுமையாக தன்னை கொடுக்க முடியவில்லையே. முற்றிலும் உண்மையாக இருக்க முடியவில்லையே. இடையறாது இவனிடம் நாடகமாடிக் கொண்டிருக்கிறோமே என்று வேதனை வரும். நாடகத்தை நிறுத்தி விடலாமா என்று யோசனை வரும். ஆனால் இரண்டு வருடம் கழித்து இவனுடனும் பிணக்கு வந்தால் எங்கே போவது. இப்பொழுதாவது உடம்பு முதல் என்று இருக்கிறது. இதுவும் இல்லாத காலத்தில் எங்கே போய் யாரிடம் போய் அண்ட முடியும். எனவே, கடைசி வரை உண்மையைச் சொல்லாது, தான் சேமித்து வைத்திருப்பதைப் பற்றி பேசாது, எப்போதும் இவனைப்பற்றிய சந்தேகத்தோடு இருப்பது நல்லது என்று ஒருமுறை தோன்றும்.

சீ. இதை விட கேவலமான பிறவி உண்டா. நீ யாரோடு உண்மையாக இருந்திருக்கிறாய். உண்மையாக இல்லாததனால்தானே இப்படி செருப்படி விழுந்து கொண்டிருக்கிறது என்று இன்னொரு பேச்சு மனதில் எழும். இரண்டுக்கும் நடுவே மாட்டிக் கொண்டு, அவள் திண்டாடுவாள்.

எப்படி இருப்பது.. நூறு சதவீதம் உண்மையாய் புருஷனிடம் இருக்க முடியுமா. இருப்பது நல்லதா என்று யோசிப்பாள். யாரேனும் இருக்கிறார்களா என்று வானத்தைப் பார்த்து கேள்வி கேட்டாள்.

இப்படி இரண்டாம் புருஷனைப் பற்றி முந்தைய வாழ்க்கையைப் பற்றி முதல் புருஷனைப் பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்த போது, மெல்ல விடிந்தது.

அவள் வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பித்தாள். அவன் வேலைக்கு கிளம்பிப் போனான். குழந்தை பள்ளிக்கு புத்தகப் பையோடு விடைபெற்றுப் போனாள். மறுபடியும் அழைப்பு மணி கூப்பிட கதவு திறந்தாள்.

பத்திரிகைகளை வாடகைக்கு கொடுக்கும் லைப்ரரி பையன் நின்றிருந்தான். டி.வி.க்கு அடுத்தபடி பொழுது போக்கு நிர்மலாவுக்கு புத்தகங்கள்தான்.

வட இந்திய ஆங்கில பத்திரிகைகள், ஃபேஷன் பற்றிய

குறிப்புகளும் புடவை பற்றிய விளம்பரங்களும், வீட்டு சாமான்கள் பற்றிய சம்பாஷணைகளும் வரும். எனவே அவைகளை படிப்பதற்கு அவள் ஆவல் மிக்கவளாய் இருந்தாள். நல்ல பொருட்கள் எங்கு கிடைக்குமென்று அவைகள் சொல்ல, அவைகளை வாங்கி வீட்டில் வைப்பது அவளுக்கு ஒரு பொழுது போக்காக இருந்தது.

எல்லா வேலைகளையும் முடித்து விட்டு புத்தகத்தைப் பிரிக்க, மும்பையின் தாதாக்கள் பற்றி ஒரு வட இந்திய பத்திரிகையில் விபரம் போட்டிருந்தது. படிக்க ஆரம்பித்தாள்.

கனகசபாபதியின் கொலை என்று போடப்பட்டிருந்தது. மூன்று வருடம் முன்பு நடந்த கனகசபாபதியின் கொலையை போலீஸே வெகு எளிதில் அழித்து விட்டது என்று சொல்லி, அவன் எங்கு இறந்தான், எப்படி இறந்தான், யாரால் இறந்தான் என்று விளக்கியிருந்தது.

பெங்காலி செக்யூரிட்டி கார்டால் கொலை செய்யப்பட்டான் என்று கதிரேசன் பெயர் சொல்லாது அவனுடைய மாருதி கார் வர்ணமும் எண்ணும் தரப்பட்டு அதை போலீஸார் தெரிந்திருந்தும் நழுவ விட்டதை விளக்கியிருந்தது.

சட்டப்படி எல்லா கொலைக்கும் மரண தண்டனை விதிக்கப்படுவதில்லை. எல்லா கொலையும் நீதிமன்றம் ஏறுவதில்லை. எல்லா வன்முறைகளும் போலீஸில் பதிவாவதில்லை. அவர்களுக்குள் நடைபெறும் வன்முறைகளை அவர்களே தீர்த்துக் கொள்கிறார்கள். அதுபற்றி போலீஸில் தகவல் சொல்லவும் ஆளில்லை.

மிகவும் யோசித்து, சாலையில் போய்க் கொண்டிருந்த லாரி மோதி மரணம் என்று கனகசபாபதியை முடித்து விட்டார்கள். ஆனால், உண்மையில் கனகசபாபதி அப்படி இறக்கவில்லை என்று சொல்லப்பட்டிருந்தது. அதற்கு காரணமாக இருந்த தாதாவை விமர்சித்திருந்தது.

அவள் திடுக்கிட்டாள். மும்பைக்கு போன் செய்தாள். பெங்காலி செக்யூரிட்டி போன் எடுக்க, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள். அவன் உற்சாகத்துடன் பேசினான். நன்றாக இருக்கிறீர்களா என்று விசாரித்தான்.

நான் இன்ன பத்திரிகையில் இன்ன விஷயம் படித்தேன். நீங்கள் படித்து விட்டு எனக்கு தயவு செய்து போன் செய்யுங்கள் என்று போனை துண்டித்தாள். அவனிடமிருந்து போன் வரும் என்று காத்திருந்தாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் போன் வந்தது.



"விஷயம் படித்து விட்டேன். உங்கள் கேள்வி என்ன" என்று அந்த பெங்காலி நண்பன் கேட்டான்.

"அதில் இருந்ததெல்லாம் உண்மையா."

"ஆம் என்றால் என்ன செய்யப் போகிறீர்கள். இல்லை என்றால் என்ன சொல்லப் போகிறீர்கள். அது முடிந்த கதை. தேவையில்லாமல் அந்த தாதாவின் எதிர்கட்சியினர் தூண்டி விட, இந்த பத்திரிகை அதை கட்டுரையாக்கியிருக்கிறது. அநேகமாக கட்டுரை எழுதியவன் சில மணி நேரத்திற்குள் உதைபடப் போகிறான். இதெல்லாம் அலட்டிக் கொள்ளாமல் கதிரேசனுடன் குடித்தனம் நடத்துங்கள்."

"இல்லை. என் கணவர் எப்படி இறந்தார் என்று எனக்குத் தெரியவில்லையே. இது வருத்தமாக இருக்கிறது. அவரை சுட்டுக் கொன்றது இவர்தான் என்பதை எனக்கு ஏன் யாரும் சொல்லவில்லை. ஏன் கதிரேசனும் சொல்லவில்லை. என்னிடம் ஏன் இவர் மறைத்தார்" என்று அவள் அவனிடம் புலம்பினாள்.

அவன் பதில் சொல்லாது போனை துண்டித்தான்.

நான் மட்டுமே மனதில் மறைத்துக் கொண்டு, சந்தேகப்பட்டுக் கொண்டு, வாழ்க்கை நடத்தவில்லை. தன்னுடைய புருஷனும் தனக்குத் தெரியாமல் பல விஷயங்களை மறைத்துக் கொண்டு, வாழ்க்கை நடத்துகிறான். தன்னோடு இருக்கிறான். ஆகவே, தான் செய்வது தவறா என்ற கேள்விக்கே இடமில்லை. அதே தவறை தன் புருஷனும் செய்கிறான் என்று ஒரு கண நேர குதூகலம் நிர்மலாவை துள்ள வைத்தது. பிறகு, மறுபடியும் மௌனமானாள்.

இவர் ஏன் பெரிய சத்தியவந்தன் போல நடந்து கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் தன்னிடம் ஒப்படைத்து விட்டதாய் ஏன் பேச வேண்டும். தான் அப்படி பேசுவதுண்டா. இல்லையே உன்னைத் தவிர வேறு எவரும் கிடையாது. உன் குழந்தையைத் தவிர வேறு யாரும் முக்கியமில்லை என்றெல்லாம் வசனங்கள் சொல்லிவிட்டு, இப்பொழுது மிகப் பெரிய பூசணிக்காயை சோற்றில் மறைக்கின்ற புத்தி எப்படி வந்தது.

துப்பாக்கியை எடுத்து குறி பார்த்து நெஞ்சுக்கு நேர் வைத்து இயக்கி இருக்கிறாயே. இருதயத்தில் ஒன்றும் தொண்டைக் குழியில் ஒன்றுமாய் சுட்டிருக்கிறாயே. இதை என்னிடம் சொல்லவேயில்லையே. இது நியாயம்தானா. நான் வேண்டும் என்பதற்காகத்தான் என் புருஷனைக் கொன்றாய்

என் மகளோடு கொஞ்சிப் போவா அவனைக் கொன்றாய் இல்லை. குண்டாய், வட்ட சாட்டமாய் ஒரு பெண்ணை படுக்கையில் சாய்க்க வேண்டும். நான் தவறாமல் அவனோடு சந்தோஷமடைய வேண்டும். இரவும் பகலுமாய் கூப்பிட்ட நேரத்தில் அவனோடு கட்டிப் புரள வேண்டும். இதற்காகத்தானே இந்த வேஷங்களெல்லாம். இதற்காகத்தானே இந்த நல்லவன் நாடகமெல்லாம்.

அவள் யோசித்து யோசித்து கொதித்தாள். அவனுக்கு போன் செய்து உடனே வர வேண்டும் என்றாள்.

அவன் இப்போதைக்கு முடியாது. இன்னும் மூன்று மணி நேரம் கழித்து வருகிறேன். இரண்டு வண்டி பிரேக் டவுன் என்று சொன்னான். அவள் போனை வைத்து விட்டாள். ஆனால், அரை மணி நேரத்தில் அவன் வந்தான்.

"வழக்கமாக இப்படி கூப்பிட மாட்டாயே. இப்பொழுது கூப்பிடுகிறாயே ஏன் என்ன சமாச்சாரம். பசிக்கிறது சோறு போடு" என்று சொன்னான்.

"சமைக்கவில்லை" என்று அவள் பதில் சொல்ல, அவன் ஆச்சரியத்தோடு பார்த்தான்.

"என்ன ஆயிற்று. திடீரென்று ஏன் இப்படி முகம் மாறிக் கடிக்கிறாய். என்ன விஷயம்" என்று சொல்ல, அவள் பத்திரிகையை நீட்டினாள். அவன் நிதானமாகப் படித்தான். "என்ன இப்போது."

"யார் கொன்றது."

"தெரியாது."

"நீ கொல்லவில்லையா."

"இல்லை."

"ஏன் பொய் பேசுகிறாய். நீதான் கொன்றாய் என்று உன்னுடைய நண்பன் சொல்லி விட்டான். நான் உறுதிப்படுத்திக் கொள்ளாமல் உன்னைக் கூப்பிடவில்லை. இப்பவும் இந்த நேரமும் உன்னால் பொய் சொல்ல முடிகிறது என்றால், உன் மனதிற்குள் வேறு ஏதோ எண்ணம் இருக்கிறது. நீயும் நானும் குடித்தனம் செய்வது பற்றி எனக்கு சந்தேகம் வந்து விட்டது. உன்னைப் பற்றி அச்சம் வந்து விட்டது. என் புருஷனிடம் எப்படி பயந்தேனோ அதே போல் நான் உன்னிடமும் பயப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டது. ஏதோ ஒரு விஷயம் என்னைத் தடுத்து உன்னோடு ஒட்ட முடியாமல் பண்ணி விட்டது. அது என்ன என்று தெரியவில்லை. இப்போது சொல்கிறேன்.



உன் மீது எனக்கு சந்தேகம். பலத்த சந்தேகம். வெறும் படுக்கைக்கு மட்டுமே என்னை உபயோகப்படுத்துவதற்கு நீ திருமணம் செய்து கொண்டிருக்கிறாய் என்று சந்தேகம். இந்த விஷயம் ஒரு முடிவுக்கு வர வேண்டும்" என்று அவள் கத்தினாள்.

"மறுபடியும் சொல்கிறேன். ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்வது காமத்திற்காக என்றால் நீ ஒரு நல்ல தேர்வு அல்ல. உன்னிலும் மிக ரம்மியமான பெண்கள் மும்பையில் எனக்கு கிடைத்திருப்பார்கள். நான் உன் மகளிடம் நெகிழ்ந்து போய், நீ பட்ட வேதனையில் கரைந்து போய் உனக்கு உதவி செய்தேன். நான் நீ வேண்டும் என்பதற்காக உன் புருஷனை கொலை செய்யவில்லை. உன் புருஷனை கொலை செய்யாவிட்டால், அவன் என்னை கொன்றிருப்பான். நான் சுட்டது தற்காப்புக்காக."

"என்னிடம் ஏன் சொல்லவில்லை."

"சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. உனக்குத் தெரிந்து என்ன ஆகப் போகிறது. இது உனக்குத் தெரிவதை விட உன் மகளுக்குத் தெரியாமல் இருக்க வேண்டுமென்று நான் விரும்பினேன். உன் மகளுக்குத் தெரிந்தால், ஒருவேளை அல்லது ஒருநாள் என் தகப்பனை நீ சுட்டுக் கொன்று விட்டாயே, எனக்குத் தகப்பனில்லாமல் செய்து விட்டாயே என்று கதறுவாளோ. என்று பயந்தேன். எனவே அவளுக்கு நீ சொல்லிவிடக்கூடாது. ஏதேனும் ஒரு பலஹீனமான நேரத்தில் அவளுக்கு இந்த விஷயம் உன் மூலம் தெரிந்து விடக்கூடாது என்ற பயத்தில் உன்னிடமும் மறைத்தேன். மற்றபடி உன்னிடம் மறைக்க வேண்டுமென்ற ஆசை எனக்கில்லை.

சுட்டதும் நான் பயந்து போனேன். ஆனால், உனக்கு மிகப் பெரிய நன்மைகள் செய்திருக்கிறேன் என்று சுட்ட நேரத்தில் நான் சந்தோஷமும் அடைந்தேன்.

ஏதேதோ பயத்தில் முன்பு வாழ்ந்த அவலத்தை மறுபடியும் நினைத்துக் கொண்டு, இந்த வாழ்க்கையையும் அவலமாக்கிக் கொள்கிறாய். உன்னால் அமைதியாக இருக்க முடியவில்லை. பதட்டப்பட்டு பதட்டப்பட்டு பதட்டப்படுவது பழக்கமாகி விட்டது. குறுக்கே யோசித்து குறுக்கே யோசித்து அப்படி யோசிப்பதே உனக்கு வழக்கமாகி விட்டது. சந்தேகப்பட்டு எல்லோரையும் சந்தேகிப்பதே உன் இயல்பாகி விட்டது. இந்த சந்தேகம் உனக்குத் தொந்தரவு தரும். நமக்குள் பிளவு தரும். இந்தப் பிளவு உன் குழந்தையைத்தான் பாதிக்கும்.

இந்த கணத்தில தயவு செய்து சலகத்தையும் உதறி விடு. அவனை மறந்து விடு. முற்றிலுமாய் எல்லாவற்றையும் உதறி விட்டு எனக்கு சோறு போடு" என்று அவள் உட்கார்ந்தாள்.

"எனக்கென்னவோ என் புருஷன் திருந்தி என்னிடம் வந்திருப்பான் என்று தோன்றுகிறது. அவனைக் கொலை செய்யாமலிருந்தால், மூன்று நான்கு வருடத்தில் ஏகப்பட்ட வேதனைகள் பட்டு நல்லவனாய் ஒரு நல்ல நண்பனாய், ஒரு நல்ல தகப்பனாய், அவன் எங்கேனும் வந்திருக்கக்கூடும். அவசரப்பட்டு அவனை சுட்டுக் கொன்று விட்டாய் என்று நான் நினைக்கிறேன்" என்று அவள் கடுகடுத்தாள்.

வாசலில் நிழலாடியது.

இருவரும் திரும்பி பார்த்தார்கள்.

திவ்யா நின்று கொண்டிருந்தாள். அருகே வந்தாள்.

"அப்பாவை யார் கொன்னாங்கம்மா" என்று கேட்டாள்.

நிர்மலா பேசாமலிருந்தாள்.

"சொல்லேம்மா, அப்பாவை யார் கொன்னது" என்று மறுபடியும் கேட்டாள்.

"அவரைப்போய் கேள், அவர் சொல்வார்" என்று கதிரேசனை நிர்மலா கை காண்பித்தாள்.

திவ்யா அவன் அருகே வந்து நின்றாள்.

கதிரேசன் தோளில் கை வைத்தான். கன்னத்தில் முத்தமிட்டாள். விலகி நின்றாள்.

"சொல்லுங்க, எங்கப்பாவை யார் கொன்றது."

"நான்தான் கொன்றேன் திவ்யா."

"எப்படிக் கொண்ணீங்க."

"என் மூஞ்சிலே மண்ணைத் தூக்கிப் போட்டார். என் கண்ணுல மண் விழுந்துடிச்சு. நான் தடுமாறிய போது என்னை அவர் அடிச்சுக் கொல்லணும்னு நினைச்சார். ஆனா, கண்ணுல மண் விழுந்தவுடனே, நான் பயந்து போய் கையில இருக்கிற ரிவால்வரால ரெண்டு தடவை எதிர்ப்பக்கம் சுட்டேன். சுட்டதில் ரெண்டு குண்டும் அவர் மேலே பாய்ஞ்சு அந்த இடத்திலேயே சுருண்டு விழுந்துட்டார். ஐந்து நிமிஷம் பொறுத்து, கார்-கதவைத் திறந்து என்னுடைய முகத்தை கழுவிட்டு பார்க்கிற போது அவர் செத்துப் போய் கிடந்தார்.

நான்தான் சுட்டிருக்கணும். என் குண்டுதான் அவர் மேல் பட்டிருக்கணும். நான் கண்ணு திறந்துகிட்டு சுடலை. கண்ணை மூடிட்டுதான் சுட்டேன். அதுல உன் அப்பா செத்துப்



போயிட்டார்.

நான் அன்னிக்கு சுடலேன்னா என்னை கொண்ணுட்டிருப்பார். வேற வழியில்லாம நான் உங்கப்பாவைக் கொன்னேன்."

"இதை, எனக்கு தாத்தா சொல்லிட்டார்."

"யார்."

"எங்க தாத்தா."

"அவருக்கு எப்படித் தெரியும்."

"எங்க அப்பாவோட அப்பா சொன்னாராம்."

"அவருக்கு எப்படி தெரியும்."

"எங்க அப்பாவோட அப்பா லெட்டர் போட்டாராம். மும்பையில் இருக்கிற பெரிய மனுஷங்க எல்லாம் வந்தாங்களாம். அவங்கதான் அப்பா எப்படி செத்தாருன்னு சொன்னாங்களாம்."

அம்மாவோட அப்பாவுக்குச் சொல்ல அம்மாவோட அப்பா, போன வருஷமே என்கிட்ட சொல்லிட்டாங்க. பாட்டி அத்தனையும் கேட்டுட்டு. இதுக்காக கதிரேசனை தூக்கி எறிஞ்சு பேசிடாதே. பிடிக்கலேன்னு சொல்லிடாதே.

கதிரேசன் மட்டும் அதை செய்யலேன்னா உங்கம்மா குப்பையா போயிருப்பா. இன்னிக்கு நல்லா இருக்கிறதுக்கு காரணம் கதிரேசன் பண்ணின அந்த கொலைதான். வேணும்னு சுட்டுட்டு எனக்குத் தெரியாதே அப்படின்னு போகாது. இந்த க்ஷணம் வரைக்கும் சந்தோஷமா உங்கம்மாவையும் உன்னையும் வச்சுட்டிருக்கார். இது பெரிய கொடுப்பினை. எல்லா சோதனைக்கு அப்புறமும் ஒரு விடிவுகாலம் நமக்கு கதிரேசனால வந்ததுன்னு சொன்னாங்க.

எங்கம்மாவை எங்கப்பா அடிக்கிறது எனக்கு இன்னும் ஞாபகம் இருக்கு. ஆனா, ஒருநாள் கூட நீங்க அம்மாவோட சண்டை போட்டதில்லே. நீங்களும் அம்மாவும் எப்பவும் சிரிச்சு பேசிக்கிட்டுதான் இருக்கீங்க. அம்மாவும் நீங்களும் எப்பவும் ஒருத்தரோடு ஒருத்தர் அன்போடு பார்த்துக்கிட்டுதான் இருக்கீங்க.

அப்பா இருந்திருந்தா, இந்த வீடு ரொம்ப மோசமா இருந்திருக்கும். எங்க வாழ்க்கை இன்னும் மோசமா இருந்திருக்கும்.

கொலை பண்றது ரைட்டா தப்பான்னு கேட்டா தப்புதான். ஆனால், கெட்டவங்களை கொல்றது ஒன்னும் தப்பில்லே. எங்கப்பா கெட்டவர். எங்கம்மாவைப் பத்தி

கவலைப்படாதீங்க. எப்பவுமே நான் உங்க பக்கம் இருக்கேன் நீங்க எனக்கு அப்பாவா இருங்க கதிரேசன்" என்று அவள் கைகளைச் சேர்த்துக் கொண்டாள்.

கதிரேசன் அந்த மூன்று வயதுக் குழந்தையை மெல்ல தழுவிக் கொண்டான். நெற்றியில் முத்தமிட்டான். மடியில் வைத்து இறுக்கிக் கொண்டான்.

"இது போதும் திவ்யா. உங்க அம்மா கேட்டவுடனே பகீர்னு ஒரு பயம் வந்தது. அப்பப்போ மறுபடியும் ஒரு பூதம் கிளம்புதேன்னு.

இப்போ உங்கம்மா இதோடு போதும் விலகிக்கிறேன் அப்படின்னு சொன்னாக் கூட நான் விலகிப் போயிருவேன் நீ என் பக்கம் இருக்கே என்னை புரிஞ்சுக்கிட்டிருக்கேன்னு ஒரு சந்தோஷம் எனக்குப் போதும்.

உங்கம்மாட்ட சொல்லு. ஒருவேளை அவள் வேற எங்கேயாவது போகணும்னா அல்லது நான் இந்த வீட்டை விட்டு போகணும்னு நினைச்சா உடனடியா பண்ணிடலாம். என்ன செய்யணும்னு உங்கம்மாகிட்ட கேட்டு சொல்லு" என்று கதிரேசன் சொன்னான். எழுந்து வெளியே போனான்.

"ஒரு நிமிஷம்" நிர்மலா எழுந்தாள். "என்னால் இந்த குழப்பத்திலிருந்து வெளியே வர முடியவில்லை. அதே சமயம் வர வேண்டும் என்றும் தோன்றுகிறது. உங்களை விடுவதற்கு மனதில்லை. ஒரு பக்கம் ஒட்டிக் கொண்டு வாழ வேண்டுமென்று தோன்றினாலும் இன்னொரு பக்கம் ஒருமுறை ஏமாந்தது மிகப் பெரிய வலியை, வேதனையை, கோபத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறது.

மறுபடியும் யார் ஏமாற்றினாலும் ஏமாற்றாது போனாலும், ஏமாற்றி விட்டாயே என்று முதல் தடவை உண்டான கோபத்தை இரண்டாம் ஆளிடம் காட்ட வேண்டுமென்று ஆத்திரம் வருகிறது.

நான் முட்டாள். உள்ளுக்குள் ஒரு மூர்க்கம் திசை தெரியாமல் அலைகிறது. என்னால் அதை எப்படி கட்டுப்படுத்திக் கொள்வது என்று தெரியவில்லை.

இந்தக் குழந்தை முதல் தகப்பனை முற்றிலும் மறந்துவிட்டு, உங்களை தகப்பனாய் ஏற்றுக் கொண்டு விட்டாள். என்னால் முதல் கணவனை முற்றிலும் மறந்து விட்டு உங்களை முழுவதுமாய் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. பழகின ஞாபகம் என்னை வதைக்கிறது. சித்ரவதை செய்கிறது. திடீர் திடீரென்று கலவரத்தை கொடுக்கிறது. பிசாசு வசப்பட்டவள் போல் அவ்வப்போது



நான் பயந்தும், கோபத்திலும் அலறுகிறேன். எல்லோரையும் சந்தேகிக்கிறேன். என் முட்டாள் தனத்தை பொறுத்துக் கொள்ள வேண்டும். மெல்ல மெல்ல நீங்களும் திவ்யாவும் என்னை மாற்ற வேண்டும். என்னுடைய தழும்புகள் மிக ஆழமானவை என்பதை புரிந்து கொள்ள வேண்டும்" என்று அவள் சொன்னாள்.

அவன் அருகே போய் அவள் தோளில் கை வைத்தான். தலையைத் தடவினான். அவள் முகத்தை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள். குழந்தை அருகே போய் நின்றது.

"நாங்க இருக்கிறோம்மா. ஏன் கவலைப்படறே" என்று சொன்னது.

அவள் உடம்பு ஆடுவது தெரிந்தது. அவள் மெல்ல தரையில் உட்கார்ந்தாள். முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழத் தொடங்கினாள். கதிரேசனும் திவ்யாவும் அவளை அணைத்துக் கொண்டார்கள்.

"ஹை ஜம்ப், லாங் ஜம்ப் இரண்டும் மூணு தடவை வாய்ப்புத் தருவா. முதல் தடவை ஜம்ப் பண்றது உன்னுடைய பலத்தை நிரூபிக்க. இரண்டாம் தடவை ஜம்ப் பண்றது அந்த பலத்தை விட அதிகமான பலம் உனக்குள் இருக்கிறதை நீயே கண்டுபிடிச்சு வெளியே கொண்டு வர. மூணாம் தடவை இதுதான் வாழ்க்கையில் கடைசி சான்ஸ். ஏதாவது பண்ணி ஜம்ப் பண்ணியாகணும் அப்படின்னு ஒரு உத்வேகமாப் போராடுவது.

உனக்கு இரண்டாவது சான்ஸ் கிடைச்சிருக்கு. மூணாவதா ஒன்னு இருக்கும். அது என்ன தெரியுமா இந்த இரண்டாம் கல்யாணம் முடிஞ்சு தனியா இருக்கப் போற பார் அதுதான் மூணாம் கல்யாணம். தனிமையை கல்யாணம் பண்ணிக்கப் போற பார் அதுதான் முக்கியமான கல்யாணம். வாழ்க்கையில் எல்லாருக்குமே மூணு ஸ்டேஜ் இருக்கு. மூணு விதமான பிரிவுதான் வாழ்க்கை அடங்கி இருக்கு. அதனால இப்படி பேசிட்டமே அப்படி பேசிட்டமேன்னு பயப்படாது சர்வசாதாரணமா இரு. உன்னையும் என்னையும் விட இந்த குழந்தை தெளிவா இருக்கா. அவளால் இன்னும் நல்லபடியா யோசிக்க முடியும்.

இரண்டாம் கல்யாணம் நல்லபடியா தாண்டினாதான் மூணாம் கல்யாணம் சந்தோஷமா இருக்க முடியும். மூணாம் கல்யாணம் சந்தோஷமா இருந்தாத்தான் மரணம் அமைதியா இருக்கும். அதனால இந்த கல்யாணத்தை முழுபலத்தோட

கிரமமேயட தாண்டறதுக்கு ட்ரை பண்ணு. பயப்படாதே வெளியே போய் சாப்பிடலாம் வா."

அவர்கள் மூவரும் வீட்டை பூட்டிக் கொண்டு இறங்கினார்கள். உள்ளே டெலிபோன் மணி அடிக்கத் துவங்கியது. சற்று நேரம் நின்று கதவை திறக்கலாமா என்று பார்த்தார்கள். பூட்டில் கை வைத்ததுடன் டெலிபோன் மணி நின்று விட்டது. அவர்கள் மறுபடியும் இறங்கி. காரில் ஏறி வெளியே போனார்கள்.

அந்த பெங்காலி நண்பன். மறுபடியும் போன் செய்தான் மீண்டும் மணி அடித்துக் கொண்டிருந்தது.

'போலீஸ்காரங்க அந்த பத்திரிகையை ரெய்ட் பண்ணிட்டாங்க. தப்புத் தப்பா நாவல் கொடுத்தா அந்த கட்டுரை எழுதினவன் மேல் கேஸ் போட்டிருக்காங்க என்று சொல்லலாமென்று பார்த்தால் முடியவில்லையே. ஆனால் சொல்லாம இருக்கிறதே நல்லது. அவங்க கனகசபாபதின்னா யாருன்னு கேட்பாங்க. சத்தமா மறந்திருப்பாங்க. இந்த கட்டுரையெல்லாம் தமிழ்நாட்டில் படிப்பாங்களா என்ன ஒண்ணும் சொல்ல வேண்டாம்' என்று தனக்குத்தானே பேசிக் கொண்டான்.

"சில பேருக்கு பிரச்சினை வராதே தெரியலே. அது அவங்க வீட்டுப் பக்கமா போகாம அடுத்த தெரு பக்கமா போயிருது" என்று சொல்லி உரக்கச் சிரித்தான்.

பிரச்சினை வந்ததும் இவர்கள் சமாளித்ததும் அந்த வீட்டில் உள்ளவர்களை தவிர வேறு யாருக்கும் தெரியவில்லை. தெரியப்போவதும் இல்லை.

முற்றும்

கதை, கவிதை மற்றும் கடிதப் போக்குவரத்து, டிடி. அல்லது எம்.ஓ. இவைகளை SREE AISHWARYA PUBLICATION பல்சுவை நாவல், 29, நைனான் தெரு, அபிராமபுரம், சென்னை-600 018. என்ற நிர்வாக அலுவலக முகவரிக்கே அனுப்பவேண்டும்.

போன் : 4614779 ஆசிரியர் : பொன்.சந்திரசேகர்

Owner & Published by M.P. Chandra Sekaran at 50/1, Pycrafts Road, 1st Street, Royapettah, Chennai -14. and Printed by M.P.Chandrasekaran at Wonder Printers, 14, Weavers Street, Triplicane, Chennai -5.

Editor: Pon. Chandrasekar



இப்போது விற்பனையில்

க்ரைம் ஸ்டோரி

இந்திரா சௌந்தர்ராஜன் எழுதும்

காண்பதெல்லாம் உண்மை!

புதிய மர்ம நாவல்

